எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013









## வட மாகாண சபைத் தேர்தல் பற்றிய சர்ச்சைகள்

- நியாயப்படுத்த முடியாத காணி சுவீகரிப்பு
- அசாத் சாலி கைதும் விடுதலையும்
- ஐ.பி.எல். அசிங்கம்
- நவாஸ் ஷெரீப் சீர்செய்ய வேண்டிய குறைபாடுகள்
- ஜெயலலிதாவின் ஆக்ஷன் பிளான்
- மலேசியாவில் தீவிரமடையும் இனத்துவ அரசியல்



## அஞ்சலீனா ஜோலி செய்தது அவசியமற்ற சிகிச்சையா?

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

# New City Motors
## Link Lanka

இலவசம்
மீட்டர் டெக்சி
Board, Sticker

தவணைக் கொடுப்பனவு முறையிலும்
Link Meterஐ கொள்வனவு செய்யலாம்.
(வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மாத்திரம்)

| ஆரம்ப கட்டணம் | தவணை | தவணை எண்ணிக்கை |
|---|---|---|
| 3,500/= | 1,580/= | 8 |
| 4,500/= | 1,380/= | 8 |
| 5,000/= | 1,285/= | 8 |

ஆரம்ப கட்டணம் ரூ.5000 ம் செலுத்தி ஒரு மாதத்தில் ரூ.7000 செலுத்த வேண்டும்

**ஒரே முறையில் செலுத்துவதாயின் ரூ.11,750/- மட்டுமே**

முச்சக்கர வண்டியின் உரிமை தங்களுக்கே இருப்பின் 07 தவணையில் செலுத்த முடியும்

தவணை முறையில் செலுத்த மீட்டரை கொள்வனவு செய்வதற்கு புத்தக பிரதி, தேசிய அடையாள அட்டையின் பிரதி, பிணையாளரும், அவரது தேசிய அடையாள அட்டையின் பிரதியும் தேவைப்படும்.

ஒரே முறையில் செலுத்தி மீட்டரை கொள்வனவு செய்ய மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் அவசியமில்லை.

உங்கள் முச்சக்கர வண்டிக்கு
மீட்டர் பொருத்திக்கொள்வதற்கு
இப்போதே அழையுங்கள்


Hotline:
0724 990 990
0722 909 909



## New City Motors
உலகில் உற்பத்தியான
சிறந்த முச்சக்கர வண்டி மீட்டர் LINK LANKA

**Head Office**
# 181, Araamiya Place, Dematagoda, Colombo - 09
**Branches**
Dematagoda, Wattala, Kadawatha, Galle, Ambalangoda, Batticaloa

Office: 0112 690 744
Galle : 0114 345 960 - 4
0114 345 962



எம்முடன் இணைந்து உலகை காண வாருங்கள்
Your journey may be an excursion or a business trip or any other, Our ambition is to reduce your travel expenses.
எமது சேவைகள்
Flight Reservations & Ticket Issuance
Assistance in obtaining VISA
Travel Insurance
Travelers Cheque
Hotel Package
Additional Services
Hotline : 0714 748 748
KEY TRAVELS (PVT)LTD
IATA
ACCREDITED AGENT
# 136/1, Main Street, Colombo 11, Sri Lanka.
Tel : 5331124, 2325994, 2432801 Fax : 5331125
E-mail : keytrav@sltnet.lk, www.keytravelslk.com
: facebook.com/keytravelslk
See The World With Us




இராணுவமயமாக்கலும் நில அபகரிப்பும்
- குசல் பெரேரா

# சமகாலம்

2013, மே 16 - 30

**10** வடக்கில் தேர்தலை நடத்தாவிட்டால்....
- கலாநிதி தயான் ஜெயதிலக




மரபணுச்சோதனையும் மார்புச் சீரமைப்பும் சாதாரண மக்களுக்கு சாத்தியமா?
- டாக்டர் எம்.கே. முருகானந்தன்

**42** ஐ.பி.எல். அசிங்கம்
-எம்.பி.வித்தியாதரன்

**47** ஐ.பி.எல். போட்டிகளை சீர்குலைக்க பாகிஸ்தானியர் சதி?
- ரி.எஸ்.கணேசன்

**56** மலேசியாவில் தீவிரமடையும் இனத்துவ அரசியல்




அண்ணா தி.மு.க.வின் மூன்றாவது வருட 'ஆக்ஷன் பிளான்'
- எம்.காசிநாதன்




அசாத் சாலி கைதும் விடுதலையும்
- மனோ கணேசன்

**36** அசாத் சாலியின் கைது ஏற்படுத்திய அரசியல் தாக்கம்
- எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.




நவாஸ் ஷெரீப் சீர்செய்ய வேண்டிய மூன்று பெரிய குறைபாடுகள்

**17**
நியாயப்படுத்த முடியாத காணி சுவீகரிப்பு
-கலாநிதி ஜெஹான் பெரேரா




பாதுகாப்புப் படைகளுக்காக தனியார் காணியை எடுத்தல் சரியானதா?
- க.குருநாதன்

**40** தேவை சுயபரிசோதனை
- என்.சத்தியமூர்த்தி

**26** வடக்கில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வெற்றிக்கு தமிழர் வாக்களிக்க வேண்டும்
- குமார் டேவிட்




கடைசிப் பக்கம்
சரோஜா சிவச்சந்திரன்

*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

ஆசிரியரிடமிருந்து...

# போர் வெற்றிக் கொண்டாட்டங்கள்

இலங்கையின் சுமார் மூன்று தசாப்த கால உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்து நான்கு வருடங்கள் நிறைவு பெற்றுவிட்டன. போரின் இறுதிக் கட்டத்தில் வன்னியில், குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரையோரத்தில் இலங்கை அதுகால வரை கண்டிராத அவலங்களை அனுபவித்த மூன்று இலட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்கள் வவுனியா அகதி முகாம்களில் குவிந்து கொண்டிருந்த வேளையில் தென்னிலங்கை ஆரவாரமாகக் கொண்டாட்டங்களில் மூழ்கியிருந்தது. இன்னமும்கூட கொண்டாட்டங்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. அரசாங்கம் அப்போது அறிவித்ததன் பிரகாரம் ஒவ்வொரு வருடமும் (மே 18) போர் வெற்றித் தினம் தேசிய நிகழ்வாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. நான்காவது வருட நிறைவிலும் தேசியக் கொண்டாட்டம் தலைநகரில் காலிமுகத்திடலில் பெரும் பொருட்செலவில் பிரமாண்டமான படை அணி வகுப்புகளுடன் இடம்பெற்றது.

இலங்கைப் படைகள் இன்னொரு நாட்டின் படைகளைப் போரில் தோற்கடிக்கவில்லை. அதிகாரத்தில் இருந்த அரசாங்கங்கள் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் இணக்கத் தீர்வைக் காணத்தவறியதன் விளைவாக வடக்கு, கிழக்கில் தோன்றிய தமிழ்த் தீவிரவாத இயக்கங்களில் இறுதிவரை ஆயுதப் போராட்டத்தைக் கைவிடாமல் சண்டையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த ஒரு இயக்கமே தோற்கடிக்கப்பட்டு அதன் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசங்கள் அரசாங்கப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந்தப் போர் உண்மையில், இந்தியா உட்பட பல வெளிநாடுகளின் உதவியுடன் அரசாங்கத்தினால் அதன் சொந்தப் பிரஜைகளில் ஒரு பிரிவினருக்கு எதிராகவே நடத்தி முடிக்கப்பட்டது.

தொடர்ந்து கொண்டாட்டங்களை நடத்துவது போருக்குப் பின்னரான இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை உருவாக்குவதற்கு குந்தகமாகவே அமையும் என்று வெளிப்படுத்தப்பட்ட கருத்துகளுக்கு தங்கள் எதிர்வினையைக் காட்டியவர்கள் பயங்கரவாதக் கொடுமைகளினால் மூன்று தசாப்தங்களாகப் பெரும் அழிவுகளையும் அவலங்களையும் சந்தித்த இலங்கை மக்கள் அந்தப் பயங்கரவாதத்தின் தோல்வியைக் கொண்டாடுவதற்கு முற்றிலும் அருகதையும் உரிமையும் உடையவர்கள் என்ற வாதத்தை முன்வைத்தார்கள்.

*(16ஆம் பக்கம் பார்க்க...)*



# கடிதங்கள்













## பத்மாவின் பொறுமை இழப்பு



நூல் வெளியீடும் நுகர்வோர் அவதிகளும் என்ற தலைப்பில் பத்மாசோமகாந்தன் எழுதிய கடைசிப்பக்கக் கட்டுரையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துகள் அவர் நூல் வெளியீட்டு நிகழ்வுகளில் எவ்வளவு பொறுமை இழந்தவராக இருந்துவந்திருக்கிறார் என்பதைக் காட்டுகிறது.

**சரவணன் ரமேஷ், கல்வியங்காடு.**

## ஏன் எழுதுவது இல்லை?



சமகாலத்தின் ஆரம்ப இதழ்களில் இலங்கை அரசியல் நிலைவரங்கள் குறித்து கனதியானதும் சிந்தனையைத் தூண்ட வல்லமையுமான கட்டுரைகளை எழுதிய நோர்வேயில் வாழும் பேராசிரியர் என்.சண்முகரத்தினம் கனடாவில் வாழும் ராஜன் பிலிப்ஸும் ஏன் தற்போது எழுதுவதில்லை?

அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் அகதிகள் பற்றிய கலாநிதி சந்திரிகா சுப்ரமண்யனின் கட்டுரை மூலம் பல தகவல்களை அறியக்கூடியதாக இருந்தது. புலம்பெயர்ந்த இலங்கையர்களிடமிருந்து, குறிப்பாக பத்திரிகையாளர்களிடமிருந்து ஆக்கங்களைப் பெற்று சமகாலம் பிரசுரித்தால் பயனுறுதியுடையதாக இருக்கும்.



**கேசவன் குருசாமி, கரவெட்டி.**

## மாணவருக்கு வரப்பிரசாதம்

அரசியல் விஞ்ஞானம் கற்கும் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது சமகாலம், உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிகழ்வுப்போக்குகளைப் பற்றி எந்தவித பரபரப்பூடலுமின்றி மிகவும் நிதானமாக ஆய்வுத் தன்மையுடனான கட்டுரைகளை சமகாலம் பிரசுரித்துவருவது பெரும் பயனுடையதாக இருக்கிறது. நான் ஒரு அரசியல் விஞ்ஞான ஆசிரியன். எனது மாணவர்களுக்கு சமகாலம் இதழைத் தவறாமல் வாசிக்குமாறு சிபாரிசு செய்திருக்கிறேன். சமகாலத்தின் கனதியான பணி தொடர வாழ்த்துக்கள்

**சிவரூபன் கார்த்தி, சிலாபம்.**

## சத்தியமூர்த்தியின் கருத்துக்கள்

என்.சத்தியமூர்த்தி வெளியிட்டு வருகின்ற கருத்துக்களைப் பார்த்தால் சிங்கள அரசியல் சமுதாயத்திடம் இருக்கும் தவறான நிலைப்பாடுகளையும் சிறுபான்மை இனத்தவர்கள் அனுசரித்து நடக்க வேண்டும் என்று அவர் ஆலோசனை கூற வருவது போல் இருக்கிறது.

**எஸ்.காந்தன், மட்டுநகர்.**

## இஸெத் ஹுசெய்னின் கருத்து


இனப்பிரச்சினைகளை இனவெறியின் விளைவுகளின் அடிப்படையில் விளங்கிக் கொண்டால் தான் மிகவும் பயனுடைய வகையில் அவற்றை கையாண்டு உருப்படியான தீர்வுகளை காணக்கூடியதாக இருக்கும் என்று முன்னாள் ராஜதந்திரி இஸெத் ஹுசெய்ன் தனது கட்டுரையில் தெரிவித்த கருத்து அருமை.

**எம்.பாலா, திருகோணமலை.**

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

## குறைந்தபட்ச நேர்மையாவது இருந்தால்...





பேராசிரியர் ரஜீவ விஜேயசிங்க இலங்கை அரசாங்கம் வெளியுறவுக் கொள்கையை சரிவரக் கையாளவில்லை என்று தனது கட்டுரையில் குறைபட்டுக்கொள்கிறார். உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததற்கு பிறகு ஒரு குறிப்பிட்ட காலம் வரை இவரும் வேறுபல சிங்களப் புத்தி ஜீவிகளும் (தயான் ஜெயதிலக முக்கியமானவர்) இதே ராஜபக்ஷ அரசாங்கத்தின் கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் நியாயப்படுத்துகின்ற கொந்தராத்தை எடுத்துக்கொண்டவர்கள்.

அரசாங்க உயர் மட்டத்தின் கொள்கைகளை மாற்றியமைக்கத் தங்களால் முடியுமென்று (தங்களைப் பற்றியே மிகையான) எண்ணத்தைக் கொண்டிருந்த இவர்கள் இப்போது அரசாங்கம் சர்வதேச சமூகத்தைக் கையாளுவதில் பிழையாக நடந்து கொள்கிறது என்ற குற்றச்சாட்டை முன்வைக்கிறார்கள். சர்வதேச சமூகத்துடனான அணுகுமுறைகளை அரசாங்கம் தவறாகக் கையாளுவதற்குக் காரணமே அதே சர்வதேச சமூகம் இலங்கை மீது நெருக்குதல் கொடுப்பதற்கான அடிப்படைக் காரணியாக அமைகிற தேசிய இனப்பிரச்சினையில் சரியாக நடந்து கொள்ளாமையாகும்.

உள்நாட்டில் சிறுபான்மை இனங்களை கௌரவமான முறையில் நடத்தி, அவர்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளைப் புரிந்து கொண்டு உகந்த அரசியல் தீர்வைக் காண்பதே சகல பிரச்சினைகளில் இருந்தும் கொழும்பு விடுபடுவதற்கு இருக்கக்கூடிய ஒரே மார்க்கம் என்பதை அரசாங்கத் தலைமைத்துவத்துக்கு உருப்படியாக உணர்த்தக்கூடிய அருகதை தங்களிடம் இல்லை என்பதை பேராசிரியர் விஜேசிங்கவும் தயான் ஜெயதிலகவும் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அரசாங்கத்தின் நியாய துரந்தர்கள் போன்று செயற்பட்ட காலகட்டத்தில் தாங்கள் சர்வதேச சமூகத்துக்கு எடுத்துணர்த்த முயன்றது என்ன என்பதை இப்போதாவது பேராசிரியர் விஜேயசிங்கவும் கலாநிதி ஜெயதிலகவும் பகிரங்கமாகக்கூற முன்வந்தால் அவர்களிடம் குறைந்தபட்ச நேர்மையாவது இருக்கிறது என்று நம்ப இடமிருக்கிறது.

**கதிரேசன் கமலக்கண்ணன், கோப்பாய்.**




**இருவாரங்களுக்கு ஒருமுறை**

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 22

**2013, மே 16 - 30**

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம்.
யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல்.
- மாஓ சேதுங்

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

# வாக்குமூலம்....

இலங்கையர்கள் சுமார் 4000 வருடங்களுக்கு முன்னரே இரும்பைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கு அகழ்வாராய்ச்சி சான்றுகள் இருக்கின்றன. இந்தியாவில் இருக்கக்கூடிய வரலாற்றுப் பதிவுகள் 3000 வருடங்கள் வரையிலான வையாகவே இருக்கின்றன. இந்திய நாகரீகம் அப்போது செப்பு தொழில்நுட்பத்தை மாத்திரமே அறிந்ததாக இருந்தது. எமது மூதாதையர்கள் எவ்வளவோ மேம்பட்டவர்கள்.



வீடமைப்பு அமைச்சர் விமல்வீரவன்ச

இராணுவத் தலைமையகத்திற்குள் வைத்து என்னைக் கொலை செய்வதற்கு மேற்கொள்ளப் பட்ட தற்கொலைக்குண்டுத் தாக்குதல் தொடர்பாக என்னிடம் வாக்குமூலத்தைப் பெறுவதற்கு இரகசியப் பொலிஸார் ஏன் 7 வருடங்கள் காத்திருந்தார்கள்? என்னிடம் வந்த இரகசியப் பொலிஸாரிடம் தற்போதைய தருணத்தில் வாக்குமூலம் பெறுவது தொடர்பில் எனக்கு பலத்த சந்தேகம் எழுவதாகக் கூறினேன். என்னைக் கொல்வதற்கு மேற் கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னணியில் பெரிய சதித் திட்டம் இருந்தது.



சரத்பொன்சேகா

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அமெரிக்க ஆதரவுக் கொள்கை காரணமாகவே இலங்கையில் பிரிவினைவாதிகளின் திட்டத்துக்கு இந்தியா உதவிசெய்தது. அடுத்தது இந்தியா இலங்கைக்குள் படைகளை அனுப்பியது. எம்மை ஆக்கிரமிக்க வெளிநாட்டுச் சக்திகள் முயற்சிக்கின்றன என்று கூச்சல் போடுபவர்கள் 1980களில் இந்தியாவும் ஆக்கிரமிக்க முயற்சித்தது என்று கூற முன்வருவதில்லை.



ஜே.வி.பி.தொழிற்சங்கத் தலைவர்
கே.டி.லால் காந்த

நாட்டின் ஒன்பது மாகாணங்களில் எட்டு மாகாணங்களுக்கு தேர்தல்கள் நடத்தப் பட்டு வந்திருக்கின்றன. எஞ்சியிருக்கும் ஒரு மாகாணத்துக்கு தேர்தலை நடத்தினால் அது எவ்வாறு அரசியலமைப்பிற்கு விரோதமானதாக அமையும்? வடமாகாண சபைக்குத் தேர்தலை நடத்துவது நாட்டு நலன்களுக்கு விரோதமானதாக அமையுமானால் அதை முறியடிப்பதற்கு முன்னணியில் நின்று நான் போராட்டம் நடத்துவேன். நாட்டுப்பற்று மீது விமல்வீரவன்சவுக்கு ஏக போகம் இருக்க முடியாது. நாங்களும் நாட்டுப் பற்றாளர்களே, நாமும் தாய்நாட்டை நேசிக்கிறோம்.



ஐ.தே.க.எம்.பி சஜித் பிரேமதாச

1988 ஆம் ஆண்டு முதல் நாட்டின் ஏனைய மாகாண மக்கள் அனுபவித்து வருகின்ற உரிமைகளை வட மாகாண மக்கள் அனுபவிக்காமல் இருக்க இனிமேலும் நாம் அனுமதிக்கக்கூடாது. ஏன் அவர்களுக்கு அந்த உரிமையை நாம் நிராகரிக்க வேண்டும்? வடமாகாண சபைக்குத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். யார் வெற்றி பெற்றாலும் அவர்கள் அந்த மாகாண சபையை நிருவகிக்க அனுமதிக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.




சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர

இலங்கையர்கள் சர்வஜனவாக்குரிமையை 1931 ஆம் ஆண்டில் பெற்றபோதிலும், 1948 பெப்ரவரியில் சுதந்திரத்தைப் பெறுவதற்கு முன்னதாக மூன்று பொதுத்தேர்தல்கள் நடத்தப்பட்டபோதிலும், இன்னமும் கூட எமது நாட்டில் முன்னேற்றகரமான வாக்களிப்பு முறையொன்று நடைமுறையில் இல்லை.



தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய

தடுப்புக்காவலில் இருந்து விடுதலை செய்யப்பட்ட அசாத்சாலி பூனைக்குட்டி போன்று மௌனமாக இருக்கிறார். அவரை மீண்டும் கைது செய்ய வேண்டுமென்று நாம் நினைக்கிறோம். அவர் வழங்குகின்ற ஒவ்வொரு பேட்டியிலும் பொதுபல சேனாவை கண்டிப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்.



பொதுபலசேனா பொதுச் செயலாளர்
கலபொடஅத்த ஞானசார தேரர்

செய்தி ஆய்வு

# அசாத் சாலியின் கைது கிளப்பிய முக்கிய கேள்வி



முஸ்லிம் அரசியல்வாதி அசாத் சாலி அண்மையில் கைதுசெய்யப்பட்டபோது அவர் முஸ்லிம் மக்களை அரசாங்கத்துக்கு எதிராக வன்முறையில் இறங்க வேண்டுமென்று தூண்டியதால் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக விளங்கினார் என்று அரசாங்கப் பேச்சாளர் காரணம் கூறியிருந்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் அசாத்சாலி கைது செய்யப்பட்டதை நியாயப்படுத்துவதற்கு சென்னையில் இருந்து வெளியாகும் ஜூனியர் விகடன் சஞ்சிகைக்கு அவர் அளித்த பேட்டியொன்று சான்றாகக் காட்டப்பட்டது. முஸ்லிம்கள் ஆயுதமேந்திப் போராட வேண்டுமென்று அவர் அழைப்பு விடுத்ததாக அரசாங்கத் தரப்பினால் குற்றஞ்சாட்டப்பட்டது.

இரகசியப் பொலிஸாரினால் அவர் கைதுசெய்யப்பட்டதும் வெகுதுரிதமாகவே பயங்கரவாதச் தடைச்சட்டத்தின் கீழ் அவரைத் தடுத்துவைத்திருப்பதற்கான உத்தரவு பெறப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. அரசாங்கத்துடன் தொடர்புடையவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடுகிற சந்தர்ப்பங்களிலும் பொலிஸார் இந்தளவு துரிதமாகவும் செயற்திறனுடனும் நடந்துகொண்டால் இந்த நாடு ஒரு சிறந்த பூமியாக எப்போதோ மாறியிருக்கும்.

அதுபோக, சென்னை சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தான் கூறியதாகத் தெரிவிக்கப்பட்ட விடயங்களை மறுதலித்து அசாத்சாலி ஒரு சத்தியக் கடதாசியை சமர்ப்பித்த உடனடியாகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உகண்டாவுக்கு புறப்படும் முன்னதாக தடுப்புக்காவல் உத்தரவை ரத்துச்செய்துவிடுதலை செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அசாத்சாலியைக் கைதுசெய்யமுன்னர் அவ



ருக்கு எதிரான குற்றச்சாட்டை பொலிஸார் ஏன் முறையாகப் பரிசீலனை செய்யவில்லை என்ற கேள்வி இங்கு எழுகிறது. அரசியல் நோக்கத்துக்காகவே அவர் கைதுசெய்யப்பட்டார் என்று பரவலாகச் சந்தேகிக்கப்பட்டது. இறுதியில் அதுவே உண்மை போலவும் தோன்றுகிறது.

அசாத்சாலி விடுதலை செய்யப்பட்டதை வரவேற்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எதிரணிக்கட்சிகளின் நெருக்குதல்கள் காரணமாகவே அரசாங்கம் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று என்று பெருமைப்பட்டுக் கொண்டார். விக்கிரமசிங்க கூறுவது உண்மையானால் சாலி ஏன் சத்தியக்கடதாசியைச் சமர்ப்பிக்க வேண்டியேற்பட்டது? நிபந்தனையின்றி விடுதலை செய்யப்படும் வரை அவர் ஏன் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது?

அசாத்சாலி விடயத்தில் அரசாங்கத்தை பின்வாங்கச் செய்யக்கூடிய அளவுக்கு எதிரணி பலம்பொருந்தியதாக இருக்கிறதென்று எதிர்க்கட்சித் தலைவரும் அவருடன் இணைந்து நிற்பவர்களும் நினைக்கின்றார்கள் என்றால், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தங்களால் எதிரணியின் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்ட முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டபோது அவரை விடுவிக்க அதே எதிரணியின் பலத்தைப் பயன்படுத்தி அரசாங்கத்துக்கு ஏன் நெருக்குதலைக் கொடுக்க முடியாமற் போனது? பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிரான குற்றப் பிரேரணையை ஏன் தடுக்க முடியாமற் போனது?

அசாத்சாலி விவகாரத்தில் இன்னொரு முக்கியமான அம்சத்தை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. முஸ்லிம்களை வன்முறையில் இறங்குமாறு, ஆயுதமேந்துமாறு அசாத்சாலி தூண்டினார் என்பதற்காகத்தான் அவர் கைதுசெய்யப்பட்டாரென்றால், முஸ்லிம்களுக்கு எதிராக அண்மைக்காலமாக பகிரங்கமாக வன்முறையைத் தூண்டுகிற அரசியல் நடவடிக்கைகளில் இறங்கியிருக்கிற பொதுபலசேனாவைச் சேர்ந்த பிக்குமாரையும் அவர்களின் ஆதரவாளர்களையும் ஏன் அதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ய அரசாங்கம் முன்வரவில்லை என்ற கேள்வி எழுகிறது.

இக்கேள்வியை ஆங்கில பத்திரிகைகளில் சாலி கைது விவகாரம் பற்றி எழுதிய பெரும்பான்மையினத்தைச் சேர்ந்தவர்களே கிளப்பினார்கள். உதாரணத்துக்கு கலாநிதி தயான் ஜெயதிலகவையும் பேராசிரியர் லக்சிறிபெர்னாண்டோவையும் குறிப்பிடலாம். ■

# ஊழலுக்குள் ஊழல்



உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல். எம் அதாவுல்லா அமைச்சரவையில் ஒரு பிரேரணையை அண்மையில் முன்வைத்தார். மாகாண சபை உறுப்பினர்களுக்கு மாத்திரமல்ல, ஏற்கனவே மாகாண சபை உறுப்பினர்களாக இருந்து தற்போது மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கும் கூட, தீர்வையின்றி வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பத்திரம் வழங்க வேண்டும் என்பதே அந்த யோசனை.

அதை அமைச்சரவை உடனடியாகவே எந்தவிதமான தயக்கமும் இன்றி அங்கீகரித்தது. ஏற்கனவே அமைச்சரவை குறைந்தபட்சம் 30 மாதங்கள் மாகாணசபை உறுப்பினர்களாக இருந்தவர்களும் தீர்வையின்றி வாகனங்கனை இறக்குமதி செய்வதற்கான அனுமதியை வழங்கியது.

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்து மாகாணசபை முறையை இல்லாமற் செய்ய வேண்டும் என்று உரத்துக் கூச்சல் போட்டுக்கொண்டிருக்கிற அமைச்சர் பெருமக்களான விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் கூட இந்தத் தீர்வையற்ற வாகன இறக்குமதி அனுமதியை எதிர்க்கவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை தீர்வையின்றி வாகனத்தை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுகிறது. அத்துடன் 50 ஆயிரம் டொலர்களும் அவர்களுக்கு கடனாக வழங்கப்படுகிறது.

ஆனால் இந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரங்களை பெரும் பணத்துக்கு விற்றுவிடுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு அனுமதிப்பத்திரத்தின் விலை ஒரு கோடி 20 இலட்சம் ரூபா தொடக்கம் ஒருகோடி 50 இலட்சம் ரூபாவரை செல்கிறது. இது உண்மையில் ஊழலுக்குள் ஊழல், அத்துடன் அப்பட்டமான குற்றச் செயல். வானளாவ உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியா

செய்தி ஆய்வு



மல் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு பெரும் போராட்டத்தை நடத்திக் கொண்டிருக்கும் அப்பாவி மக்களின் வரிப்பணத்தில் மோசடித்தனமாக சுக போகம் அனுபவிக்கும் கூட்டத்தினரில் இப்போது முன்னாள் மாகாணசபை உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்திருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குக் கிடைக்கும் தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரத்தை விற்பனை செய்து பெரும் இலாபம் சம்பாதிப்பதற்கும் இப்போது அரசாங்கம் அனுமதிக்கிறது. அந்த 'அட்டகாசமான' சலுகை இனிமேல் அனுமதிப்பத்திரத்தைப் பெறப் போகும் மாகாணசபை உறுப்பினர்களுக்கும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் விஸ்தரிக்கப் படுமா? ■

# சபை நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு யோசனை



அண்மையில் பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் 'பாராளுமன்றமும் பத்திரிகையும்; பயனுறுதியுடைய உறவுமுறையைக் கட்டியெழுப்புதல்' என்ற தலைப்பில் பாராளுமன்ற செய்தியாளர்களுக்கான கருத்தரங்கொன்று நடத்தப்பட்டது.

அதில் உரையாற்றிய சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்புச் செய்வது தொடர்பில் தான் அக்கறையுடன் பரிசீலனை செய்துவருவதாகத் தெரிவித்திருந்தார். அவரது இக்கருத்து அக்கருத்தரங்கில் கலந்துகொண்டவர்களினால் மாத்திரமல்ல வெளியிலும் வரவேற்கப்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

பாராளுமன்ற நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்பினால், மக்கள் தங்களது பிரதிநிதிகள் எவ்வாறு சபைக்குள் செயற்படுகிறார்கள் என்பதை நேரிடையாக தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். அத்துடன் மக்கள் தங்கள் நடத்தைகளைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள் என்பதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள் மிகுந்த கண்ணியமாக நடந்துகொள்ள முயற்சிப் பார்கள் என்பதே இந்த நேரடி ஒளிபரப்பு யோசனைக்கு ஆதாரமாக முன்வைக்கப்படும் நியாயப்படுத்தலாகும்.

இங்கு ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. தங்கள் பிரதிநிதிகள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வாக்காளப் பெருமக்கள் பாராளுமன்ற நடவடிக்கைகளின் நேரடி ஒளிபரப்புகளைத் தான் பார்க்க வேண்டுமா? எமது மக்கள் பிரதிநிதிகள் எனப்படுபவர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்தாலென்ன, மாகாண சபைகளின் உறுப்பினர்களாக இருந்தாலென்ன, உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களாக இருந்தாலென்ன அவர்கள் சபைக்குள் மாத்திரமல்ல, வெளியிலும் கூட பெருமளவுக்கு அடாவடித்தனமாகவே நடந்துகொள்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

பழி பாவத்துக்கு அஞ்சாதவர்களாகவே சமுதாயம் இன்று அரசியல்வாதிகளை நோக்குகிறது. பாராளுமன்ற நடவடிக்கைகளை தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்தால், சிலவேளை, பெற்றோர் தங்கள் பிள்ளைகள் குறிப்பாக, பாடசாலை செல்லும் வயதில் உள்ள பிள்ளைகள் பார்க்கக்கூடாத நிகழ்ச்சியாக பாராளுமன்ற நடவடிக்கைகள் ஒளிபரப்பை பார்க்கக் கூடாது என்று கட்டுப்பாடு விதித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ■



# வடக்கில் தேர்தலை நடத்தாவிட்டால் விளைவுகளுக்கு முகங்கொடுக்கத் தயாராக வேண்டும்



கலாநிதி
தயான் ஜெயதிலக

உள்நாட்டு அரசியல்

ஒரு அரசியல் விஞ்ஞானி என்ற வகையிலும் முன்னாள் இராஜதந்திரி என்ற வகையிலும் இணைந்த வடக்கு, கிழக்கு மாகாண சபையில் குறுகிய காலத்துக்கு அமைச்சராகப் பதவி வகித்தவன் என்ற வகையிலும் இந்த விடயதானத்தை நான் அணுகுகிறேன். இந்த அனுபவங்கள் மற்றும் பாத்திரங்கள் காரணமாக எனது கருத்துகளை யதார்த்த பூர்வமான பார்வை என்று வகைப்படுத்த முடியும் என்பது எனது அபிப்பிராயம்.

அதிகாரப் பரவலாக்கம் தொடர்பில் மூன்று மாயைகள் நிலவி வந்திருக்கின்றன. உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் புத்துயிர் அளிக்கப்படும் அந்த மாயைகளை யதார்த்தவாதி என்ற வகையில் நான் திட்டவட்டமாக நிராகரிக்கிறேன்.

எமது நாட்டுச் சூழ்நிலையில் அதிகாரப் பரவலாக்கம் என்பது பிரதானமாக மக்களுக்கு அதிகாரமும் உரிமையும் அளிப்பதுடன் சம்பந்தப்பட்டது. ‘மக்கள்’ என்பதை எந்தவிதமான இனத்துவ அர்த்தத்திலும் கருதலாகாது என்பது முதலாவது மாயை. அதிகாரப் பரவலாக்கம் என்பது விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டது. அவர்கள் தற்போது இல்லை என்பதால் அதிகாரப் பரவலாக்கத்துக்கு எந்த நியாயப்பாடும் கிடையாது என்பது இரண்டாவது மாயை. அதிகாரப் பரவலாக்கம் இந்தியாவுடன் சம்பந்தப்பட்டது என்பது மூன்றாவது மாயை.

## வடமாகாண சபை, அதிகார பரவலாக்கம் தொடர்பான விவாதம்

எனது அபிப்பிராயப்படி உண்மையை எளிதாகச் சொல்வதானால் அதிகாரப் பரவலாக்கம் என்பது தமிழர்களுடனும் சிங்களவர்களுடனும் சம்பந்தப்பட்டது, அல்லது சிங்களவர்களுடனும் தமிழர்களுடனும் சம்பந்தப்பட்டது. இலங்கையில் ஏறத்தாழ குறிப்பிட்ட சில பிராந்தியங்களுடன் சம்பந்தப்பட்ட நெருக்கமாக இணைக்கப்பட்ட இனத்துவக் குழுக்கள் (வட மாகாணத்துக்கு வெளியே பெரும்பாலான தமிழர்கள் வாழுகிறார்கள் என்ற கருத்தினால் இந்தவாதம் வலிமையையோ பண்பையோ இழந்துவிடவில்லை) இருக்கின்றன; பிராந்திய ரீதியான இனத்துவப் பரம்பல் இருக்கிறது; இலங்கையில் உள்நாட்டு புவிசார் அரசியலொன்று உள்ளது. அது குறைந்தபட்சம் 20 ஆம் நூற்றாண்டு பூராகவும் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

சரித்திரம் எதுவாக இருந்தாலும், அத்தகைய கட்டமைப்பு ஒன்று இருக்கிறது. அதன் காரணத்தினால் மத்திய மயப்படுத்தப்பட்ட (Centralized form of administration) நிருவாகத்தைக் கட்டமைப்பதில் வெற்றி கண்டிருக்கக்கூடிய எந்தவொரு ஒரே இனத்தைக் கொண்டிராத (பல்வேறு இனங்களைக் கொண்ட) நாட்டையும் தான் காணவில்லை என்பதை வலியுறுத்திக் கூறுவதற்காக சிலோன் மோர்ணிங் லீடரில் 6 கட்டுரைகளை 1926 ஆம் ஆண்டில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க எழுதினார். அதிகாரப் பரவலாக்கத்தின் நியாயப்பாட்டுக்கான அடிப்படை அதுவேயாகும்.

எனது பழைய மார்க்சிய அகராதிப் படி சொல்வதானால் குடிப்பரம்பல் தளத்துக்கும் அல்லது கீழ்க்கட்டுமானத்துக்கும் அரசியல் மேற்கட்டுமானத்துக்கும் இடையே ஒரு முரண்பாடு இருக்கிறது.

இதுவே அதிகாரப் பரவலாக்கம் சிங்களவர்களையும் தமிழர்களையும் பற்றியது என்பதற்கும் இந்தத் தீவில் எவ்வாறு நாம் சமாதான சகவாழ்வு வாழமுடியும் என்பதற்குமான முதலாவது வாத ஆதாரமாகும். இது சகவாழ்வையும் கூடிவாழ்தலையும் பற்றியதாகும். இது ஒரு புறநிலை உண்மையை வலியுறுத்துகிற ஒரு விடயமாகும். இலங்கையில் நாம் அரசியல் ரீதியில் சகவாழ்வு வாழ்வதற்கு வகை செய்யக்கூடிய அரசியல் சமநிலைக்கான நிபந்தனைகள் யாவை? இது அடிப்படையில் இனத்துவ தேசியப் பிரச்சினை அல்லது தேசிய இனங்களின் பிரச்சினை என்பதைத்தவிர, நிருவாகத்தைப் பற்றியதோ, வேறு எதையும் பற்றியதோ அல்ல.

**அதிகாரப் பரவலாக்கல் விடுதலைப்புலிகளுடன் சம்பந்தப்பட்டது என்றால் பண்டா-செல்வா உடன்படிக்கையோ, டட்லி-செல்வா உடன்படிக்கையோ கைச்சாத்திடப்பட்டிருக்காது. 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் பிரச்சினைக்கென ஜே.ஆர்.ஜயவர்தன கணிசமான பகுதியை ஒதுக்கியிருக்க மாட்டார்**

இது விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டது என்பது இரண்டாவது தவறான வாதம். விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்டதாக இருந்திருந்தால் 1957 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கையோ அல்லது 1966 ஆம் ஆண்டு டட்லி - செல்வநாயகம் உடன்படிக்கையோ கைச்சாத்திடப்பட்டிருக்காது. மேலும், இது விடுதலைப் புலிகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்திருந்தால் ஜே.ஆர்.ஜெயவர்தன மிகவும் பிரபல்யமான (ஐக்கிய தேசியக் கட்சியின்) 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர்களின் பிரச்சினைக்கென கணிசமான பகுதியை ஒதுக்குவது பொருத்தமாயிருக்குமென்று நினைத்திருக்கமாட்டார். தனி நாடொன்றைக் கோருகின்ற நிலைக்குக்கூட தள்ளப்படுகின்ற அளவுக்கு தமிழர்களுக்கு பிரச்சினைகள் இருந்தன என்பதை அந்த தேர்தல் விஞ்ஞாபனம் ஏற்றுக் கொண்டிருந்தது. 1976 வட்டுக்கோட்டைத் தீர்மானத்தையே அது சுட்டிக் காட்டுவதாக அமைந்தது. அந்த நேரத்தில் விடுதலைப் புலிகள் ஒரு சிறிய அமைப்பாகவே இருந்தனர். எனவே, பிரச்சினை அடிப்படையில் விடுதலைப் புலிகளைப் பற்றியதல்ல. அத்துடன், அவர்கள் இராணுவ ரீதியாகக் கண்ட தோல்வி அரசியல் இணக்கத் தீர்வொன்றுக்கான தேவையை தர்க்க ரீதியில் எந்த வகையிலும் இல்லாமற் செய்துவிடவில்லை.

மூன்றாவது, அதிகாரப் பரவலாக்கம் பிரதானமாக இந்தியாவுடன் சம்பந்தப்பட்டது என்றவாதம். அவ்வாறு அது இந்தியாவுடன் சம்பந்தப்பட்டதாக இருந்திருந்தால், 2014 இந்தியாவில் பொதுத் தேர்தல் நடைபெறப்போகும் நிலையில், அரசியல் சூழ்நிலை மேலும் மோசமான ஆபத்துகளைக் கொண்டதாக மாறிக் கொண்டு வருகிறதென்றே கூற வேண்டும். ஆனால், அதிகாரப் பரவலாக்கலுக்கான பிரதான அலகாக 'மாகாணம்' எப்போது பகிரங்கமாக இணங்கிக் கொள்ளப்பட்டது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். கொழும்பில் 1986 ஜூனில் நடத்தப்பட்ட அரசியற் கட்சிகளின் மகாநாட்டின் ஆவணங்களிலேயே மாகாணம் அலகாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஜனாதிபதி ஜெயவர்தன தலைமையிலான அந்த மகாநாடு விஜய குமாரணதுங்கவின் வேண்டுகோளின் பேரிலேயே கூட்டப்பட்டது. அப்போது இந்தியர்களில் எவரும் பிரசன்னமாயிருக்கவில்லை. அந்த நேரத்தில் இணங்கிக் கொள்ளப்பட்ட விரிவான திட்ட வரைபு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் (அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மைப் பலம் இருந்தது) ஒரு வருடம் கழித்து இந்தியாவின்









பலவந்த தலையீட்டு இராஜதந்திரத்துக்கு வழி திறந்துவிடப்பட்டிருக்காது.

எனவே இந்த மூன்று மாயைகளும் புறந்தள்ளப்பட வேண்டியவையாகும். அடுத்து நாம் மாகாண அதிகாரப் பரவலாக்கம் என்றால் உண்மையில் என்ன என்பதைப் பார்ப்போம். இது மிகவும் எளிமையானது. ஒரு குடும்பம், அதுவும் கூட்டுக் குடும்பம் ஒரே கூரையின் கீழ் வாழ வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், ஒரு இணைப்பைக்கட்ட வேண்டியிருக்கும். அல்லாவிட்டால் சமாளிக்க முடியாது. பிள்ளைகளுடனான தனிக்குடித்தனம் என்றாலும் கூட, பதின்வயதுகளில் பிள்ளைகள் இருப்பார்களானால், அவர்களுக்கென தனியான அறையொன்றைக் கொடுப்பதே விவேகமான காரியமாக இருக்கும். ஏனென்றால், குடும்பத்தின் அந்த உறுப்பினரின் தனித்தன்மையைப் பேணுவதற்குத் தேவையான குறுக்க முடியாத குறைந்தபட்ச இடைவெளி அங்கீகரிக்கப்படவில்லையானால், அல்லது கூட்டுக் குடும்பத்தின் அந்தக் கிளை வளருவதற்குத் தேவையான இடைவெளி அங்கீகரிக்கப்படவில்லையானால், நெருக்கடி தோன்றுவது தவிர்க்கமுடியாததாகும். சுருக்கமாகச் சொல்வதானால், அவர்கள் ஒரு கூரையின் கீழ் வாழ முடியாது. கூட்டுக் குடும்பத்தின் ஒரு கிளை அடுத்த வீட்டில், அல்லது அடுத்த ஒழுங்கையில் பெரும் எண்ணிக்கையில் நெருங்கிய உறவினர்களைக் கொண்டிருந்தால் மேலும் கூடுதல் நெருக்கடிகள் வரும். இதுவே அதிகாரப் பரவலாக்கலுக்கான அடிப்படை, புறநிலை உண்மையான நியாயப்பாடு ஆகும்.

ஒரு யதார்த்தவாதி என்ற வகையில், அதிகாரப் பரவலாக்கலுக்கான முதல்நிலை அலகு பற்றிய பழைய விவாதத்தில் நேரத்தைச் செலவிட உண்மையில் நான் விரும்பவில்லை. துணை அலகு ஒன்றுக்கான காரணம் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன். ஆனால், அது நிச்சயமாக உப அதிகாரப் பரவலாக்கல் என்று அறியப்பட்ட விடயத்துடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கவேண்டும். ஆனால், மிகவும் எளிமையான ஒரு காரணத்துக்காக முதல்நிலை அலகாக மாகாணமே தொடர்ந்தும் இருக்க வேண்டும். லங்கா கார்டியன் சஞ்சிகையின் ஆசிரியரான எனது தந்தையார் மேர்வின் டி சில்வாவுக்கு அளித்த பேட்டியொன்றில் ஜனாதிபதி ஜெயவர்தன 'சிங்களவர்கள் மாவட்



டசபைகளுக்கு அப்பால் எதுவும் இல்லை என்கிறார்கள். தமிழர்கள் பிராந்திய சபைகளுக்குக் குறைவாக எதுவும் வேண்டாம் என்கிறார்கள். நான் மாகாண சபைகள் என்கிறேன்' என்று கூறியிருந்தார். பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் இதை அவர் குறுக்கீட்டுச் சந்திப்புப் புள்ளி என்று சொன்னார்.

மாகாண அதிகாரப் பரவலாக்கல் அலகை இல்லாமற் செய்வதற்கு இந்தப் பாராளுமன்றத்தினால் முடியும். ஆனால், அதை தமிழர்களில் யாரும் ஏற்கமாட்டார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூட ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. பிரதான அதிகாரப் பரவலாக்கல் அலகு என்ற வகையில் மாகாணத்தை இல்லாமல் செய்வதை எந்தவொரு தமிழ் அரசியற் கட்சியுமோ, குழுவுமோ இணங்கிக் கொள்ளப்போவதில்லை. தற்போதைய அரசாங்கமோ அல்லது வேறு எந்த அரசாங்கமோ மாகாண அதிகாரப் பரவலாக்கல் அலகை இல்லாமற் செய்வதாக இருந்தால் அது கலப்படம் செய்யப்படாத ஒருதலைப் பட்சச் செயலாகவே இருக்கும். முன்னர், 1972ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்ட போது அத்தகைய ஒருதலைப்பட்சவாதத்தை நாம் கொண்டிருந்தோம். அதன் கடுமையான விளைவுகளை இந்நாட்டு பிரஜைகள் அனுபவித்தார்கள். அதேபோன்ற ஒருதலைப்பட்சவாதத்தை எவராவது நடைமுறைப்படுத்த இப்போது முயற்சிப்பார்களேயானால் (அதற்குச் சார்பான குரல்கள் உரத்து ஒலிக்கின்றன) அதனால் தொடர்ச்சியான பாதகவிளைவுகள் ஏற்படுமென்றதை அவர்கள் தெரிந்திருக்க வேண்டும். எனவே, ஒரு யதார்த்தவாதி என்றவகையில் நான் அதிகாரப் பரவலாக்கலுக்கான முதல் நிலை அலகாக மாகாணமே தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று பரிந்துரைக்கிறேன்.

> மாகாண அதிகார பரவலாக்கல் அலகை இல்லாமல் செய்வதை தமிழர்களில் யாரும் ஏற்கமாட்டார்கள். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாகூட ஏற்றுக் கொள்ளப் போவதில்லை


நாம் கொண்டிருக்கும் ஒரேயொரு குறுக்குவெட்டுப் புள்ளி அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தமே என்று ஒரு அரசியல் விஞ்ஞானி என்ற வகையில் மாத்திரமல்ல, அதற்கு மேலாக ஒரு முன்னாள் இராஜதந்திரி என்ற வகையிலும் கூறுகிறேன். இந்திய- இலங்கை சமாதான உடன்படிக்கை தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் அதிருப்தியைக் கொண்டிருந்தன. ஆனால், அதிகாரப்

பரவலாக்கலுக்கு மிகவும் கூடுதலான அளவுக்கு அனுகூலமாக இருந்த காலகட்டத்தில் கூட, பெறக்கூடிய

> அதிகாரப் பரவலாக்கலுக்கு மிகவும் கூடுதலான அளவிற்கு அனுகூலமாக இருந்த காலகட்டத்தில் கூட, பெறக் கூடியதாக இருந்த மிகச்சிறந்த ஏற்பாடு இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையின் விளைவான 13ஆவது அரசியலமைப்புத்திருத்தமே என்ற யதார்த்தத்தை தமிழ்க் கட்சிகள் இன்னமும் விளங்கிக் கொள்ளவில்லை

தாக இருந்த மிகச்சிறந்த ஏற்பாடு 13 ஆவது திருத்தமே என்ற யதார்த் தத்தை இன்னமும் தமிழ்க் கட்சிகள் புரிந்து விளங்கிக்கொள்ளவில்லை. இந்தியா வலுக்கட்டாயமாகத் தலை யீடு செய்த நிலைமையையும் ஜே. ஆர். ஜெயவர்தன அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மைப் பலம் (1982 டிசம்பரில் நடத்தப்பட்ட மோசடித்தனமான சர்வஜன வாக்கெ டுப்பின் மூலமாக அந்தப் பாராளு மன்றம் சட்டபூர்வத் தன்மையற்றதா கச் செய்யப்பட்டிருந்த போதிலும்) இருந்த நிலைமையையும் அடிப்ப டையாகக் கொண்டே அதிகாரப் பரவலாக்கத்துக்கு அனுகூலமான காலகட்டம் என்று அதைச் சொல்கி றேன். அத்துடன், அப்போது அதி காரப் பரவலாக்கலை ஆதரித்த பல மான இடதுசாரி அணியொன்றும் இருந்தது. தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு என்ற வகையில் மாகாண அதி காரப் பரவலாக்கத்தை நியாயப்படுத் துவதற்காக பெரும் தியாகங்களை அந்த இடதுசாரிகள் செய்தனர். விஜேகுமாரணதுங்க தலைமையி லான ஸ்ரீலங்கா மகாஜன கட்சியின் 170 உறுப்பினர்கள் தெற்கில் இடம் பெற்ற உள்நாட்டுப் போரில் ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.) யினால் கொல்லப்பட்டனர். (அக்கட் சியின் உதவிச் செய லாளராக நான் இருந்தேன். என் வாழ்வில் ஏதாவது ஒரு கட்சியின் உறுப் பினராக நான் இருந்தி ருக்கிறேன் என்றால் அது ஸ்ரீலங்கா மகாஜ னக் கட்சி ஒன்று மாத் திரமே)

எனவே, அதிகாரப் பரவலாக்கல் திட்டத் தினால் பெறக்கூடிய தாக இருந்த சிறந்த



ஏற்பாடு அதுவேயாகும். ஆனால், 1987 ஆம் ஆண்டிலிருந்தே விடுத லைப் புலிகள் அல்லாதவர்கள் அல் லது விடுதலைப் புலிகளுக்கு எதிரா னவர்கள் உட்பட தமிழ்த் தேசிய வாதிகள் திருப்திப்படவில்லை. 13ஆவது திருத்தத்தை தாங்கள் ஒரு போதுமே ஏற்றுக்கொள்ளவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி னர் இன்னமும் சொல்லிக்கொண்டி ருக்கிறார்கள். அதிகாரங்களைப் பொறுத்தவரை 13 ஆவது திருத்தம் போதுமானதாக இல்லை என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன் னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.) யும் பதவி ஏற்பதற்கு முன்னதாக ஏற்கெனவே நிராகரித்திருந்தது. அவர்களின் இத்த கைய நிலைப்பாடு காரணமாகவே (இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபையின்) அமைச்சரவையில் ஒரு அமைச்சராக நான்கு மாதங்கள் பதவி வகித்த பிறகு நான் இராஜினாமா செய்தேன். அப்போது நான் முதல மைச்சருக்கு எழுதிய பகிரங்கக் கடி தம் சண்டே ரைம்ஸிலும் (கொழும்பு) சண்டே திவயினவிலும் பிரசுரிக்கப் பட்டது.

ரணில் விக்கிரமசிங்க தலைமையி லான ஐக்கிய தேசியக் கட்சி 2000 ஆகஸ்ட் அரசியலமைப்பு வரைவின் பிரதிகளுக்கு தீ வைத்துக் கொளுத்தி யது என்பது உண்மையே. ஆனால், மங்கள முனசிங்கவின் பாராளுமன் றத் தெரிவுக்குழு அறிக்கையாக இருந்தாலென்ன, சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவின் 1995, 1997 அல்லது 2000 ஆகஸ்ட் தீர்வுப் பொதிகளாக இருந்தாலென்ன தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது அந்தக் கூட்டமைப்பிற்குள் இன்று உள்ளடங்கியிருக்கக் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியோ (ஒரு சமா தான முயற்சிப் பங்காளிகளாக) அவற்றில் அக்கறைகாட்டவில்லை. அளவுக்கு அதிகமான பெருந்தன்மை யுடனும் விவேகமற்ற முறையிலும் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்ற நிலையிலும் கூட இந்த யோச னைகளும் வாய்ப்புகளும் தமிழ்த் தேசியவாத பிரதான போக்கில் இருந் தவர்களுக்கு போதுமானவையாக இருக்கவில்லை. அந்த வாய்ப்புகள் எல்லாம் தவறவிடப்பட்ட நிலையில், இப்போது 13ஆவது திருத்தத்தில் விட்டுவைக்கப்பட்டிருப்பவற்றைப்

PUBLIC LIBRARY JAFFNA

பாதுகாக்க வேண்டியதே சவாலாக இருக்கிறது. சந்தை நிலைவரங்களுக்கு அப்பால் விலையைக் குறித்தால் இந்த மாதிரித்தான் வந்துமுடியும். இதுவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு நடந்திருக்கிறது.

பெரும்பாலான தமிழர்கள் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் செல்வதற்கு விரும்புகின்ற அதேவேளை, பெரும்பாலான சிங்களவர்கள் 13 ஆவது திருத்தமே போக வேண்டும் என்று விரும்புவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. 13 ஆவது திருத்தத்



துக்கு அப்பால் செல்வது விரும்பத்தக்கதாக இருந்தாலும் கூட, சரித்திரத்தின் இந்தக் கட்டத்தில் எம்மால் அவ்வாறு போக முடியாது என்பதே ஒரு யதார்த்தவாதி என்ற வகையில் எனது வாதமாகும். ஏனென்றால் அவ்வாறு போவதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த வேண்டியிருக்கும். சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் பட்சத்தில், 13ஆவது திருத்தமே தீயில் பொசுக்கப்பட்டுவிடும். மாகாணசபை முறையும் கூட இல்லாமற் போய்விடக்கூடும்.

13 ஆவது திருத்தத்தை ஒழித்து விட வேண்டுமென்று வாதிடும் குரல்கள் தெற்கில் மிகவும் உரத்து ஒலிக்கின்றன. 2013 செப்டம்பரில் நடத்தப்படுமென்று உறுதியளிக்கப்பட்டிருக்கும் வட மாகாணசபைத் தேர்தலை நடத்தக்கூடாது என்று இதே குரல்கள் வலியுறுத்துகின்றன. உண்மையில் அவ்வாறு செய்யமுடியும். அவ்வாறு செய்தால் புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் உள்ள பிரிவினைவாதிகளுக்கு வாய்ப்பாகிப் போய்விடும். ஏனென்றால், தமிழ்ப் பிரிவினைவாத இயக்கத்துக்கு ஆதரவளிப்பதில் இருந்து இந்தியாவைத் திசைதிருப்பியது இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையும் அதன் தவிர்க்கமுடியாத விளைவான 13 ஆவது திருத்தமுமே யாகும். அவையே இந்தியாவின் கொள்கையை 1983-1987 காலகட்ட நிலைப்பாட்டிலிருந்து மாற்றி விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய அமைதி காக்கும் படையைத் திருப்பின. அவையே 2009ஆம் ஆண்டு போரின் இறுதிக்கட்டத்தில் இந்தி

**வாய்ப்புகள் எல்லாம் தவற விடப்பட்ட நிலையில் தற்போது 13ஆவது திருத்தத்தில் விட்டு வைக்கப்பட்டிருப்பவற்றைப் பாதுகாக்க வேண்டியதே சவாலாக இருக்கிறது. சந்தை நிலைவரங்களுக்கு அப்பால் விலையை குறித்தால் இந்த மாதிரித்தான் வந்து முடியும். தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்கு நடந்திருப்பது இதுவே**

யாவை எமக்கு ஆதரவாக வைத்திருந்தன. தமிழ் நாட்டில் தேர்தல்கள் வரவிருந்த நிலையிலும், போருக்கு எதிராக அந்த மாநிலத்தில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்ற போதிலும் இந்தியா எம்முடனேயே நின்றது. 13ஆவது திருத்தமே 1987 ஆம் ஆண்டு வடமராட்சியில் லிபரேசன் ஒபரேசன் இராணுவ நடவடிக்கையை இடைநிறுத்திய இந்திய நிலைப்பாட்டுக்கும் 2009ஆம் ஆண்டு இலங்கைப் போரை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டுவர உதவிய இந்திய நிலைப்பாட்டுக்கும் இடையேயான வித்தியாசத்தைச் சாத்தியமாக்கியது. அத்திருத்தத்தை இல்லாமற் செய்தால் நிலைவரங்கள் சகலதுமே தலைகீழாக மாறக்கூடும்.

தாங்கள் விடுதலைப் புலிகளுக்குக் கொடுக்க மறுத்ததை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கொடுக்கப்போவதில்லை என்று கூறுகிறவர்கள் விடுதலைப் புலிகள் 13ஆவது திருத்தத்தை எதிர்த்தார்கள், ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்துடன் சண்டையிட்டார்கள், வடமாகாணசபையை எதிர்த்தார்கள், இந்திய அமைதி காக்கும் படையினருடன் போரிட்டார்கள் என்பதையெல்லாம் மறந்துவிட்டார்கள் அல்லது வேண்டுமென்றே மறைக்கிறார்கள் போலத் தெரிகிறது. விடுதலைப் புலிகள் அவ்வாறு செய்ததற்குக் காரணம் 13ஆவது திருத்தம் பிரிவினைக்கான ஒரு படிக்கல்லோ அல்லது பிரிவினைக்குச் சமமானதோ அல்ல என்பதை அவர்கள் நன்றாகவே தெரிந்திருந்தார்கள். 13ஆவது திருத்தத்துக்கும் தமிழ்ப்பிரிவினை வாதத்துக்கும் இடையே எந்தவித சமன்பாடுமே கிடையாது என்பதை பிரபாகரன் அறிந்திருந்தார். இரண்டுமே வேறுபட்ட விடயங்கள். 13ஆவது திருத்தம் ஒற்றையாட்சி வரையறைக்குள் அதிகாரப் பரவலாக்கத்துக்கானது என்பது அவருக்குத் தெரியும்.

ஒற்றையாட்சி வரையறைக்குள்ளான அதிகாரப் பரவலாக்கலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மகிழ்ச்சியில்லை. ஆனால், அதுதான் அவர்களுக்கு கிடைக்கக்கூடியது. அது மாத்திரமே இன்று இலங்கையில் பெறக்கூடியது. அந்த ஏற்பாடாவது மிஞ்சிநிற்குமாக இருந்தால் அது ஒரு அதிசயமாக அமையலாம். தற்போதுள்ள ஏற்பாட்டைச் செயற்படுத்த வேண்டும் அல்லது வெளிச்சக்திகளின் உதவியுடன் பெரிதாக எதையும் சாதிக்க முயற்சிக்க வேண்டும்- இதுவே இன்று தமிழர்கள் முன்னால்

உள்ள சவாலாகும். வெளிச்சக்திகளின் உதவியுடன் சாதிக்க முயற்சிப்பது ஆபத்தான ஒரு சூதாட்டமாகும்.

சிங்களக் கடும் போக்காளர்கள் எடுத்திருக்கிற நிலைப்பாட்டைப் பொறுத்தவரை, அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிவைக்க விரும்புகிறேன். 'ஆம், நீங்கள் 13 ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க முடியும். வட மாகாணசபையையும் இல்லாமற் செய்யலாம், தேர்தலையும் நடத்தாமல் விடலாம். ஆனால், அடுத்து வரக்கூடிய விளைவுகளுக்கு முகங்கொடுக்கத் தயாராக இருக்கவேண்டும். அந்த விளைவுகளில் இந்தியாவின் பிரதமராக செல்வி ஜெயலலிதா அடுத்த வருடம் வரக்கூடிய தொலைதூர சாத்தியப்பாடுகளும் அடங்கும். கூடுதலான அளவிற்கு தமிழ் நாட்டின் செல்வாக்கிற்கு ஆளாகக்கூடிய ஒரு அரசாங்கமே டில்லியில் அமையக்கூடிய சாத்தியங்களும் இருக்கின்றன. தமிழ் நாடு அவ்வாறாக செல்வாக்கு செலுத்தக்கூடிய சூழ்நிலை, முதலமைச்சராக எம்.ஜி. இராமச்சந்திரன் பதவியில் இருந்த 1980களில் நிலவியதையும் விட இலங்கைக்கு விரோதமானதாக இருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இத்தகைய ஆபத்தைக் கொண்டுவரக்கூடிய சூழ்நிலையை இலங்கை விரும்புகிறதா? மீண்டும் சொல்கிறேன். தமிழ் நாட்டை மையமாகக் கொண்டியங்கிய தமிழ்த் தீவிரவாத இயக்கத்துக்கும் அதற்கு புதுடில்லியில் இருந்து வழங்கப்பட்டு வந்திருக்கக்கூடிய அனுசரணைக்கும் இடையேயான தொடர்பைத் தகர்த்தெறிந்தது 13ஆவது திருத்தம் மாத்திரமே. அதை நாம் அகற்றினோமானால், கேந்திர முக்கியத்துவ மற்றும் தந்திரோபாய ரீதியில் 13ஆவது திருத்தத்தினால் எம்மால் பெறக்கூடியதாக இருந்தவற்றை இழந்து விடுவதற்கு நாம் தயாராயிருக்கிறோமா? பிரிவினை வாதத்தை மீண்டும் வளர்க்கும் தளமாக மீண்டும் தமிழ்நாடு மாறுவதை நாம் விரும்புகிறோமா? புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் இருக்கிற பிரிவினைவாதிகளுக்கும் தமிழ் நாட்டில் இருக்கிற பிரிவினைவாத சக்திகளுக்கும் இடையே இணைவு ஏற்படுவதையும் தளம்பல் நிலையில் இருக்கிற ஒரு புதுடில்லி நிருவாகத்தையும் மேற்குலகின் மிகவும் வல்லமை வாய்ந்த வட்டாரங்களுடனான எமது கசப்புணர்வு தொடர்வதையும் நாம் விரும்புகிறோமா? அதையா நாம் செய்ய விரும்புகிறோம்? அதைவிடவும் எமது தேசிய பாதுகாப்புக்கு பேராபத்தான எதையும் கற்பனை செய்து பார்க்க முடியுமா?

> **சிங்கள கடும்போக்காளர்கள் விரும்புவதைப்போன்று 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்க முடியும். வட மாகாண சபைக்கு 0.தேர்தலை நடத்தாமலும் விடலாம். ஆனால் அந்த திருத்தத்தினால் எம்மால் பெறக்கூடியதாக இருந்தவற்றை இழந்து விடுவதற்கு நாம் தயாராக இருக்கிறோமா?**

நான் ஒரு தேசியவாதி அல்ல. ஆனால், இலங்கையின் தேசிய நலன்களைப் பற்றிய உணர்வு கொண்ட, ஐயந் தெளிந்த, தப்பெண்ணங்கள் அகற்றப்பட்ட ஒரு தேசாபிமானியாக என்னைக் கருதுகிறேன். தவிர்க்க முடியாததைத் தவிர்க்க வேண்டுமானால், புதிய மோதல் நிலை ஏற்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டுமானால், ஓரளவுக்கேனும் எனது கருத்துகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆபத்தான நிலை மீண்டும் ஏற்படாதிருப்பதை உறுதி செய்யக்கூடிய கட்டமைப்பு 13ஆவது திருத்தம் மாத்திரமே. ஏனென்றால், அதை இல்லாமற் செய்தால் சகலதுமே குழம்பிப் போய்விடும். சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையேயான வெளியும், வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையேயான வெளியும் மிகவும் பாரியதாக இருக்கிறது. அதனால், நடைமுறைச் சாத்தியமாகக்கூடிய ஒரே ஏற்பாடு 13 ஆவது திருத்தமேயாகும். இரு தரப்பினராலும் இணங்கிக் கொள்ளப்படக்கூடிய விட்டுக் கொடுப்புகளுடன் இதைச் செய்யலாம்.





13ஆவது திருத்தத்திலிருந்து காணி சம்பந்தப்பட்ட அதிகாரங்களை அகற்றுவது பற்றிய வாதங்கள் என்னைத் திகைப்படையச் செய்கின்றன. இந்தப் பிரச்சினையில் இருக்கக்கூடிய கடுஞ் சிக்கல் அந்த விவகாரமேயாகும். அது மிகவும் ஜாக்கிரதையாக வகுக்கப்பட்டிருக்கிறது. இந்திய -இலங்கை சமாதான உடன்படிக்கையைப் பற்றி அதுவும் குறிப்பாக அதில் இருக்கக்கூடிய காணி சம்பந்தப்பட்ட பிரிவுகள் பற்றிய மிகவும் நெருக்கமான அனுபவ அறிவைக் கொண்ட ஒரே மனிதர், இந்திய - இலங்கை உறவுகள் பற்றியும் தமிழர்

பிரச்சினைக்கும் அதிகாரப் பரவலாக்கத்துக்கும் ஊடாக ஓடுகின்ற அந்த உறவின் இழை பற்றியும் நன்றாகத் தெரிந்துகொண்ட ஒரே மனிதர் அரசாங்கத்தின் ஒரு உறுப்பினராக இருக்கிறார். ஆனால், ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தருவது என்னவென்றால், அவர் இந்த விவகாரங்களுக்குள் எந்த விதத்திலும் சம்பந்தப்படுத்தப்படுகிறாரில்லை. நான் கலாநிதி சரத் அமுனுகமவைத் தான் குறிப்பிடுகிறேன். காமினி திசாநாயக்கவிற்கு செயலாளராக இருந்தபோது அவராலும் அவரின் அமைச்சினாலும் காணி அதிகாரங்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்ட பயனுறுதியுடைய யோசனைகள் மிகவும் விரிவாகவும் அவதானமாகவும் ஆராயப்பட்டன. கலாநிதி அமுனுகமவை முன்னணிக்குக் கொண்டு வந்து இந்தியாவுக்கும் எமக்கும் இடையிலான உறவுகளைக் கையாளுகின்ற பொறுப்புகளில் தீவிரமாகச் சம்பந்தப்படுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். 13 ஆவது திருத்தம் மற்றும் காணி விவகாரத்தைக் கையாளுவதில் அவரை ஈடுபடுத்த வேண்டும். ஏனென்றால், ஒருதலைப்பட்சமான சட்டமூலத்தின் ஊடாக காணி அதிகாரங்களை எடுத்துவிட்டால், தமிழர்களில் எவரும் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. சகலதுமே குழம்பிப்போய் விடும். தமிழர்கள் மீண்டும் வன்முறையற்ற தங்கள் பாரம்பரிய போராட்டத்துக்கு திரும்பிவிடுவார்கள். தமிழ் நாட்டு மக்கள் அப்போராட்டத்தை உறுதியாக ஆதரிப்பார்கள்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையேயான சமாதானத்தைப் பற்றி அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியதைப் போன்று தீர்வு என்னவென்று சகலரும் அறிவார்கள். விட்டுக்கொடுப்புகளுடன் சேர்த்து 1967 எல்லைகளே தீர்வு. அரபு வசந்தத்தையடுத்தும் வெகுஜன ஆதரவுடனான தேசியவாதத்தின் பிரவாகத்தையும் அடுத்து குடிப்பரம்பல் இஸ்ரேலுக்கு எதிராக நகர்ந்து கொண்டிருக்கிறதென்று இஸ்ரேலியர்களை ஒபாமா எச்சரிக்கை செய்யவும் தவறவில்லை. அதேபோன்றே, சிறந்த தீர்வைப் பற்றிய ஒவ்வொருவரது கருத்துப் பாங்கும் எத்தகையதாக இருந்தாலும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரே தீர்வு - பரஸ்பரம் இணங்கிக் கொள்ளப்படக்கூடிய விட்டுக்கொடுப்புகளுடன் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதேயாகும். அதாவது பொதுப்பட்டியலை (Concurrent list) மீள்பங்கீடு செய்வதாகும். பொதுப்பட்டியலில் இருக்கின்ற அதிகாரங்களில் குறிப்பிட்ட சிலவற்றை மத்திய அரசாங்கம் தொடர்ந்தும் வைத்திருப்பதற்குப் பிரதியுபகாரமாக வேறு சில அதிகாரங்களை மாகாணங்களுக்கு கையளிக்க வேண்டும். இது தொடர்பில் பரஸ்பர உணர்வு வெளிக்காட்டப்பட வேண்டும்.

உறுதியளிக்கப்பட்டதைப்போன்று, எதிர்வரும் செப்டம்பரில் 13 ஆவது திருத்தத்தை தேர்தல் செயற்பாட்டின் மூலமாக சுறுசுறுப்பாக்கவில்லையானால் காலமும் வெளியும் எமக்கு எதிராக நகருவதையே காணக்கூடியதாக இருக்கும். குடிப்பரம்பல் (demography) எமக்கு எதிரான திசையில் நகர்ந்து கொண்டிருக்கின்றது. எமது ஒரே அயல் நாடும் பெரிய அயல் நாடுமான இந்தியாவின் அரசியல் இயக்க ஆற்றலும் எமக்கு எதிரான திசையிலேயே நகர்ந்து கொண்டிருக்கின்றது. 13 ஆவது திருத்தத்தை இல்லாமற் செய்து, வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் விடுவதற்கு எவரும் முயற்சிக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். எமக்கு நேரம் போய்க்கொண்டிருக்கிறது. ■




---

(03ஆம் பக்கத்தொடர்ச்சி...)

இரு தடவைகள் தென்னிலங்கை இளைஞர்கள் நடத்திய ஆயுதக் கிளர்ச்சிகள் அரசாங்கப் படைகளினால் தோற்கடிக்கப்பட்டு ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.)யின் ஸ்தாபகத் தலைவர் ரோஹண விஜேவீரவும் கொல்லப்பட்டதற்குப் பிறகு அந்தப் பயங்கரவாதத்தின் தோல்வியை ஏன் தென்னிலங்கை மக்கள் தடபுடலாகக் கொண்டாடவில்லை என்பதையும் வருடாந்தம் தேசியக் கொண்டாட்டங்களை நடத்துவதற்கு அரசாங்கங்கள் தீர்மானிக்கவில்லை என்பதையும் ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் இன்றைய அரசாங்கமும் தென்னிலங்கை மக்களும் உண்மையில் பயங்கரவாதத்தை வெற்றி கொண்டதையா கொண்டாடுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும். ■



கலாநிதி
ஜெஹான் பெரேரா

உள்நாட்டு அரசியல்



# எந்த அடிப்படையிலும் நியாயப்படுத்த முடியாத வடக்கு காணி சுவீகரிப்பு

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் குடிப்பரம்பல் கூட்டமைவை (Demographic Composition) செயற்கையான முறையில் மாற்றியமைப்பதற்கு காணி குடியமர்வுக் கொள்கை பயன்படுத்தப்படக்கூடாது என்பது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளில் ஒன்று. யாழ்ப்பாணத்திலும் வடக்கு, கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள் அந்த ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கு முற்றிலும் முரணானவையாக இருக்கின்றன. நீதிமன்றத்தின் துணையை நாடுவதற்கு மாற்றீடானதாக அரசாங்கத்தின் கொள்கை இல்லை என்று விசேடமாகக் குறிப்பிட்டிருக்கும் ஆணைக்

## இலங்கையில் இராணுவத்தின் வகிபாகத்தின் விரிவாக்கம்

குழு, காணி விவகாரத்தில் வலுவானதும் பக்கச்சார்பற்றதுமான சிவில் நிருவாகத்தின் தேவை குறித்தும் வலியுறுத்தியிருக்கிறது. சாத்தியமானளவு விரைவாக வடக்கின் நிருவாகத்தில் இராணுவமயத்தை இல்லாமற் செய்வதுடன், பாதுகாப்புப் படைகளினால் எடுக்கப்பட்ட தனியார் காணிகளை மக்களிடம் விடுவிக்க வேண்டும் என்றும் ஆணைக்குழு அரசாங்கத்தைக்கேட்டிருந்தது.

பரந்தளவிலான இலங்கைக் கருத்துக் கோணத்தில் நோக்கும் போது போருக்கான அடிப்படைக் காரணத்தையும் நல்லாட்சியுடன் தொடர்புடைய விவகாரங்களையும் கையாள வேண்டியதே மிகவும் முக்கியமான விடயமாகும். இதைப் பொறுத்தவரையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை இணையற்ற அளவுக்கு பெறுமதியானதாக விளங்குகிறது. சுமார் 30 ஆயிரம் சனத்தொகையைக் கொண்ட 24 கிராமங்களை உள்ளடக்கிய 6300 ஏக்கர்களுக்கும் அதிகமான பரந்தளவு நிலத்தைச் சுவீகரிப்பதென்பது ஜனநாயக அடிப்படையிலோ அல்லது தேசிய நல்லிணக்கத்திற்கான தேவையின் அடிப்படையிலோ நியாயப்படுத்தப்பட முடியாததாகும். போரின் போது அதியுயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட நிலங்கள் அவற்றின் உண்மையான உரிமையாளர்களுக்கு திருப்பிக் கையளிக்கப்படும் என்று சர்வதேச சமூகத்துக்கு அரசாங்கம் அளித்த உறுதிமொழி காணிச் சுவீகரிப்பை நியாயப்படுத்த முடியாது என்ற வாதத்துக்கு மேலும் வலுச்சேர்க்கிறது. அத்தகைய நிலங்கள் அவற்றின் உரிமையாளர்களுக்கு திருப்பிக் கையளிக்கப்பட வேண்டுமென்று நீதிமன்றத் தீர்ப்பொன்றும் வழங்

கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது என்பதே வடக்கு, கிழக்கில் நிலங்களைச் சுவீகரிப்பதற்கு அரசாங்கம் முன்வைக்கின்ற காரணமாக இருக்கிறது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெருநஷ்டமாக அமையக்கூடிய வகையில் பெருவாரியான நிலங்களைச் சுவீகரிப்பதற்கு என்ன தேவை இருக்கிறது என்பது விளங்கவில்லை. எந்தப் பிரச்சினையைக் கையாள அரசாங்கம் நாட்டம் கொண்டிருக்கிறதோ அதே பிரச்சினையைத் தோற்றுவிப்பதாகவே அதன் செயற்பாடுகள் அமைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. தீவிரவாதத்துக்கான விளை நிலமான அந்தப் பகுதி மக்களுடன் அவநம்பிக்கையையும் விரோதத்தையும் அரசாங்கம் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. போர்க் காலகட்டத்தின் போது இராணுவத் தளங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துக்காகவே அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டன. விடுதலைப் புலிகள் கனரக ஆயுதங்களுடன் குடிமக்களின் பகுதிகளுக்குள் ஊடுருவி இராணுவத் தளங்களுக்குள் எறிகணைத் தாக்குதல்களை நடத்துவதைத் தடுத்து நிறுத்தவே அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் கூடுதல் சக்திமிக்க பீரங்கிகளை விடுதலைப் புலிகள் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த வலயங்களின் புற எல்லையும் விரிவுபடுத்தப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆனால், இன்று விடுதலைப் புலிகள் இல்லை, போரும் இல்லை. இராணுவத்தளங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக பரந்தளவிலான கவச வெளிக்கான தேவையுமில்லை. இத்தகையதொரு பின்புலத்திலேயே, போர் முடிவுக்கு வந்த பிற்பாடு அரசாங்கம் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்காக எடுக்கப்பட்ட நிலங்களை விடுவிப்பதற்கான விருப்பத்தை வெளிக்காட்டியது. போரின் போது இராணுவத்தின் பருமன் இரண்டு மடங்கிற்கும் கூடுதலானதாக அதிகரித்தது. சமாதானக் காலத்துக்கு கூடுதலான அளவுக்கு பொருத்தமான முறையில் இராணுவத்தின் பருமன் குறைக்கப்படுமென்ற ஒரு நியாயமான எதிர்பார்ப்பு காணப்பட்டது. இராணுவத் தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் பெரும் எண்ணிக்கையிலான படைவீரர்களுக்கு சம்பளத்தை வழங்குவதற்கும் இதுகாலவரை செலவிடப்பட்ட மாபேரளவு பொருளாதாரவளங்கள் சிவிலியன் நோக்கங்களுக்காக திசை திருப்பப்படக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்றும் அதன் பயனை மக்களினால் அனுபவிக்கக்கூடியதாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. இதுவே சமாதானத்தின் பலாபலன் என்று வழமையாக வர்ணிக்கப்படுவதாகும்.

ஆனால், இவற்றுக்கெல்லாம் முரணாக, வடக்கில் இராணுவத் தளங்களையும் படையினருக்கான குடியிருப்புகளையும் நிர்மாணிக்கும் 'பொது நோக்கத்துக்காக' மக்களுக்குச் சொந்தமான நிலங்களைச் சுவீகரிப்பதற்கான திட்டங்கள் குறித்து அரசாங்கம் அறிவித்தல்களைக் கொடுத்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. சுவீகரிக்கப்படுகின்ற நிலங்கள் படையினரின் குடியிருப்புத் தேவைக்கும் அப்பால் பரந்தளவிலானதாக இருக்கிறது. காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 2ஆவது பிரிவின் கீழ் வலிகாமம் வடக்கில் மரங்களில் அறிவித்தல்கள் ஒட்டப்பட்டிருப்பதால் வடபகுதியின் அரசியல் சமுதாயம் பெரும் கவலையடைந்திருக்கிறது. வெளியாரைக் கொண்டு வந்து குடியமர்த்தி வடக்கு வாக்காளர் பட்டியலில் அவர்களைப் பதிவு செய்து குடிப்பரம்பல் கூட்டமைவை மாற்றியமைப்பதே இந்த நிலச் சுவீகரிப்பின் நோக்கம் என்று வடபகுதி மக்களும் அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளும் அஞ்சுகிறார்கள். மூவாயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வடக்கின் பல்வேறு பகுதிகளில் குடியேற்றப்படுவதாகவும் மேலும் பல குடும்பங்கள் கொண்டுவரப்படவிருப்பதாகவும் ஊடகங்களில் செய்தி வெளியாகியிருக்கிறது.

தொடர்ந்து இராணுவத்துக்கு ஆட்திரட்டல் இடம்பெற்றுவருவதும் பாதுகாப்புத் துறைக்கான பட்ஜெட் ஒதுக்கீடு மேலும் மேலும் அதிகரிக்கப்படுவதும் போரின் முடிவுக்குப் பின்னரான நிகழ்வுப் போக்குகளில் மிகவும் எதிர்பார்க்கப்படாத ஒரு அம்சமாக இருக்கிறது. இராணுவ இயந்திரத்தின் பருமனைக் குறைப்பதற்குப் பதிலாக பெருப்பிப்பதற்கு அரசாங்கம் தேசிய பாதுகாப்பைப் பேணவேண்டிய அவசியத்தையே காரண விளக்கமாகக் கூறுகிறது. இதனால் தேசிய வாழ்வில் இராணுவத்தின் வகிபாகத்தை அதிகரித்து அரசாங்கம் மேற்கொள்கின்ற நடவடிக்கைகளைக் கண்டன விமர்சனம் செய்வதும் கூட ஒருவிதத்தில் தொல்லையானதாக இருக்கிறது. மூன்று தசாப்த கால போருக்குப் பிறகு, தேசிய பாதுகாப்புக் கடப்பாடுகளுக்கு அல்லது தேசியபாதுகாப்பு என்று உரிமை கோரப்படுகின்றவற்றுக்கு இயல்பாகவே தலைவணங்கப்படுகிறது.

**சீனா, பாகிஸ்தான், இந்தோனேஷியா போன்ற நாடுகளின் வழியில் இலங்கையும் ஆட்சி முறையில் சிவிலியன் நிருவாகத்தில் இராணுவத்தை உள்வாங்கும் செயற்பாடுகளை தீவிரப்படுத்தியிருக்கிறது**

### இராணுவக் கோட்பாடு

மீண்டும் ஒரு தடவை ஆயுதக் கிளர்ச்சி மூளுவதைத் தடுப்பதற்கு பெருமளவு துருப்புகளின் பிரசன்னம் தேவை என்பதன் அடிப்படையில்

## யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் விஸ்தரிப்பும் அங்குள்ள நிலங்களைச் சுவீகரிக்க மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கை களும் இலங்கை வாழ்வில் இராணுவத்தின் பாத்திரத்தில் விரி வாக்கத்தின் அங்கமாகவே நோக்கப்பட வேண்டியவை. இது எம் எல்லோரையும் பாதிக்கும்

இராணுவத்தின் பருமன் அதிகரிப்பு இன்று நியாயப்படுத்தப்படுகிறது. வடக்கு, கிழக்கில் வாழுகின்ற மக்கள் மத்தியில் இருந்து கிளர்ச்சியின் விதைகள் முற்றுமுழுதாக வேருடன் அழிக்கப்படவில்லை என்ற ஒரு நம் பிக்கை அரசாங்கத்திற்குள் விசேட மாக பாதுகாப்புத்துறைக்குள் இருக்கி றது. நாம் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த போது எமது வாகனத்தில் ஏறிக் கொண்ட பொலிஸ்காரர் ஒருவரிடமி ருந்து இத்தகைய கருத்தைக் கேட்கக்கூடியதாக இருந்தது. தாங் கள் தொடர்ந்தும் கண்காணிக்கப்படு வதாகவும் அதனால் எந்தவிதமான தீவிரவாதச் செயல்களுடனும் தொடர்புபட்டுவிடக்கூடாது என்ற எண்ணம் மக்களுக்கு இருக்க வேண் டும் என்பதற்காக ஓமந்தை சோத னைச் சாவடியின் பிரசன்னம் அவசி யம் என்றும் அந்தப் பொலிஸ்காரர் விளக்கம் அளித்தார்.

ஆனால், போரின் முடிவுக்குப் பிறகு இராணுவத்தின் பருமன் அதிக ரிக்கப்படுவதற்கு இன்னொரு விளக் கம் கூறப்படுகிறது. இது அரசாங்கத் தின் கோட்பாட்டுடன் சம்பந்தப்பட் டது. சீனா, பாகிஸ்தான் மற்றும் இந் தோனேசியா போன்ற நாடுகளின் வழியில் இலங்கை அரசையும் அர சாங்கம் உருவமைத்துக்கொண்டு வருகிறது போலத் தோன்றுகிறது. இந்த நாடுகளின் ஆட்சி முறையில் சிவிலியன் நிருவாகத்துடன் இரா ணுவம் உள்வாங்கப்பட்டிருக்கிறது. அத்துடன் சிவிலியன் வாழ்க்கையின் ஒரு அங்கமாக இராணுவம் மாறி விட்டது. பாரம்பரிய ஜனநாயக நாடு களில் இருப்பதைப் போன்று சிவிலி யன் வாழ்க்கையில் இருந்து இராணு வம் வேறுபடுத்தி வைக்கப்பட வில்லை. இந்த நாடுகளில் இரா ணுவம் ஹோட்டல்கள், வங்கிகள் மற் றும் பயணக் கம்பனிகள் போன்ற பொருளாதார நிறுவனங்களை நடத் துகிறது.

எங்கெல்லாம் இராணுவம் வர்த்த கத்துறையில் ஈடுபடுகிறதோ, அங் கெல்லாம் மக்களுக்கு மலிவு விலை யில் பொருட்களையும் சேவைகளை யும் வழங்குவதில் தனியார்துறையை அதனால் விஞ்ச முடியும். மரக்கறி வகைகளின் விலைகள் கடுமையாக உயர்ந்த போது இதை இலங்கையி லும் காணக்கூடியதாக இருந்தது. இராணுவம் மலிவு விலையில் மரக் கறி வகைகளை விற்பனை செய்யத் தொடங்கியது. அதேபோன்று இரா ணுவம் ஹோட்டல்களை, உணவு விடுதிகளை, பயணச்சேவைகளை போட்டிக்குரிய விலைகளிலும் கட்ட ணங்களில் திறமையுடன் நடத்துகி றது. ஆனால், அந்த நடவடிக்கைக ளில் பெருமளவு மானியம் மறைந்து கிடக்கிறது. இராணுவத்தினருக்கு இராணுவ பட்ஜெட்டில் இருந்து தனி யாகவே சம்பளங்களும் போக்குவ ரத்துச் செலவுகளும் வழங்கப்படு வதை அடிப்படையாகக் கொண்டே இதை நோக்க வேண்டும். எனவே, இராணுவத்தினரால் பாவனையாளர் களுக்கு மலிவான விலைகளில் பொருட்களைக் கொடுக்க முடியும்.

சிவிலியன் விவகாரங்களில் இரா ணுவத்தைச் சம்பந்தப்படுத்துவதால், மறைமுகமான வேறு செலவுகளும் இருக்கின்றன. அதன் காரணத்தினால் தான் ஜனநாயக ஆட்சி முறை நிலவு கின்ற நாடுகளில் சிவிலியன் விவகா ரங்களில் இருந்து இராணுவம் கண் டிப்பாக வேறுபடுத்தி வைக்கப்படு கிறது. உயர்மட்டத்திலிருந்து வழங் கப்படுகின்ற உத்தரவுகளுக்கு பணி ந்து நடப்பதற்கு இராணுவம் பயிற்று விக்கப்பட்டிருக்கிறது. மேலதிகாரிக ளின் உத்தரவுகள் தொடர்பில் திருப் பிக் கேள்வி கேட்க இராணுவத்தின ரால் முடியாது. ஆனால், ஜனநாயக வாழ்வில் இதற்கு முற்றிலும் மாறா கவே நிலைமை. தங்களுக்கு எது தேவையோ அதை மக்களினால் தீர் மானிக்கக்கூடியதாக இருக்க வேண் டும். ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள் மக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப நட க்க வேண்டும். மக்கள் சொல்பவற் றுக்கு செவிமடுக்க வேண்டும். அவர் களின் விருப்பங்களை நடைமுறைப் படுத்த வேண்டும். அந்தத் தலைவர் கள் மனித உரிமைகள் கோட்பாடுக ளையும் ஜனநாயகப் பண்புகளையும் மதித்துச் செயற்படுவதாக இருந்தால் இவையெல்லாவற்றையும் செய்தே யாக வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தில் மக்களினால் தெரிவு செய்யப்படக்கூடிய சட்ட ரீதியான சிவில் நிருவாகம் ஒன்று ஏற்படுத்தப் படுவதற்கு முன்னதாக பெருமளவு நிலங்களைச் சுவீகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். பெரும் எண்ணிக் கையான மக்களின் வாழ்வைப் பாதிக்கக்கூடிய அத்தகைய தீர்மா னங்களை மக்களினால் தெரிவு செய் யப்படும் மாகாண சபை அமைக்கப் பட்ட பிறகு அதனுடன் கலந்தாலோசி த்து மேற்கொள்வதே மிகவும் பொரு த்தமானதாக இருக்கும். பொதுத்தே வைக்காக பெருமளவு நிலங்களை அரசாங்கம் எடுக்க விரும்பும் பட்சத் தில், அதனால் பாதிக்கப்படக்கூடிய மக்களுடனும் அவர்களின்

*(24ஆம் பக்கம் பார்க்க...)*

உள்நாட்டு அரசியல்

# முதலில் தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்த வேண்டும்



**வட மாகாண சபையை கைப்பற்றுவது கூடுதல் சுயாட்சிக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு வலுவான ஒரு நிலையை தமிழர்களுக்கு கொடுக்கும். அந்த மாகாண சபை சட்ட ரீதியாக வலுவற்றதாக இருக்கலாம். ஆனால் அரசியல் ரீதியில் வலுவானது என்பதில் சந்தேகமில்லை**

குமார் டேவிட்

வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்துவது ஆபத்தானது என்றும் விரும்பத்தகாதது என்றும் விறுவிறுப்பான பிரசாரங்கள் ஊடகங்களில் முன்னெடுக்கப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. பின்னாலிருந்து அரசாங்கம் இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. தமிழ்ப்பகுதிகளில் ஓரளவு சுயாட்சியை அல்லது சுயநிருவாகத்தை ஏற்படுத்துவதற்காகவே மாகாண சபைகள் முறை உருவாக்கப்பட்டது. ஆனால், மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண நிருவாகத்தை ஒருபோதுமே காணாத ஒரேயொரு மாகாணமாக தமிழர்களின் வடமாகாணமே இருக்கிறது. என்ன விசித்திரம் பார்த்தீர்களா?

ஏதாவது கட்டுக்கதையை அல்லது சாக்குப் போக்கைக்கூறி அரசாங்கம் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் விடக்கூடிய சாத்தியங்கள் ஐம்பதுக்கு ஐம்பது இருக்கின்றது. அரசாங்கத்தின் வஞ்சகத்துக்கும் சூழ்ச்சிக்கும் இணையேதுமில்லை எனலாம். ஆனால், எதிர்வரும் செப்டெம்பரில் அத்தேர்தல் நடத்தப்படக்கூடிய சாத்தியங்கள் 50 சதவீதம் இருக்கிறது. அவ்வாறு நடைபெற்றால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறும். இதையே ஒவ்வொருவரும் ஏன் அரசாங்கத்தின் கையாட்கள் கூட கூறுகிறார்கள். இதன் காரணத்தினால்தான் தேர்தலை நடத்தாமல் குழப்பியடிப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டுகிறது போலும். ஜெனீவாவில் ஏற்பட்ட மூக்குடைவுக்குப் பிறகு தேர்தலை நடத்தாமல் விடுவதற்கு அரசாங்கத்திற்குள் இருக்கும் ஒரு பிரிவினர் அஞ்சுகிறார்கள். வடக்கில் தேர்தலை நடத்துவதென்ற உறுதிமொழியை சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெரும் தயக்கத்துடனேயே பெறக்கூடியதாக இருந்தது. தீவிரவாதிகளும் போர்ப்பாதையில் செல்லும் மதகுருமாரும் இராணுவவாத பாசிஸ்டுகளும் தேர்தலை நடத்தாமல் தமிழர்களை ஏமாற்றவேண்டுமென்றே விரும்புகிறார்கள். வடக்கு தேர்தல் ஒருபோதுமே நடத்தப்படக்கூடாது என்பதே இவர்களின் எண்ணம்.

ஏதேச்சாதிகாரிகள் முற்றுமுழுதான அதிகாரங்களும் தங்கள் கைகளில் இருக்க வேண்டுமென்று விரும்புபவர்கள். ஒரு சிறிய பகுதியிலென்றாலும்கூட, எதிர்ப்பு இருக்குமென்றால் அவர்கள் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். அது அவர்களுக்குப் பெரிய இடர். ஒருமாகாண சபை கூட தங்களின் கட்டுப்பாட்டில் இருந்து தப்பி, தங்களுக்குச் சவாலாக அமைந்துவிடக்கூடாது என்பதில் ராஜபக்ஷ அரசாங்கம் குறியாக இருக்கிறது. அவ்வாறு ஒரு மாகாணசபை எதிரணியிடம் போகுமேயானால், பிறகு படிப்படியாக ஏனைய மாகாண சபைகளிலும் அந்த மாறுதல் பிரதிபலிக்க ஆரம்பித்துவிடக்கூடுமென்று அவர்கள் பயப்படுகிறார்கள். ஆட்சியாளர்களின் சுபாவத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில் வடமாகாண சபைத் தேர்தலை நடத்தக்கூடாது என்ற உள்நோக்கம் அவர்களைப் பொறுத்தவரை சரியானதே.

மறுதலையாக, அதே காரணத்துக்காக வடமாகாண சபையைத் தமிழர்கள் கைப்பற்றவேண்டியது முக்கியமானதாகும். இது ஒரு முதற்படி எதிர்காலச் சர்வாதிகாரிகளை எதிர்ப்பதற்கான பாதையைத் திறந்துவிடும். கவசத்தில் ஏற்படுகிற ஒவ்வொரு வெடிப்பும் (தேர்தல் தோல்வியும் பொருளாதாரப் பின்னடைவும் அல்லது ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம் தொடர்பான அம்பலப்படுத்தல்களும்) ஈட்டியைச் செலுத்தி துளைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தும். ராஜபக்ஷாக்களின் சைகைகளுக்கும், தலையசைப்புகளுக்கும் அடிபணியாமல் தனது சொந்தச் சிந்தனையில் சுயாதீனமாகச் செயற்படக்கூடிய ஒரு மாகாணசபை கவசத்தில் ஒரு வெடிப்பு அல்ல, பெரிய ஓட்டையாகவே அமையும். வடமாகாண சபைத் தேர்தலில் அரசாங்கத்தைத் தோற்கடிப்பது மாகாணவாசிகளைப் பொறுத்தமட்டில் மாத்திரமல்ல, தேசிய ரீதியிலும் பெறுமதியான காரியமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உண்மையில், மாகாண சபைகள், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண நிருவாகங்கள் மற்றும் முதலமைச்சர் பதவி சட்டரீதியாக வலுவற்றவையாகவே இருக்கின்றன. தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறுப்பு பறிக்கப்பட்டு ஆளுநர்களினால் செயற்படுத்தப்பட முடியும். ஆளுநர் ஜனாதிபதிக்கு 'ஆமாம்' போடுகிற பேர்வழியே தவிர, வேறு ஒன்றுமில்லை. மாகாண சபைகளுக்கு அற்பதொகை நிதியே வழங்கப்படுகிறது. அதுவும் குறிப்பாக திவிநெகும சட்டம் நிறைவேற்றப்பட்ட

**தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வெற்றிக்காக தமிழர்கள் வாக்களிக்க வேண்டும்**

பிறகு மாகாண சபைகளின் வளங்கள் பெருமளவுக்கு அபகரிக்கப்பட்டுவிட்டன. ஆனால் வடமாகாண சபையைக் கைப்பற்றுவது கூடுதல் சுயாட்சிக்கான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு வலுவான ஒரு நிலையை தமிழர்களுக்குக் கொடுக்கும். அந்த மாகாண சபை சட்ட ரீதியானதாக வலுவற்றதாக இருக்கலாம். ஆனால், அரசியல் ரீதியில் வலுவானது என்பதிற் சந்தேகமில்லை. இந்த அரசியல் கருவியை மக்களினால் தெரிவுசெய்யப்படக்கூடிய பிரதிநிதிகளிடமிருந்து அரசாங்கம் அபகரிப்பதைத் தடுத்தேயாக வேண்டும். வடமாகாண சபையை அரசாங்கம் பறித்துக்கொள்ளுமேயானால், அது தமிழர்களுக்கு பெரும் அவலமாகிப் போய்விடும்.

சுயாட்சிக்கான அல்லது சுய நிருவாகத்துக்கான சாதனம் ஒன்று, அது நலிவுறச் செய்யப்பட்டதாக இருந்தாலும் கூட- தங்களுக்கு மறுக்கப்படுவதாக தமிழர்கள் உலகம் பூராகவும் சென்று முறையிடுகிறார்கள். தங்களுக்கு மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட சபையொன்று வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்தார்கள். மாகாண சபை முறையில் என்னதான் மட்டுப்பாடுகள் இருந்தாலும், தேர்தலில் போட்டியிடாமல் தமிழர்கள் வடமாகாண சபையை ராஜபக்ஷவின் முகவர்களுக்கு தாரைவார்ப்பார்களேயானால், அது சர்வதேச ரீதியில் படுமோசமான ஒவ்வாமையாகிப் போய்விடும். உதாரணத்துக்கு, வடக்கின் குடிப்பரம்பல் கூட்டமைவை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்ட இராணுவம் மேற்கொள்கிற நிலப்பறிப்பை இந்தியா உட்பட வெளியுலகின் உதவியின்றித் தடுக்க முடியாமற் போய்விடும்.

ஒரு தமிழரின் ஊடாகவே இன்னொரு தமிழரைப் பார்க்க வேண்டும். தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுப்பவர்கள் பொறாமை காரணமாகவே அவ்வாறு செய்கிறார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சந்தேகிக்கிறார்கள். அவ்வாறு கோரிக்கை விடுக்கும் குழுக்கள் தேர்தலில் வெற்றி பெறக்கூடிய அளவுக்கு பலம் வாய்ந்தவையாக இல்லை. அதனால்தான் அவர்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் தேர்தலில் இருந்து வெளியே எடுத்துவிடுவதற்கு பகிஷ்கரிப்பு என்ற சூழ்ச்சித்தனமான அணுகுமுறை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஒருவர் கடந்த மாதம் லண்டனில் கூட்டமொன்றில் உரையாற்றிய போது சில தமிழர்கள் அவரை முஸ்லிம்களுக்காகக் குரல் கொடுப்பதற்காகவும் பரந்தளவிலான தேசியப் பிரச்சினைகள் குறித்து பேசுகின்றமைக்காகவும் குறைகூறியதாக நான் அறிந்தேன். 'எமது பிரச்சினைகள் குறித்து மாத்திரமே பேச வேண்டும்' என்பதே பல்லவி. ஜெனீவாவிலும் உலகம் பூராகவும் தங்களைப் பற்றி மாத்திரமே கவனம் செலுத்தப்படவேண்டும். ஏனைய சமூகங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்துப் பேசக்கூடாது என்று தமிழர்கள் நினைக்கலாமா?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எந்தப் பதாகையின் கீழ் போட்டியிட வேண்டும்? நியமனங்கள் எவ்வாறு பகிரப்பட வேண்டும்? என்பது குறித்து முரண்பாடுகள் நிலவுகின்றன. பல தமிழ்க்குழுக்களை உள்ளடக்கிய ஒரு பரந்த கூட்டணியே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. இலங்கைத் தமிழரசுக் கட்சியே அதன் பிரதான பங்காளிக்கட்சி. இந்தக் கூட்டமைப்பிற்குள் இரு தீவிரவாதக் குழுக்களும் இருக்கின்றன. (இவற்றின் தலைவர்கள் இப்போது இளைஞர்கள் அல்ல, நடுத்தரவயதைத் தாண்டுகிறவர்கள்). சில தமிழ்த்தேசியவாதக் கட்சிகளும்

PUBLIC LIBRARY JAFFNA

இருக்கின்றன. சம்பந்தனின் தமிழரசுக் கட்சி அதன் சொந்தச் சின்னத்தின் கீழேயே போட்டியிடத் தீர்மானித்தால் ஏனைய கட்சிகளுக்கு எவ்வாறு இடம்கொடுக்கப்படுகிறது என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். முதலமைச்சர் வேட்பாளர் தெரிவும் இன்னமும் செய்யப்படவில்லை. சம்பந்தனையும் சுமந்திரனையும் பாராளுமன்றத்தில் இருந்து விடுவிக்க முடியாது. அவர்கள் அங்கு முக்கியமான பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் பெயரும் சில சந்தர்ப்பங்களில் அடிபடுகிறது. அவர் பொருத்தமான

தேகமில்லை. பாரம்பரிய விவகாரங்கள் என்று நோக்கும்போது கல்வி, விவசாயம், மீன்பிடி, போக்குவரத்து, தொலைத்தொடர்பு, வேலைவாய்ப்பு மற்றும் இராணுவமயமாக்கலை இல்லாமற் செய்தல் ஆகியவை முன்னுரிமை கொடுக்கப்படவேண்டியவை. இருமுனைகளுக்கும் முக்கியத்துவத்தைக் கொடுப்பதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மிகுந்த நிதானமாகச் செயற்படவேண்டும். இந்த விவகாரங்கள் தொடர்பில் மக்களை அணி திரட்டுவதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்.

வடபகுதி நிலைவரம் மிகவும் வித்தியாசமானது. தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டு நித்திரைக்குச் சென்று

கணிசமான வீதத்தினர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கிறார்கள். படித்தவர்களும் வசதிபடைத்தவர்களும் இளைஞர்களும் வெளிநாடுகளுக்குச் சென்று விட்டார்கள்.

வரலாற்று ரீதியாக, யாழ்ப்பாண சமூகத்தின் அணிகலனாக விளங்கி வந்திருப்பது கல்வியே. அதை மீண்டும் உன்னதமான நிலைக்குக் கொண்டுவர வேண்டும். அதற்காக சமூகம் ஏங்கிக் கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தின் முக்கியத்துவம் உணர்த்தப்பட வேண்டும். புலம்பெயர்ந்த தமிழர்களின் உதவியுடன் தரமான கல்விக்கு ஏற்பாடுகளைச் செய்ய முடியும். தமிழ் மக்களினால் ஜனநாயகரீதியில் தெரிவு செய்யப்ப

**மாகாண சபை முறையில் என்னதான் மட்டுப்பாடுகள் இருந்தாலும் தேர்தலில் போட்டியிடாமல் தமிழர்கள் வட மாகாண சபையை ராஜபக்ஷவின் முகவர்களுக்கு தாரை வார்ப்பார்களேயானால் அது சர்வதேச ரீதியில் படுமோசமான ஒவ்வாமையாகிப் போய்விடும்**

ஆள். ஆனால், அவருக்கு அடிமட்ட மக்கள் மத்தியில் ஆதரவோ அல்லது அரசியல் அனுபவமோ இல்லை என்று அறிகிறேன். இதனால், மாவை சேனாதிராஜாவும் சுரேஷ் பிரேமச்சந்திரனுமே முதலமைச்சர் வேட்பாளராவதற்கான சாத்தியத்தைக் கொண்டவர்களாக எஞ்சி நிற்கிறார்கள். என்ன நடக்கப்போகிறதோ தெரியவில்லை. அறிய ஆவலாக இருக்கிறது.

### செயற்திட்டம்

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதன் செயற்திட்டத்தைப் பொறுத்தவரை இரு முனைகளில் கவனத்தைச் செலுத்த வேண்டும். ஒரு முனை பாரம்பரிய விவகாரங்களுடன் சம்பந்தப்பட்டது. மற்றையமுனை, தமிழ்ப்பகுதிகளுக்கு உண்மையான அதிகாரப்பரவலாக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான போராட்டத்துக்குரிய களமாக வடமாகாண சபையைப் பயன்படுத்தும் அரசியல் முக்கியத்துவத்துடன் சம்பந்தப்பட்டது. இரு முனைகளுமே சமமான முக்கியத்துவம் கொண்டவை என்பதிற் சந்

விட முடியாது. தேர்தலுக்குப் பிறகு மக்களை உற்சாகமாக வைத்திருப்பதற்கு இடையறாத முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இடையறாத நெருக்குதல்களைக் கொடுப்பதன் மூலம் மாத்திரமே காரியங்களைச் செய்வித்துக்கொள்ள முடியும். வெறுமனே தேர்தலில் வெற்றி பெறுவதில் எதுவும் இல்லை.

உள்நாட்டுப் போரின் மனிதவிலை, ஆயிரக்கணக்கானவர்களின் உயிரிழப்பு, ஆயிரக்கணக்கானவர்கள் படுகாயம், பொருளாதார வாய்ப்புகள் அடிபட்டுப் போனதால் வாழ்வாதாரம் இழப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். மரணவீதம் அதிகரிப்பும் தாழ்ந்த வாழ்க்கைத் தரமும் போரின் தாக்கத்தின் விளைவானவை. முன்னர் செழிப்பான நகரங்களாக இருந்தவை இன்று எலும்புக் கூட்டுப்பட்டினங்களாக காணப்படுகின்றன. 10 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுவாசல்களைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். வருமானம் படுமோசமாக வீழ்ச்சி கண்டிருக்கிறது. சனத்தொகையில்

டுகின்ற பிரதிநிதிகளை உள்ளடக்கிய நிருவாகம் ஒன்று அமையும் பட்சத்தில் வெளிநாட்டில் இருந்து நிதியுதவியைப் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.


விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, கள் இறக்கல் போன்றதுறைகள் மாகாண சபை முறையின் கீழ் அதிகாரப்பரவலாக்கம் செய்யப்பட்டவை. விவசாயத்திணைக்களத்தை துண்டாக்கிவிட்டு விவசாயத் திட்டமிடலையும் உற்பத்தியையும் மாகாணங்களுக்கு அதிகாரப்பரவலாக்கம் செய்ததால் உருவாக்கப்பட்ட குளறுபடி குறித்து 2013 மே 6 த ஐலண்ட் பத்திரிகையில் சிசில் தர்மசேன எழுதிய கட்டுரையை நான் வாசித்தேன். மணிக்கூட்டைத் திருப்பி ஓடவைக்க முடியாது. மத்தியமயமாக்கல் மீண்டும் செய்யப்பட்டுவிட்டது. ஆனால், இந்தக் குளறுபடி வெற்றிகொள்ளப்பட்டு, ஒரு துடிப்பான விவசாய உதவிப் பொறிமுறை நிலைநாட்டப்படக்கூடிய ஒரு இடமென்றால் அது வடமாகாணமேயாகும். அர்ப்பணிப்புச் சிந்தனையுடன் கடுமையாக




உழைக்கிற வடபகுதி விவசாயிகளின் விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்னுதாரணமாகத் திகழ்ந்த நிறுவனங்கள் என்று அதே கட்டுரையில் கலாநிதி தர்மசேன மிகவும் புகழ்ந்துரைத்திருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த விவசாயக் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி பற்றிய தகவல்களை வழங்கின. கடனுதவிகளைச் செய்ததுடன், சந்தை மீதும் கண்காணிப்பைச் செய்தன. தோன்றக்கூடிய சவால்களுக்கு முகங்கொடுப்பதாக இருந்தால் புதிய வடமாகாண சபை நிருவாகம் அதன் திட்டங்களைத் தெளிவாக வகுக்க வேண்டும்.

வடமாகாணத்தில் பொதுப் போக்குவரத்து சீர்குலைந்து போயிருக்கிறது. இதுவிடயத்தில் குறிப்பாக ரயில்வேயைக் குறிப்பிட்டுக் கூறலாம். போர் முடிவுக்கு வந்து நான்கு வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் வடபகுதிக்கு நவீன ரயில் சேவை இன்னும் ஆரம்பிக்கப்படாதது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதாகும். ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கான வேலைத்திட்டங்களை துரிதமாக முன்னெடுக்காததற்கு எந்தவிதமான சாக்குப் போக்கையும் கூறமுடியாது. இதனால் பொருளாதார நடவடிக்கைகளுக்கு பெருஞ்செலவு ஏற்படுகிறது. அத்துடன் பயணிகளுக்கும் பெரும் அசௌகரியம் ஏற்படுகிறது. வடபகுதிக்கு இன்னமும் ரயில் சேவை ஆரம்பிக்கப்படாதிருக்கின்றமை ஒரு அபத்தமான காரியமாக இருக்கும் போது சகல தரப்புத் தமிழ் அரசியல் தலைவர்களும் மௌனமாக இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மடுவுக்கு 43 கிலோமீற்றர் ரயில் பாதையை நிருமாணிப்பதற்கு 4 வருடங்கள் எடுத்திருப்பது சிரிப்புக்கிடமான விடயமாகும். இந்த நிலைமைக்கு அரசாங்கத்திற்குள்ளும் இராணுவத்திற்குள்ளும் இருக்கும் தான் தோன்றித்தனமான பேர்வழிகளையே நான் குற்றஞ்சாட்டுவேன். வடபகுதி ரயில் சேவையை ஆரம்பிப்பதற்கு செய்ய வேண்டிய பணிகள் இவ்வாறாக தாமதிக்கப்படுகின்ற அதேவேளை, ஜனாதிபதி தனது சொந்த ஊரில் பெருஞ்செலவில் பிரயோசனமில்லாத விமான நிலையத்தை நிர்மாணித்திருக்கிறார். ஒரு பூனைகூட அந்த விமான நிலையத்தில் இருந்து புறப்படவோ, வந்திறங்கவோ விரும்பமாட்டாது.

வடக்கை மீளக் கட்டியெழுப்புவதில் புதிய வடமாகாணசபை நிருவாகம் நல்ல பணியைச் செய்தால், மத்திய அரசாங்கம் ஒவ்வொரு கட்டத்திலும் முட்டுக்கட்டைகளைப் போடும் என்பதிற் சந்தேகமில்லை. ராஜபக்ஷ ஆட்சியின் குணாதிசயத்தைப் பற்றி எந்த மாயையையும் கொண்டிருக்காதீர்கள். அது ஒரு பேரினவாதக் கூட்டம். குறிப்பாக, சட்டம், ஒழுங்கு விவகாரங்கள் என்று வரும்போது நெடுகிலும் மத்திய அரசாங்கத்துடன் வடமாகாண சபை நிருவாகம் பொருதுப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டியிருக்கும். இராணுவத்தின் மிரட்டல்களை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு புதிய புதிய

**முதலமைச்சர் வேட்பாளரை பொறுத்தவரை சம்பந்தனையும் சுமந்திரனையும் பாராளுமன்றத்திலிருந்து விடுவிக்க முடியாது. நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரனின் பெயரும் அடிபடுகிறது. அவர் பொருத்தமான ஆள். ஆனால் அடிமட்ட மக்கள் மத்தியில் ஆதரவோ, அரசியல் அனுபவமோ இல்லை. இதனால் மாவையும் சுரேஷுமே முதலமைச்சர் வேட்பாளராகுவதற்கான சாத்தியத்தைக் கொண்டவர்களாக எஞ்சி நிற்கிறார்கள்**



மாகாண நிருவாகம் தொடர்ச்சியான முயற்சிகளில் ஈடுபட வேண்டியிருக்கும். படையினரை வீதிகளில் இருந்து அகற்றி, முகாம்களில் முடக்கி வைத்திருக்கவும் வடக்கில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைக்கவும் பெரு முயற்சியெடுக்க வேண்டியிருக்கும். தற்போது நாட்டில் பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லை. ஆனால், பொது மக்களைத் தொடர்ந்தும் ஒடுக்கி வைத்திருக்க வேண்டுமென்பதற்காக இராணுவம் பயங்கரவாதம் பற்றி இன்னமும் பேசிக் கொண்டிருக்கிறது.

### இடைக்காலத்துக்குரிய போராட்டங்கள்

தமிழ்ப்பகுதிகளில் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை நிருவாகத்தின் கைகளில் பொலிஸ் அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வலியுறுத்துவதில் ஓய்வு இருக்கக்கூடாது. பொலிஸ் படையில் ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்களே இருந்தால், அதுவும் அவர்கள் இன்னொரு சமூகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் கோட்பாட்டில் ஊறியவர்களாகவும் இருந்தால் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பக்கச்சார்பின்மைக்கு இடமிருக்காது. பொலிஸ் அதிகாரங்கள் தனக்குத் தரப்படவேண்டுமென்ற கோரிக்கையை வடமாகாணசபை நிருவாகம் இடையறாது வலியுறுத்துவதற்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு போதுமான அளவு அதிகாரத் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்ற வண்ணமிருக்கின்றன என்பதும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதொன்றாகும். விடா உறுதி இருந்தால் இது விடயத்தில் வெற்றி நிச்சயம் சாத்தியமாகும். விஞ்ஞாபனத்தின் இருபக்கங்கள் பற்றி இது வரை கருத்துகளை முன்வைத்தேன். அதாவது செயற்திட்டம் பற்றியும் ஜனநாயக அரசுக் கோலம் (Democratic state configuration) ஒன்றை நோக்கிய இடைக்கால நோக்கு பற்றியும் கூறினேன்.

இந்த இடைக்கால அம்சத்துக்கு (Transitional aspect) இருபக்கங்கள் இருக்கின்றன. ஒன்று தமிழ் மக்கள் தங்கள் சொந்த அலுவல்களை தாங்களே கவனித்துக்கொள்ள வகை செய்யக்கூடியதாக கணிசமான அளவு அதிகாரங்களைக் கொண்ட கட்டமைப்பை உருவாக்குவதற்கு முயற்சிப்பது. மற்றையது, ராஜபக்ஷ ஆட்சியின் சர்வாதிகாரத்தனமான அத்துமீறுகைகளைத் தடுத்தல். முதலாவது பொதுவான பிரச்சினை - தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்று வழமையாக அழைக்கப்படுவது. இது ராஜபக்ஷ ஆட்சிக்கு மாத்திரம் பிரத்தியேகமானதல்ல. மத்தியில் எவர் ஆட்சியதிகாரத்துக்கு வந்தாலும் தீர்த்து வைக்க வேண்டிய பிரச்சினையாகும். இரண்டாவது, எதேச்சாதிகாரத்தையும் பெருமுதலாளித்துவ (Corporatist) அரசையும் நிலை நிறுத்துவதில் விடாப்பிடியாக நிற்கும் இந்த ஆட்சியுடன் தொடர்புடைய மிகவும் பிரத்தியேகமான விடயமாகும்.

நான் மனதில் கொண்டிருக்கின்ற விஞ்ஞாபனத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு அக்கறை இருக்குமென்பது சந்தேகமே. கூட்டமைப்பு வடமாகாண சபையை தேர்தலுக்குப் பிறகு அமைத்துக்கொண்டதும் தமிழர்களும் நியாயமான ஆட்சி முறையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு அதை களமாகப் பயன்படு த்தமுடியும். வடமாகாண சபை ஒரு முடிவு அல்ல, கூடுதலான அளவுக்கு கணிசமான அதிகாரப் பரவலாக்கலுக்கான ஒரு படியேயாகும். மற்றைய அம்சம், தெற்கில் உள்ள ஜனநாயக இயக்கங்களுடன் அதாவது சிங்களவர்களுடனும் முஸ்லிம்களுடனும் ஒத்துழைப்பது. ராஜபக்ஷ சகோதரர்களின் நோக்கங்களை, பேரவாக்களைத் தோற்கடிப்பதே இத்தகைய ஒத்துழைப்புக்கான நோக்கமாக இருக்க வேண்டும். இரு போராட்டங்களுமே பிரிக்க முடியாதவை. ஒரு போராட்டத்தின் முன்னேற்றம் மற்றைய போராட்டத்துக்கான வாய்ப்புகளைத் தோற்றுவித்து பலப்படுத்தும்! ■


---

*(19ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

அரசியல் பிரதிநிதிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, சட்டரீதியான ஆட்சேபனை கள் இருப்பின் அவற்றுக்கு நீதிமன்றங்களின் ஊடாக பரிகாரம் காண்பதற்குத் தேவையான கால அவகாசத்தை வழங்குவதுதான் நாட்டின் பொதுவான நடைமுறையாக இருந்து வருகிறது.

முதலில் இராணுவ ஜெனரலாக இருந்து பின்னர் அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட டிவைற் ஐசனோவர் அரசியல் தீர்மானங்களை மேற்கொள்வதில் இராணுவத்துக்கும் பெருமுதலாளித்துவ நிறுவனங்களுக்கும் இருக்கும் பாத்திரத்தை குறைக்க விரும்பினார். இராணுவமும் பெரு முதலாளித்து நிறுவனங்களும் அரசியல் தீர்மானங்களை மேற்கொள்வதில் செல்வாக்குச் செலுத்திய நிலைவரத்தை ஆங்கிலத்தில் அவர் 'Military-industrial complex' என்று வர்ணித்தார். கையில் துப்பாக்கிகளை வைத்திருப்பவர்களுக்கும் நிராயுத பாணிகளுக்குமிடையே சமத்துவம் இருக்க முடியாது என்று அப்போது அவர் கூறினார். இதன் காரணத்தினால் தான் ஆட்சிமுறையில் இராணுவ, சிவிலியன் உறவுகள் பிரச்சினைக்குரியவையாகின்றன. மேலும் இதன் காரணத்தினால் தான் நிலைபெற்று விட்ட ஜனநாயகங்கள் இரண்டையும் வேறுபடுத்தி வைத்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் விஸ்தரிப்பும் அங்குள்ள நிலங்களை சுவீகரிக்க மேற்கொள்ளப்படுகிற நடவடிக்கைகளும் இலங்கை வாழ்வில் இராணுவத்தின் பாத்திரத்தின் விரிவாக்கமாகவே நோக்கப்பட வேண்டும். இது எம்மெல்லோரையும் பாதிக்கும். நாட்டின் ஒரு பகுதியில் நடைபெறுவது ஏனைய பகுதிகளிலும் விளைவுகளை ஏற்படுத்தும்! ■



குசல்பெரேரா



# இராணுவமயத்திற்கும் நில அபகரிப்புக்கும் ஓமந்தை எல்லையல்ல

உள்நாட்டு அரசியல்

'இராணுவம் மகிழ்ச்சியாக இல்லை. நிலைவரங்களை மிகுந்த எச்சரிக்கையுடன் அவதானித்துக் கொண்டிருக்கிறது' - சிலவாரங்களுக்கு முன்னர் முன்னாள் பாகிஸ்தான் ஜனாதிபதியும் இராணுவத் தளபதியுமான பெர்வெஸ் முஷாரப் கைது செய்யப்பட்டது தொடர்பாக கருத்துத் தெரிவித்த போது கராச்சியைச் சேர்ந்த பாதுகாப்பு மற்றும் அரசியல் ஆய்வாளரான அலி கே.ஷிஸ்தி இவ்வாறு தான் கூறினார். நிலைவரத்தை 'மிகுந்த அசௌகரியமானதாக' தற்போது சேவையில் இருக்கும் சில ஜெனரல்கள் காண்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். பாகிஸ்தான் இராணுவம் அது விரும்பிய விதத்தில் நிகழ்வுப் போக்குகளைத் தீர்மானிக்கக்கூடிய செல்வாக்கு நிலையில் இருப்பதால், எந்த சிவிலியன் அர

## காணி, இனத்துவம், இராணுவம்

சாங்கமும் அதன் விருப்புக்கேற்ற முறையில் செயற்பட முடிவதில்லை என்பதும் வெளிப்படையானது. முஷாரப்பைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டபோது அவரின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த இராணுவ அதிகாரிகள் நீதிமன்ற வளாகத்திற்குள் இருந்து அவசர அவசரமாக வெளியே கூட்டிச் சென்ற சம்பவத்தையடுத்து இன்னொரு ஊடகவியலாளர் சொன்னார் 'பாகிஸ்தான் இராணுவத்தின் மீது நம்பிக்கையில்லாமல் இருந்திருந்தால், முஷாரப் அஞ்ஞாத வாசத்திலிருந்து நாடு திரும்பியிருக்க மாட்டார்' என்று, பாகிஸ்தானில் இராணுவமே சகல வல்லமையும் பொருந்தியதாக விளங்குகிறது. அது தனது சொந்தத்தில் வாணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது. ஆங்கிலத்தில் அதை Mil-bus (Business under military) என்று அழைக்கிறார்கள்.

இலங்கையில் நிலைவரம் எவ்வாறு வித்தியாசமானதாக இருக்கிறது? பொன்சேகா நிச்சயமாக 'இலங்கையின் முஷாரப்' அல்ல. அத்துடன் ராஜபக்ஷ அரசாங்கம் பாகிஸ்தானில் பொதுத்தேர்தலுக்கு முன்னதாக முன்னாள் நீதியரசர் மிர்ஹசார் கான் கோசோ தலைமையில் நியமிக்கப்பட்டதைப் போன்ற இடைக்கால அரசாங்கமும் அல்ல. இலங்கை இராணுவம் பாகிஸ்தான் இராணுவத்தைப் போன்று பொருளாதார ரீதியில் வல்லமை கொண்டதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அது 1962 ஆம் ஆண்டில் இருந்ததைப் போன்ற (திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அவரின் கணவர் எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்காவின் நெருங்கிய உற

**சேவைகளை வழங்குவதில் ஆற்றல்மிக்க ஒரு பிரிவினராக இராணுவத்தினரையும் பாதுகாப்புத் துறையையும் நகர்ப்புற சிங்கள நடுத்தர வர்க்கத்தினர் ஏற்றுக் கொள்கின்றமை படையினருக்கு ஒரு அனுகூலமாக அமைகிறது**

வினர் கேணல் எவ்.சி.டி.சேரம் தலைமையில் கேணல்களினால் சதி முயற்சி மேற் கொள்ளப்பட்ட காலம்) பழைய, பாரம்பரிய, சம்பிரதாய பூர்வ இராணுவமாக இன்று இல்லை. அது எண்ணிக்கையிலும் படைப்பிரிவுகளிலும் மிகவும் பாரியதாக மாறிவிட்டது. 'உள்நாட்டு எதிரியை' கையாளுவதற்கான பயிற்சியையும் புலனாய்வு மற்றும் கண்காணிப்பு ஆற்றல்களையும் பெற்றதாக விளங்குகிறது. இலங்கை இராணுவம் சுமார் 30 வருடகால கொடூர யுத்தத்தின் ஊடாக நன்கு பயிற்றப்பட்டதாக கடுமையடைந்ததாக விளங்குகிறது. இந்த இராணுவம் அது நிலை வைக்கப்பட்டிருக்கிற சூழலை விளங்கிக் கொள்வதில் இன்று வேறுபட்ட ஒரு 'மனோபாவத்தை' வளர்த்துக் கொண்டிருக்கிறது.

உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பிறகு இலங்கை இராணுவம் (கடற்படை, விமானப்படையையும் உள்ளடங்கலாக) சிவில் நிருவாகத்தில் வலிதாக்கிக் கொள்ளப்பட்டு வருகின்றது. வடமாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்கும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருக்கின்ற இரு ஆளுநர்கள், திருகோணமலை மாவட்டத்தின் அரசாங்க அதிபர், அமைச்சுச் செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள், பணிப்பாளர்கள், வெளியுறவுச்சேவையில் பல இராஜதந்திரப் பதவிகள் என்று பெருவாரியான முக்கிய பொறுப்புகளில் எல்லாம் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நியமனங்களை எந்தத் தவறு மற்றவை என்றும் வழமையானவை போன்றும் சிங்கள சமுதாயத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பாதுகாப்புப் படைகள் பொருளாதார முயற்சிகளில் ஈடுபட ஆரம்பித்திருப்பது தென்னிலங்கையில் எந்த விதமான வியப்பையும் தரவில்லை. படையினர் இப்போது படகுச் சவாரிகளையும் ஹெலிகொப்டர் சுற்றுலாக்களையும் நடத்துகிறார்கள். அலங்கார நிலையங்கள், உல்லாசப் பிரயாண விடுதிகள், ஹோட்டல்கள், விடுமுறைக் களிப்பிடங்கள், கோல்வ் விளையாட்டு மைதானம் ஆகியவற்றையும் கூட பாதுகாப்புப் படையினர் நடத்துகிறார்கள். உள்ளூர் மட்டத்தில் விவசாயத்திலும் இறங்கியிருக்கும் படையினர் வடக்கு, கிழக்கில் பெருமளவில் நிலங்களையும் கையகப்படுத்தியிருக்கிறார்கள்.

இத்தகைய ஒரு இராணுவம் அரசியலைப்பற்றி அக்கறையில்லாததாக இருக்கவில்லை. இருக்கவும் முடியாது. மிகவும் முக்கியமான நிறுவனம் என்றவகையில் அரசியல் அதிகாரத்தையும் அனுபவிக்கும் நிலையில், உயர்மட்டத்தில் தீர்மானங்களை மேற்கொள்வதில் பங்கேற்கக்கூடிய அந்தஸ்தை பெற்றதாக இராணுவம் இருக்கிறது. அரசாங்கத்தை நடத்துவதில் இராணுவம் சுயமாகவே ஒரு பொறுப்பை எடுத்துக்கொண்டது போன்ற ஒரு தோற்றப்பாட்டைக் காணக்கூடியதாக இருக்கிறது. சேவைகளை வழங்குவதில் ஆற்றல் மிக்க ஒரு பிரிவினராக இராணுவத்தினரையும் பாதுகாப்புத்துறையையும் நகர்ப்புற சிங்கள நடுத்தர வர்க்கத்தினர் ஏற்றுக்கொள்கின்றமை படையினருக்கு ஒரு அனுகூலமாக அமைகிறது. சிவில் அரசாங்கத்தை வழி நடத்துவதற்கு மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் தலைமைத்துவத்திடம் அபிவிருத்திக்கான முறையான செயற்திட்டமும் இல்லை. போரினால் பாதிக்கப்பட்ட நாட்டுக்கான அரசியல் தீர்வும் இல்லை. போரின் விளைவால் பெற்ற சிங்கள முக்கியத்துவத்திலும் 'புதிய இராணுவத்தின்' அதிகாரத்திலும் அந்த அரசியல் தலைமைத்துவம் உயிர்வாழ்கிறது. தற்போதைக்கு இருதரப்பினரும் தங்கள் பரஸ்பரம் தொடர்ந்து பிழைப்பதற்காக தங்களுக்கிடையே நலம்பயக்கும் பாத்திரங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கில் குடிமக்களுக்குச் சொந்தமான காணிகள் அபகரிக்கப்படுகின்ற போக்கு தீவிரமடைந்திருப்பதை, கடுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்ட சிங்கள அரசியல் பின்புலத்திலேயே ஆராய்ந்து விளங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. வெறுமனே இதை ஜனநாயக சமூகமொன்றிலே தோன்றக்கூடிய சட்ட ரீதியான அல்லது நிருவாகப் பிரச்சினையாகப் பார்த்தலாகாது. எந்தவொரு ஜனநாயக சமுதாயத்திலும் அவ்வப்போது சட்டமீறல்கள் இடம்பெறலாம். ஆனால், சகல வேளைகளிலும் சட்டங்கள் இடைநிறுத்தப்பட்டு முற்று முழுதான ஒடுக்குமுறை நிலவமுடியாது.

எனவே, வடக்கு, கிழக்கில் காணிகள் எடுக்கப்படுகின்ற விவகாரத்தை அபிவிருத்தித் திட்டங்களுக்காக தெற்கைச் சேர்ந்த குடும்பங்களைக் குடியமர்த்துவதுடன் சம்பந்தப்பட்ட நில அபகரிப்பு என்பதை விட கூடுதலான அளவுக்கு பாரதூரமான பிரச்சினையாகப் பார்க்க வேண்டும். அதிவேகப் பாதைகளை நிர்மாணிப்பது அல்லது நகரங்களில் சட்டவிரோத நிருமாணங்களை அகற்றுவது போன்ற திட்டங்களுக்கு நிலங்களை எடுக்கின்ற விடயத்தைப் பொறுத்தவரை, இதுவரை சட்ட ரீதியான செயன்முறைகளின் ஊடாகவே அவை செய்யப்பட்டன. அத்துடன் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்னதாக தெற்கில் உள்ள மக்கள் சட்டத்தின் துணையை நாடக்கூடிய

தாகவும் இருந்தது. தெற்கு அதிவேக கப்பாதை நிருமாணம் (ஜனாதிபதி திருமதி குமாரதுங்க மற்றும் பிரதமர் விக்கிரமசிங்க காலத்தில்) மக்கள் செய்த சட்ட ரீதியான தலையீடுகளின் விளைவாக குறிப்பாக, பண்டாரகம, அக்மீமன பகுதிகளில் தடுத்து நிறுத் தப்பட்டது. பிறகு ஜனாதிபதி ராஜபக் ஷவின் சொந்தச் 'சிந்தனையின்' கீழான ஒரு திட்டம் போன்று தெற்கு அதிவேகப்பாதை முழுவதையும் நிர்மாணிப்பதற்கு அனுமதிக்கப்பட் டதைக் காணக்கூடியதாக இருந்தது.

அவ்வாறு தெளிவாக அடை யாளம் காணப்பட்டு ஒழுங்கமைக்கப் பட்ட திட்டங்களுக்காக வடக்கு, கிழக்கில் காணிகள் சுவீகரிக்கப்பட வில்லை. 1950 ஆம் ஆண்டின் இல 9 காணி சுவீகரிப்பு சட்டத்தின் கீழான ஏற்பாடுகளின்படியோ அல்லது காணி அபிவிருத்தி ஒழுங்கு விதிக ளின் கீழோ இந்தக் காணிகள் எடுக் கப்படவில்லை. அரசினால் காணி சுவீகரிக்கப்படுவதற்கு பொதுப்பாது காப்பு ஒழுங்குவிதிகளின் கீழ் அவசர காலச் சட்டவிதிகள் நடைமுறையில் இருக்கவுமில்லை. வடக்கு, கிழக்கில் காணிகள் எந்தவொரு சிவில் நிருவா கத்தினாலும் சுவீகரிக்கப்படவில்லை. பாதுகாப்புப் படைகளின் அச்சுறுத் தும் தன்மையான பிரசன்னத்துட னேயே காணி சுவீகரிப்புகள் இடம் பெறுவதைக் காணக்கூடியதாக இருக் கிறது. சட்ட ஏற்பாடுகளின் ஊடாக தனியொரு நடவடிக்கையில் சிவில் நிருவாகமொன்றினால் முழுக் கிரா மங்களையும் எடுத்துவிட முடியாது. ஒரு சிவில் நிருவாகம் என்னதான் பொறுப்பற்றதாக இருந்தாலும், அதன் சொந்த தோற்றுவாய்களினால் ஓரளவுக்கு கட்டுப்படுத்தப்படுவதா கவும் அதன் சிந்தனையை வடிவமை க்கிற சிவில் வாழ்க்கையுடன் இணை ந்ததாகவும் இருக்கிறது. மன்னாரின் தென்முனையில் 400 குடும்பங்கள் வாழ்ந்த முள்ளிக்குளம் கிராமம் இப் போது கடற்படையின் வடமேற்கு தலைமையகத்தைக் கொண்டிருக்கி றது. இதை பாதுகாப்புச் செயலாளரே திறந்து வைத்தார். சிவில் அணுகு முறையுடன் சிந்திக்காத, சிவில் அணுகுமுறையுடன் தீர்மானங்களை மேற்கொள்ளாத ஒரு படை அணி களைக் கொண்ட அமைப்புகளினால் குடிமக்கள் அவர்கள் வாழ்விடங்க ளில் இருந்து ஒட்டுமொத்தமாக அப் புறப்படுத்தப்படுகின்றமைக்கு இது ஒரு சான்று ஆதாரமாக இருக்கிறது.

'மூன்று வாரங்களுக்கு முன்னர் அரசாங்கத்தினால் மிகவும் ஆபத் தான நடவடிக்கையொன்று மேற் கொள்ளப்பட்டதைக் காணக்கூடிய தாக இருந்தது. யாழ்ப்பாணக் குடா நாட்டில் வலிகாமம் வடக்கில் மரங்க ளில் (காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழான) அறிவித்தல் கள் ஒட்டப்பட்டன. படைவீரர்களுக் கான குடியிருப்புகளை அமைப்பதற் காக சுமார் 6400 ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்படவிருப்பதாக அந்த அறிவித்தல்களில் கூறப்பட்டது. பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களுக் குச் சொந்தமான நிலமே இதுவாகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டவல்லுனருமான எம்.ஏ.சுமந்தி ரன் எழுதியிருக்கிறார்.

இது நிச்சயமாக மிகவும் ஆபத்தா னதாகும். ஏனென்றால் இது அரசாங் கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஒரு நடவடிக்கை என்றும் மேலும் விசாரித்தறியப்பட வேண்டியதாக இருக்கிறது என்றும் அவர் கருதுகி றார். சுமந்திரன் கூறுகிற நிலத்தின் பரப்பளவு 6381 ஏக்கராகும். அத்து டன் பல ஆயிரம் தமிழ் மக்கள் என்று அவர் கூறுவது 12 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த மக்களேயாகும். இவர்கள் வலிகாமம் வடக்கு மற்றும் கிழக்கு கிராம உத்தி யோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்தவர் களாவர். எந்தளவு பெருந்தொகையா னவர்கள் என்பதையும் பொருட்படுத் தாமல், சொந்த மக்களின் வாழ்வை நிர்மூலம் செய்வதற்கு ஒரு அரசாங் கத்தை அனுமதிப்பது படுபயங்கர மான ஒரு காரியம் என்கிற அதே வேளை, நிலத்தைச் சுவீகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் அரசி யல் தலைமைத்துவத்தினுடையதா அல்லது இராணுவ உயர் பீடத்தினு டையதா என்பது நிச்சயமாகத் தெரி யாதிருக்கின்ற நிலைவரம் மேலும் பயங்கரமானதாகும். போரின் முடி வுக்குப் பின்னரான வடக்கு, கிழக்கில் பல சம்பவங்கள் சிவில் நிருவாகத்தி னதோ அல்லது கொழும்பில் உள்ள பாதுகாப்புத்துறை உயர் பீடத்தி னதோ செயற்பாடுகளின் விளைவா னவையல்ல. ஆனால், அவை உயர் பீடத்தின் கோட்பாட்டு சிந்தனையின் வரையறைகளுக்குள் வருகின்றன.

வீதிகளினதும் கிராமங்களினதும் பெயர்களை சிங்களத்துக்கு மாற்று வது, சிங்கள வர்த்தகர்களுக்கு வியா பார வாய்ப்புகளை வழங்குவது, போன்ற அன்றாட தீர்மானங்கள் எப் போதுமே கொழும்பில் இருந்து வழி நடத்தப்படாமல் இருக்கக்கூடும். மிக வும் பாரதூரமான விடயமென்ன வென்றால், இந்த நிகழ்வுப் போக்கு கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தமிழ்ச் சமூகத்தின் மீது எதிர்மறையான வழி யில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதாகும்.

தமிழ் மக்களிடமிருந்து இந்தக் காணிப் பறிப்பு யாழ்ப்பாணக் குடா நாட்டில் மாத்திரம் இடம்பெற வில்லை. வன்னியிலும் கிழக்கு மாகா ணத்திலும் கூட இடம்பெற்ற வண்

**அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கில் குடிமக்களுக்குச் சொந்தமான காணிகள் அபகரிக்கப்படுகின்ற போக்கு தீவிரமடைந்திருப்பதை, கடுமையாக இராணுவ மயப்படுத்தப்பட்ட சிங்கள அரசியல் பின்புலத்திலேயே ஆராய்ந்து விளங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது**

PUBLIC LIBRARY JAFFNA

ணமேயிருக்கின்றன. போருக்குப் பின்னரான நல்லிணக்கம், மீள்குடியமர்வு மற்றும் தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தொடர்பில் இவ்வருடம் மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இரண்டாவது தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பிறகு, அதுவும் எதிர்வரும் நவம்பரில் பொதுநலவரசு நாடுகளின் தலைவர்களின் உச்சி மகாநாடு இலங்கையில் நடத்தப்படவிருக்கும் நிலையில், இந்த காணி அபகரிப்பு தீவிரப்படுத்தப்பட்டிருக்கிறது என்பது மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியதாகும். மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தின் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை, சிறுபான்மையின மக்களின் உரிமைகள் மீது ஏறி மிதிப்பது தற்போதைய பின்புலத்தில் பெரும் கெடுதியைக் கொண்டுவரும். வெளியுலகம் பார்த்துக்கொண்டிருக்கிறது என்பதற்காக அல்ல, சிறுபான்மை மக்களுடன் நல்லிணக்கத்துக்காகப் பாடுபட வேண்டிய இத்தருணத்தில் அவர்களின் நலன்கள் குறித்து கிஞ்சித்தேனும் அக்கறை காட்டாமல் அவமதிப்பது பெரும் அநீதியாகும்.


ஆனால், இந்த ராஜபக்ஷ அரசாங்கம் காணி அபகரிப்புகள் மற்றும் சிங்களக் குடியேற்றங்கள் போன்ற நடவடிக்கைகளின் ஊடாக குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் கொள்கையைத் தொடர்ந்து முன்னெடுத்துக் கொண்டேயிருக்கிறது. குடிப்பரம்பலை மாற்றும் திட்டங்களில் இராணுவம் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் பாத்திரத்தை வகிக்கிறது.

வடக்கு, கிழக்கில் உள்ள இந்தப் பிரச்சினைகளில் இருந்து ஆட்சியின் அரசியல் தலைமைத்துவம் அடிக்கடி தூரவிலகியே நிற்கிறது. இராணுவத்தினால் மேற்கொள்ளப்படுகிற காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் எல்லாம் வெறுமனே நிருவாக ரீதியானவை என்ற தோற்றப்பாட்டைக் கொடுப்பதே தலைமைத்துவத்தின் இந்தப் போக்கின் நோக்கமாகும். சிங்களக் குடியேற்றங்கள் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றத்தில் கிளப்புகின்ற பிரச்சினைகளையும் அரசாங்கம் அலட்சியம் செய்கிறது. பாராளுமன்றத்துக்கு வெளியே தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் விமல் வீரவன்ச மற்றும் ஜாதிக ஹெல உறுமய போன்ற சக்திகள் அரசாங்கத்தின் செயற்பாடுகளை நியாயப்படுத்துவதற்கான அரசியல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றனர். வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக மாகாண சபைகளிடமிருந்து காணி அதிகாரங்களையும் பொலிஸ் அதிகாரங்களையும் பறித்துவிட வேண்டும் என்று மே தினத்தன்று விமல் வீரவன்ச உரத்துப் பேசி கோரிக்கை விடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. மாகாண சபைகளிடம் காணி, பொலிஸ் அதிகாரங்கள் விட்டு வைக்கப்பட்டால் அது தமிழ் ஈழத்துக்கான வாசற் கதவைத் திறந்துவிடும் என்று அவர் காரண மும் கூறினார். இது உண்மையில் வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் தொடர்ச்சியான பிரசன்னத்தை நியாயப்படுத்துவதற்கு முன் வைக்கப்படுகின்ற அரசியல் விளக்கமே தவிரவேறு ஒன்றுமில்லை. இத்தகையை சிங்களப் பிரசார மேடைகள் அரசாங்கம் அதன் பிரதான தளமாக பாதுகாப்புத்துறைக்கு முக்கியத்துவத்தைக் கொடுத்து வைத்திருப்பதை அதன் தலைமைத்துவம் நியாயப்படுத்துவதற்கு வசதியாக அமைகின்றன.

அதனால், நில அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தை ஒரு உதிரியானதாக அதாவது வேறு பிரச்சினைகளுடன் தொடர்பில்லாததாகப் பார்க்கக் கூடாது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினாலும் இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, அதிகாரப்பகிர்வை அடிப்படையாகக் கொண்ட நியாயபூர்வமான அரசியல் தீர்வொன்றை முன் வைக்குமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டிய அவசியத்தை இந்தப் பிரச்சினை உணர்த்தி நிற்கிறது. அரசியல் தீர்மானங்களை எடுப்பதில் அக்கறைகாட்டுகிற பாதுகாப்புத் துறைக்கும் மக்களினால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தின் அரசியல் தலைமைத்துவத்துக்கும் இடையே தெளிவானதும் திட்டவட்டமானதுமான அரசியல் ஆப்பு வைக்கப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது. இது மிகவும் கொடூரமாக ஒடுக்கப்பட்டு குடிபெயரச் செய்யப்பட்ட வடக்கு தமிழ்ச் சமூகத்திற்கு மாத்திரம் உரிய பொறுப்பு அல்ல. கொழும்பில் வாழுகிற செல்வாக்கு மிக்க நடுத்தர வர்க்க தமிழர்களுக்கும் உரிய பொறுப்பாகும். சிங்கள சமுதாயத்துக்கும் உரிய பொறுப்பாகும். ஏனென்றால் இராணுவமயமாக்கலும் நில அபகரிப்பும் ஓமந்தை சோதனைச் சாவடியுடன் நின்றுவிடப் போவதில்லை! ■

> நில அபகரிப்புக்கு எதிரான போராட்டத்தை ஒரு உதிரியானதாக அதாவது வேறு பிரச்சினைகளுடன் தொடர்பில்லாததாகப் பார்க்கக்கூடாது. தமிழ் மக்களினால் ஏற்றுகொள்ளப்படக்கூடிய நியாயமான அரசியல் தீர்வொன்றை முன் வைக்குமாறு அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க வேண்டிய அவசியத்தை இந்த பிரச்சினை உணர்த்தி நிற்கிறது

உள்நாட்டு அரசியல்



க.குருநாதன்

# தனியார் காணிகளை பாதுகாப்புப்படைகளுக்கு எடுத்தல் சட்ட ரீதியானதா?

ஐ.நா.சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தின் உறுப்புரிமை 17இல் பொது மக்களின் காணிகள் அநாவசியமாக அபகரிக்கப்படுவது தடுக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் காணிகளை தேசிய பாதுகாப்புக்கருதி பறிமுதல் செய்வதை மீளாய்வு செய்ய வேண்டும் என்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் விஸ்வரூபம் எடுத்திருப்பது ஆயிரக்கணக்கான நிலங்களை ஆயுதப்படைகளுக்கு எடுப்பதற்காக காணி எடுத்தல் (சுவீகரிப்பு) சட்டத்தின் கீழான பிரிவு 2 விளம்பரம் ஒட்டப்பட்டுள்ளமையே. இது நியாயமானதா என்பதை பார்ப்போம்.

காணி எடுத்தல் சட்ட அத்தியாயம் 460 பின்வருமாறு கூறுகிறது. 'பொதுத்தேவைகளுக்காக காணி மற்றும் பிறசேவைகளையும் சுவீகரிப்பதற்கு அந்த ஏற்பாடுகளுடன் தொடர்புடைய அதனோடு இணைந்த விடயங்களுக்காக ஏற்பாடுகளை தயாரிப்பதற்காகவுமான சட்டம்' என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது.

ஆகவே பொதுத்தேவைகருதியே காணிகளை எடுத்தல், எடுத்தல் சட்டமான இல. 09இன் 1950 ஆம் ஆண்டு அதன் திருத்தங்களும் ஒழுங்கு விதிகளும் கட்டளைகளும் கூறுகின்றன.

பொதுத்தேவை என்பது இச்சட்டத்தின் பிரிவு 65 இல் பின்வருமாறு பொருள் கோடல் செய்யப்பட்டுள்ளது. 'பொதுத்தேவை' என்பது இச்சட்டத்தின் அல்லது வேறு எழுத்திலான சட்டத்தில் பொதுத்தேவை எனக் கருதப்படும் தேவை இதிலடங்கும்' எனக் கூறுகிறது. ஆகவே பாதுகாப்பு பட்டாளியன் தலைமையகம் உயர் பாதுகாப்பு வலயப்பகுதி அமைந்துள்ள இடங்களான பொது மக்களின் காணிகளை எடுத்தல் சட்டத்தின் கீழ் எடுத்தல் பொதுத் தேவையா என்பது கேள்விக்குரிய விடயம். அவ்விடங்களை பொதுமக்கள் பாவிப்பதும் இல்லை பாதுகாப்பு படைச்சட்டங்களில் கூட பொதுத் தேவை இன்றைவரை வரைவிலக்கணப்படுத்தப்படவில்லை. காணி எடுத்தல் சட்டத்தில் கூட பாதுகாப்பு பட்டாளியன் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் பொதுத்தேவை என சட்டத்தில் எப்பிரிவிலுமோ அல்லது அச்சட்டத்தின் பொருள்கோடல் பிரிவு 65 இலுமோ வேறு சட்டங்களிலுமோ கூறப்படவில்லை.

ஆகவே பாதுகாப்பு பட்டாளியன், உயர்பாதுகாப்பு வலயப்பகுதி 'பொதுத்தேவை' அல்ல. ஆகவே காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் மேற்படி வேவைக்காக காணிகளை எடுத்தல் சட்டவிரோதமானது.

இன்று பொதுமக்களே கிளர்ந்தெழுந்துள்ளார்கள். பொதுமக்கள் வெறுக்கும் இச்செயல் பொதுத்தேவையாக எப்படிக் கொள்வது.

நிதி:- நிதிப்பிரமாணம் பிரிவு 53 இன் கீழ் திறைசேரி பணிப்பாளர் மூலம் உரிய காணிகளுக்கும், கட்டி

டங்களுக்கும், அக்காணியில் செய்யப்பட்ட சேவைகளுக்குமான உரிய நிதி கச்சேரியில் வைப்புச்செய்யப்பட்டிருக்க வேண்டும். உண்மையில் யாழ்ப்பாணத்தில் எடுக்கப்படும் காணிகள் யாழ். மக்களின் இருதயம் போன்ற மிகவும் உயர்ந்த வளமுள்ள நிலம், அங்கு வசித்த மக்களின் வீடு வாசல்கள் மிகவும் பெறுமதி வாய்ந்தவை. மற்றும் அதிக விளைச்சல் தரும் இந்த நிலத்தில் திராட்சை, கரட், கோவா, பீற்றூட், போஞ்சி, மிளகாய், வெங்காயம், வெற்றிலை மற்றும் பெறுமதியான பயிர்கள் செய்யப்பட்டு வந்த, அதிக வருமானம் தரும் நிலங்கள். இவையும் விலை மதிப்பீட்டில் கணிக்கப்படல் வேண்டும். அவை அண்ணளவாவது கணிக்கப்பட்டு உரிய நிதி ஒதுக்கப்பட்டிருக்க வேண்டும். இது யாழ்ப்பாண மக்களின் பொருளாதாரத்தையே வீழ்த்தச்செய்து அரசிடம் கையேந்தும் நிலைக்கு இக் காணி எடுத்தல் மக்களைத் தள்ளியுள்ளது. உண்மையிலேயே அதற்கான நிதி யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் இலங்கை வருட வருமானத்தில் பல மடங்கு தேவைப்படும்.

இன்று யாழ்ப்பாணத்தில் வலிகாமம் வடக்கு (தெல்லிப்பழை), வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு, கோப்பாய், தெல்லிப்பழை ஜே/233 -காங்கேசன்துறை (மேற்கு), ஜே/234 -காங்கேசன்துறை (மத்தி), ஜே/237 - வீமன்காமம் (தெற்கு), ஜே/250 - தையிட்டி (தெற்கு), ஜே/256 - பலாலி (தெற்கு), ஜே/252 - ஒட்டாபுலம், ஜே/284 -வளவாய் எனும் கிராம அலுவலர் பிரிவுகளை எடுத்துக்கொண்டால் மொத்தமாக 6381 ஏக்கர் 38.97பேர்ச்சஸ் காணிகள் எடுத்தலுக்காக பிரிவு 2 இன்கீழ் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இவ்விளம்பரத்தில் காணிக்கு உரிமை கோருபவர் எனச்சொல்லப்படுபவர்:- அடையாளம் காண இயலவில்லை என ஒரு வாசகம் இடப்பட்டுள்ளது.

மக்கள் யுத்தத்தின் போது சிதறி அடிக்கப்பட்டு ஓடப்பட்டனர். பின்னர் பாதுகாப்புப்படையணி கைப்பற்றிக்கொண்டது அவர்களின் நிலங்களை. பின்னர் சில பகுதிகள் பொது மக்கள் பாதுகாப்புச் சட்டம் பிரிவு 5இன் கீழ் ஜனாதிபதியினால் வர்த்தமானி மூலம் பாதுகாப்பு வலயமாக பராதீனப்படுத்தப்பட்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. பொது மக்கள் பாதுகாப்புச்சட்டத்தின் ஒரு அங்கமே அவசரகாலச்சட்டம். அச்சட்டம் தற்போது சென்ற 2011.08.31ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. பொது மக்கள் பாதுகாப்புச் சட்டத்திலேயே பயங்கரவாத அச்சுறுத்தல் இல்லாத போது ஜனாதிபதியானவர் மீள் வர்த்தமானி மூலம் மீள் பராதீனம் செய்ய முடியும். அதாவது பாதுகாப்பு வலயத்தை நீக்கமுடியும். ஆனால், இன்று பயங்கரவாதத்தை ஒழித்து விட்டோம் என அரசு மார்பு தட்டிக்கொள்ளும் நிலையில் பாதுகாப்பு வலயம் தேவையா என்பது கவனிக்கப்பட வேண்டியதொன்று. அரசியலமைப்பின் அடிப்படை உரிமைக்கான உறுப்புரை 14இன் கீழ் நாட்டின் எப்பகுதிக்கும் நடமாடும் சுதந்திரமும் உறுப்புரை 12இல் கூறப்பட்ட சட்டத்தின் முன் சகலரும் சமம் என்ற அடிப்படை உரிமைகளும் இன்று யாழ். மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது.




இடம்பெயர்ந்த இம்மக்கள் இற்றைக்கு 23வருடங்களுக்கு முன் செல் வீச்சின் அகோரத்தினால் அவ்விடத்திலிருந்து இடம்பெயர்ந்தனர். அன்றிலிருந்து இன்று வரை அவர்கள் நண்பர்களின் காணியிலும் வாடகை வீடுகளிலும் இடம்பெயர்ந்து பிற நாடுகளிலும் அகதிகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களை அப்படியாக துரத்தி விட்டு பிரிவு 2 விளம்பரத்தில் காணி உரிமை கோரப்படுபவர் எனச்சொல்லப்படுபவர் அடையாளம் காண இயலவில்லை எனக் கூறப்படுவது இயற்கை நீதிச் சட்டத்தை மீறும் செயல். அவர்கள் ஒவ்வொருவரையும் இனம்கண்டு பிரிவு 2 விளம்பரம் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இப்படியாக இடம்பெயர்ந்த மக்கள் இன்று தங்கள் ஜீவனோபாயம் எதுவுமின்றி கஸ்டப்படுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகள். அவர்களுக்கு மாற்றுக்காணி வழங்கப்படவில்லை. குடியிருப்பதற்கு மாற்று இடவசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. காணி எடுத்தல் சட்டத்தின் கீழ் காணிகளை எடுப்பதற்கு முன் மாற்று காணிகள் மாற்று வீட்டுத்திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்க வேண்டும். அது செய்யப்படவில்லை. அதன்பின்பு தான் காணி எடுத்தல் நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். காணி எடுத்தல் சட்டத்தின் ஒழுங்குவிதி வர்த்தமானி இலக்கம் 1596/12 திகதி 07-04-2009 இதன்படி எடுத்தல் சட்டத்தின் பிரிவு 63 (2) (ஊ) இன் கீழ் நட்டஈட்டுக்கான சில ஏற்பாடுகள் இலங்கை பாராளுமன்றத்தினால் 17-03-2009 இல் அங்கீகரிக்கப்பட்டு மேலே குறிப்பிட்ட பிரிவின் கீழ் ஒழுங்கு விதி வெளியிடப்பட்டுள்ளது. இவ் ஒழுங்கு விதியின்படி

நட்ட ஈட்டு நடைமுறைகள் பல்வேறு புதிய திருத்தங்களுடன் விபரமாக வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி மிகக் கூடுதலான நட்ட ஈட்டுப்பண மும் தேவையானோருக்கு மாற்றுக் காணியும் கொடுக்கப்பட வேண்டும்.

காணி எடுத்தல் சட்டத்தின் கட்ட ளைகள் பிரிவு 284 பின்வருமாறு வலியுறுத்துகிறது.

'ஏதேனும் விசேடமுள்ள காணியை தெரிவு செய்வதற்கு முன்னர் எல்லா காணிகள் பற்றிய ஒப்பு நோக்கு விசா ரணையை மேற்கொள்ள வேண்டும்.

'எடுத்தலுக்கு உத்தேசிக்கப்பட்டு ள்ள காணியின் பயனளிக்கும் தன்மை உத்தேச கருத்திட்டத்திற்கு வேறேதேனும் பொருத்தமான காணிப் பகுதி ஒன்று இல்லை என கண்டாலொளிய உயர்தர பொருளா தார பயனைத் தரக்கூடிய காணிகளை எடுத்தலுக்கு ஆலோசனை வழங்கக் கூடாது, முடிந்தவரை எப்போதும் அரசாங்கத்திடமிருந்து மானிய உத வியை பெறுகின்றதும், கமத்தொழில் உயர்ந்த நிலையில் உள்ளதுமான காணிகளை எடுத்தலை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

'காணி எடுத்தலின் நிமிர்த்தம் காணியின் உரிமையாளருக்கு பங்க மேதும் ஏற்படுமா என்பது பற்றியும் கவனத்திற்கொள்ள வேண்டும். வேறேதேனும் பொருத்தமான மாற் றுக்காணி உதாரணமாக அரச காணி காணி உச்ச வரம்புச்சட்டத்தின் எடு த்த காணி இல்லை எனக் கண்டாலொ ளிய பாரதூரமான பங்கத்தினை உரி மையாளருக்கு ஏற்படுத்தும் காணி கள் எடுக்கப்படுவதிலிருந்து விடுவிக் கப்பட வேண்டும்.

'அத்துடன் எடுக்கப்படுகின்ற காணியில் சில சமயம் குடியிருக்கும் வீடுகள் இருக்கலாம். இதன் காரண மாக சில சமயம் காணி உரிமையாளர் வீடுகளை இழந்து குடியிருப்பதற்கு இடமில்லாது இக்கட்டானதொரு நிலை உருவாகலாம். எனவே தவிர் க்க முடியாமல் அவ்வாறானதொரு காணியை எடுக்க வேண்டி ஏற்படின் தேசிய வீடமைப்பு அதிகாரசபை மூலம் குடியிருப்பதற்குத் தகுந்த மாற் றிடம் ஒன்றை பெற்றுக்கொடுத்த பின் னர் எடுத்தலுக்குத் தேவையான நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண் டியது விண்ணப்பிக்கும் திணைக்கள த்தின் பொறுப்பாகும்.அவ்வாறாக குடியிருக்கும் வீடுகள் காணியை எடுக்கும் போது வீட்டிலிருந்து வெளி யேறுவதற்குப் போதுமான முன்னறி வித்தல் காலத்தை காணியின் உரிமை யாளருக்கு வழங்க வேண்டும்.

'பொருளாதார பயிர் கொண்ட காணிப்பகுதியை எடுக்க உத்தேசிக் கும் போது அப் பயிர்ச்செய்கைக்கு பொறுப்பான அமைச்சின் சம்மதம் அவசியம் (உதாரணமாக)காணி எடு த்தலுக்கு தெங்குச் செய்கையுள்ள காணி ஒன்றைத் தெரிவு செய்வதற்கு முன்னர் தெங்குத் தொழில் அமைச் சின் சம்மதத்தைப் பெற வேண்டும்.

'மேலும் எவருக்கேனுமுரிய ஒரே ஒரு காணியை எடுத்தலின் மூலம் அவர் அநாதரவான நிலைக்கு ஆளா கக்கூடும். ஆகையால் அவ்வாறான சந்தர்ப்பங்களை கூடுமானவரை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

'காணிச் சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் நியதிச் சட்ட முறையாக ஒருவருக்கு ஒதுக்கப்படும் காணிப் பகுதியிலி ருந்து சுவீகரித்தல் மேற்கொள்ளப்படு வதை தடுக்கக்கூடிய எல்லா நடவடிக் கைகளையும் எடுக்க வேண்டும்.

**மற்றும்**

தேசிய சுயாதீனமற்ற மீள் குடியேற் றக்கொள்கை (involuntary Resettlement Policy) இன் படி இக் கொள்கை 2001ஆம் ஆண்டு ஜூன் மாதம் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுள்ளது. இக்கொள்கையின்படி மாற்றுக்காணிகளோ வீட்டுத்திட்டங் களோ நட்ட ஈட்டுப் பணங்களோ ஒதுக்கீடு செய்யப்படாமல் மக்களை இடம்பெயரச்செய்யக்கூடாது. அவர் களின் காணிகளை எடுக்கவும் கூடாது.

**மற்றும்**

தேசிய நல்லிணக்க ஆணைக்குழு வின் அறிக்கையின் பகுதி 9.142, 9.171 இதன்படி பொதுமக்களின் காணிகளை தேசிய பாதுகாப்புக் கருதி பறிமுதல் செய்வதை மீளாய்வு செய்ய வேண்டும். அவற்றை விடு விப்பதற்கு வழிவகை செய்ய வேண் டும் என்பது தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ளது.

**மற்றும்**

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனத்தில் உறுப்புரை 17இல் பொதுமக்களின் காணிகள் அநாவசியமாக அபகரிக்கப்படுவது தடுக்கப்பட்டுள்ளது.

**காணி எடுத்தல்**

பொதுத் தேவைகருதி அரசு காணி களை எடுக்க முடியும். இருந்தாலும் பலவழக்குகளில் ஒரு காணி எடுத்த லில் முக்கிய விடயங்கள் சுட்டிக்காட் டப்பட்டுள்ளன. அவை பின்வரு மாறு,

1. டீ.சில்வா எதிர் அத்துக்கொ றல்ல காணி, நீர்ப்பாசன, மகாவலி அபிவிருத்தி அமைச்சும் ஏனை யோரும் (1993) 1 SLR 283 என்ற உயர் நீதிமன்ற வழக்கில் நீதியரசர் பெர்னாண்டோ அவர்களால் பின் வரும் கருத்து விடயம் எடுத்துக் கூறப்பட்டது.

'தனிநபர் காணியை எடுத்தல் தனிப்பட்ட நன்மைக்கோ தனிப்பட்ட பழிவாங்கலுக்கோ அதிகாரமளிப்ப தாக கருதுவதல்ல. மாறாக பொதுமக் கள் நன்மை கருதி பொதுத் தேவைக்கு பாவிப்பதற்காக தனியார் காணியை அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி காணி எடுத்தல் சட்டம் மூலம் தனியார் காணியை எடுப்பதே அதன் நோக்கமாகும்'.

"The purpose of the land acquisition Act was to enable the state to take private land, in the exercise of its right of eminent domain, to be used for a public purpose, for the common good; not be enable the state or state functionaries to take over private land for personal benefit or private revenge".

ஆகவே ஒரு இனத்தைப் பழிவாங் குவதற்காக காணிகளை எடுக்க முடியாது.

2. மானல் பெர்னாண்டோவும்

*(37ஆம் பக்கம் பார்க்க...)*

உள்நாட்டு அரசியல்

# அசாத் சாலியின் கைதும் விடுதலையும்



மனோ கணேசன்

## சத்தியக் கடதாசியில் எந்த இடத்திலும் மன்னிப்பு என்ற ஒரு வார்த்தை இல்லை

கடந்த 2012ஆம் வருட ஜெனீவாத் தீர்மான காலகட்டத்தில், கிழக்கு மாகாணத்தில் இருந்து முஸ்லிம்களை வெண்ணிற தொப்பி, வெண்ணிற குர்தா, வெண்ணிற சாரம் ஆகிய தங்கள் பாரம்பரிய உடைகளில் ஆயிரக்கணக்கில் கொழும்பு வரச்செய்து மிகப்பெரும் அரசு ஆதரவு இஸ்லாமிய ஊர்வலம் ஒன்றைக் காலி வீதியில் நடத்தி, அமெரிக்கத் தூதரகத்தை முற்றுகையிட்ட செயற்பாட்டில் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா உட்பட கொழும்பின் அரசு சார்பு முஸ்லிம் அரசியலாளர்களுடன் இணைந்து பெரும் பங்காற்றியவர் அசாத் சாலி.

இன்றைய கிழக்கு மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னரான காலகட்டத்தில், மதவாத தாக்குதல்களுக்கு எதிர் கொடுக்காமல் முஸ்லிம் அரசியலாளர்கள் மௌனம் (பொறுமை?) காக்க, அங்கு ஏற்பட்ட முஸ்லிம் தலைமைத்துவ இடைவெளியில் ஆஜராகி, பொதுபல சேனாதிபதிகளுடன் கருத்து மோதல் செய்து, முஸ்லிம் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்படுத்திய நிலையில், கொழும்பு தெவட கஹா பள்ளி நிர்வாகி ஒருவரை மிரட்டினார் எனப் புகார் எழ, பொலிஸ் இவரைத் துரத்த, இவர் நீதிமன்றம் போக, பின்னர் கொஞ்ச நாள் அமைதிக்குப் பின்னர், சென்னை சென்று, அங்கு நம்ம ஜூனியர் விகடனுடன் நடத்திய நேர்முகமும், சென்னைக்கு இவரை அழைப்பித்த அமைப்பு தொடர்பாகவும், இலங்கை அரசு (இந்திய அரசும்?) முன்வைத்த குற்றச்சாட்டுகள் காரணமாக கைதானவர் அசாத் சாலி.

நண்பர் அசாத்சாலியின் பற்பல திடுக்கிடும் திருப்பங்கள் உள்ள சமீபத்து நடப்புகளை ஒரே மூச்சில் சொல்லி முன்னுரை வழங்க கஷ்டமாகத்தான் இருக்கிறது.

நமது ''சமகாலம்'' ஆசிரியர் நண்பர் தனபாலசிங்கம் என்னை அசாத் சாலியின் கைது-விடுதலை பற்றி எழுதுங்களேன் என்று உரிமையுடன் கேட்டுக்கொண்டபோது வேலைப் பளுவுக்கு அப்பால் கொஞ்சம் தயக்கமாகத்தான் இருந்தது. அசாத் ஏற்கனவே ஒரு சஞ்சிகை நேர்முகத்தால் தான் கைது செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. நானும், தனபாலசிங்கமும் உள்ளதை உள்ளபடி பேசுபவர்கள். எனவே நமது கருத்துகள் இப்போது கொஞ்சம் ''ஓய்வு'' எடுத்துக்கொண்டிருக்கும் அசாத் சாலியை இன்னமும் ஏதாவது ஆபத்தில் தள்ளிவிடக்கூடாது என எனக்குத் தோன்றியது.

குறிப்பாக அவர் கொஞ்சம் அமைதியாக இருக்க வேண்டும் என அவரது குடும்பம் உரிமையுடன் கருதுவதாக எனக்குத் தோன்றுகிறது. ஆகவே அந்த எண்ணப்பாட்டை மதித்து சில விடயங்களை பகிர்ந்து கொள்ளலாம் என கடைசியில் முடிவு செய்தேன்.

''முஸ்லிம்களும் ஆயுதம் எடுப்பார்கள்!'' என்ற பரபரப்புத் தலைப்புடன், ''இலங்கையில் தமிழின அழிப்பை நடத்திய ராஜபக்ஷ அரசு, இப்போது தமிழ் - முஸ்லிம்கள் மீது இனத் துவேசத்தைக் காட்டிவருகிறது. இதற்கு எதிராகக் குரல் கொடுப்பவர் இலங்கை தேசிய ஐக்கிய முன்னணிக் கட்சியின் பொதுச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை முன்

னாள் பிரதி மேயருமான எம்.அசாத் சாலி, சென்னையில் ''பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா'' நடத்திய இலங்கைத் தமிழர்களுக்கான வாழ்வுரிமைக் கருத்தரங்கில் பங்கேற்க வந்தவரைச் சந்தித்தோம்'' என்ற முன்னுரையுடன், கடந்த மாதம் 24ஆம் திகதி ஜூனியர் விகடன் இதழில் அசாத் சாலியின் நேர்முகம் இடம் பெற்றது.

உண்மையில் இலங்கையிலிருந்து அரசியலாளர்கள் சென்னை சென்று புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா'', அதாவது, இலங்கைத் தமிழ் ஊடக மொழியில் சொல்வதானால், ''இந்திய வெகுஜன முன்னணி'' பிரதிநிதிகள் நேரடியாக கொழும்பு வந்துதான் ஏப்ரில் 14/15ஆம் திகதிகளில் சென்னையில் நடக்கவுள்ள தங்களது நிகழ்வில் கலந்துகொள்ளும்படி அழைப்பு விடுத்தார்கள். அவர்கள் எனக்கும் அழைப்பு விடுத்தார்கள். இது இது வரை வெளிவராத செய்தி. இந்த அமைப்பின் பெயர் பொதுவாக விடயத்தை வேறு திசைக்கு அரசாங்கம் திருப்பியிருக்கும்.

இலங்கையில் முதல் இனரீதியான தாக்குதலே முஸ்லிம்கள் மீதுதான், 1915-களில் சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே கலவரம் ஏற்பட்டது என்று சொல்லித்தான் அசாத் இந்த நேர்முகத்தை ஆரம்பித்துள்ளார். இது எல்லாம் இந்த அரசாங்கத்துக்குப் பிடிக்காத வேலை. முஸ்லிம்களை கூட்டுச் சேர்த்துக்கொண்டு தமிழரை அடிப்பதும்,



நடத்தும் சந்திப்புகள், கலந்துரையாடல்கள் ஆகியவை பற்றிய தகவல்கள் இலங்கை அரசுக்குக் கிடைக்கும் விதமாக ஒரு தொடர்பு அமைப்பு இருக்கிறது.

இன்று இலங்கையின் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவராக இருக்கும் ஹம்சா, முன்பு சென்னையில் இலங்கை பிரதித் தூதுவராக இருக்கும் போது ஏற்படுத்திய அமைப்பு இது. சென்னை ஊடகத்துறை, பொலிஸ் ஆகியவற்றில் இருந்து வரும் இந்தத் தகவல்கள் எப்போதும் சரியாக, உண்மையாக இருக்கும் என்பதற்கு எந்த வித உத்தரவாதங்களும் கிடையாது.

ஜூனியர் விகடன் தனது ''சென்னைத் தமிழில்'' சொல்லியுள்ள ''பாப் இருந்தாலும்கூட அது ஒரு முஸ்லிம் மக்கள் சார்ந்த இஸ்லாமிய அமைப்பு ஆகும். அதை அவர்கள் எனக்கும் சொன்னார்கள். ஆனால் இந்தத் தினங்களில் எனக்கு வேறு அலுவல்கள் இருந்ததால் நான் அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. உண்மையில் இந்தத் தினங்கள் நமது தமிழ்ப் புதுவருட பண்டிகை என நான் என்னை அழைத்துப் பேசியவர்களிடம் சொன்னபோது, ''அதற்கென்ன அது அவ்வளவு முக்கியமா? நீங்கள் சென்னைக்கு வந்து எங்கள் நிகழ்வில் பேசுங்கள்'' என எனக்கு அழைப்பு விடுத்தவர் சொன்ன முறை எனக்கு பிடிக்கவும் இல்லை. எப்படியோ, நானும் போயிருந்தால் இந்த பின்னர் முடியுமானால் தமிழரை கூட்டுச்சேர்த்துக்கொண்டு முஸ்லிம்களை அடிப்பதும் இவர்கள் கொள்கை. இதற்குப் பாதகமாக தமிழர், முஸ்லிம்கள் இடையே கூட்டு ஏற்படுவதை இவர்கள் விரும்புவதில்லை.

ஆனால் அசாத்சாலி கைது வெறுமனே முஸ்லிம்- சிங்கள இன முறுகல் சம்பந்தமானது என நான் நம்பவில்லை. இதிலும் தமிழர் தேசிய போராட்டமும், இன்று தமிழ்த் தேசியப் போராட்டம் எழுப்பியுள்ள சர்வதேச அதிர்வலைகளும் காரணமாக அமைந்துள்ளன என நான் நம்புகின்றேன்.

அசாத் கைது செய்யப்பட்டு உள்ளே இருக்கும் போது அரசாங்க

ஆதரவு அச்சு, இலத்திரனியல், இணையத்தள ஊடகங்கள் அசாத் ஒரு அல்-கைடா தொடர்பாளர் என்றும் அவர் சம்பந்தமான பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும், இன்னும் சில தினங்களில் அவை வெளியாகும் என மக்களை எதிர்பார்ப்புக்குள் தள்ளியது.

சர்வதேச சமூகத்துக்கும், ஊடகங்களுக்கும் இந்த மாதிரி இலங்கையில் இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கம் துளிர்விட ஆரம்பித்துள்ளது என்ற செய்தி திட்டமிட்டுத் தரப்பட்டது. உண்மையில், அல்-கைடா, தலிபான் இஸ்லாமிய அடிப்படைவாத பூச்சாண்டிகள் இன்று இந்த அரசாங்கத்துக்கு மிகவும் தேவைப்படுகின்றன. அது எப்படியென்றால் இப்படித்தான்.

டால், இனிமேல் உலகின் சின்னஞ்சிறிய நாடுகளும் தம்மை மதிக்காது நாட்டாண்மை செய்யும் என உலக நாட்டாண்மை நாடுகளுக்கு நியாயமான அச்சம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் இலங்கை அரசு முன்னெடுக்கும் திட்டம்தான், ''இலங்கையில் அல்-கைடா'' என்பதாகும். இதற்குப் பின்னால் இருப்பது இஸ்ரேலிய மூளை.

அல்-கைடா, தலிபான், அல்-ஜிஹாத் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் இலங்கையில் இருப்பதாகக் காட்டி அமெரிக்கா உட்பட மேற்குலகை வளைத்துப் போடலாம் என இலங்கை அரசு கணக்குப் போடுகிறது. இந்த இஸ்லாமிய அடிப்படைவாத தொடர்பாளர்கள் இங்கு இருப்பதாகக் காட்டினால் மேற்குலகம்

நான் நினைக்கின்றேன்.

கவிஞர் வேலணை வேணியன் கடந்தமுறை கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடத்திய கண்ணதாசன் மன்ற விழாவிலே நான் அதிதியாக கலந்துகொண்டேன். அதில் அசாத் சாலியும் அழைக்கப்பட்டு உரையாற்றினார். எனக்கு முன்னால் உரையாற்றிய அவர் ஒரு கருத்தைச் சொன்னார். அப்போதுதான் அவர் அரசாங்கத்துடன் சற்று முரண்படத் தொடங்கிய காலம்.

சரத் பொன்சேகாவை பொது வேட்பாளராக ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டதனாலேயே தான் அக்கட்சியிலிருந்து விலகியதாக அவர் சொன்னார். சரத்பொன்சேகா ஒரு இனவாதி என்பதால் அவரைப் பொது வேட்பாளராக தன்னால் ஏற்க

**அசாத் சாலி தனிக்கட்சி என்ற யோசனையை முன்வைத்து அதன் பெயராக ஆரம்பத்தில் தமிழ்-முஸ்லிம் கூட்டணி என சொல்லிக்கொண்டார். எனக்கு இதில் உடன்பாடு இல்லை. வெறுமனே சிங்களவர்களுக்கு எதிராக தமிழ்- முஸ்லிம் கூட்டணி அல்லது கடந்த காலத்தில் இடம்பெற்றதை போன்று தமிழருக்கு எதிராக சிங்கள-முஸ்லிம் கூட்டணி அல்லது இன்று சிலர் முயற்சிப்பது போன்று முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள-தமிழ் கூட்டணி என்பதெல்லாம் எமது நோக்கங்கள் அல்ல**

உலகத்தில் இன்று இஸ்லாமிய அடிப்படைவாதத்திற்கு எதிராக மேற்குலகமும், இந்தியாவும் கூட்டாகச் செயல்படுகின்றன. சோஷலிச முகாமின் முடிவுக்குப் பின்னர் இஸ்லாமிய அடிப்படைவாதம் மேற்குலகின் முதல் எதிரியாகியுள்ளது. இதில் எந்தவித இரகசியமும் இல்லை.

ஆனால் இலங்கை தேசிய பிரச்சினையில் இதே மேற்குலக நாடுகள் இலங்கை அரசுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. அதிகாரத்தைப் பகிரும் அரசியல் தீர்வைக் காணும்படி இலங்கை அரசின் மீது சர்வதேச அழுத்தம் உள்ளது. இலங்கை அரசு அன்றைய சூழலைச் சமாளிக்கத் தயாரித்து வெளியிட்ட LLRC என்ற ஆணைக்குழு சிபாரிசுகளை அமுல் செய்தே ஆகவேண்டும் என்ற நிலைப்பாட்டை இன்றுவரை மேற்குலகம் தளர்த்தத் தயாரில்லை.

இலங்கையை இப்படியே விட்

தன்னை அரவணைக்கும் என்று இவர்கள் நினைக்கிறார்கள். என்னதான் இன்றைய தினத்தில் மேற்குலகம் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா மனித உரிமைப் பேரவையில் தீர்மானம் கொண்டு வந்தாலும், இஸ்லாமிய அடிப்படைவாதத்தை எதிர்க்க எவருடனும் மேற்குலகம் கூட்டுச் சேரும். ஏனெனில் அதுதான் அவர்களது முதல் பிரதான பிரச்சினை.

இங்கு இதுவரை இல்லாத இஸ்லாமிய அடிப்படைவாதம் இருப்பதாகக் காட்டவே அசாத் சாலி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். அசாத்சாலி கைதுக்குப் பின்னால் உள்ள உண்மைக் காரணம் இதுதான்.

அசாத்தின் அரசியல் வரலாறு சிக்கலானது. ஆனால், இப்போது சரியான இடத்துக்கு அவர் வந்துவிட்டதாக

முடியவில்லை என்பதை ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெரியப்படுத்தவே தான் ஐ.தே.க.வை விட்டு வெளியேறியதாக அவர் சொன்னார்.

மேடையில் இருந்த எனக்கு இது ரொம்பவும் தர்மசங்கடமாகப் போய் விட்டது. அத்துடன் கவிஞர் வேணியனின் அழைப்பை ஏற்று அங்கு வந்திருந்த சில கூட்டமைப்புக்காரர்களுக்கும் கஷ்டமாகப் போய் விட்டது.

சரத் பொன்சேகாவை நன்கு அறிந்து கொண்டே, ஒரு சாணக்கிய காய் நகர்த்தலாகவே ஜனநாயக மக்கள் முன்னணியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொன்சேகாவுக்கு வாக்களிக்கும்படி தமிழ் மக்களிடம் கோரிகை விடுத்தன. இதுபற்றி நாம் பல விளக்கங்களை அளித்துவிட்டோம்.

தமிழ்ச்சங்க மண்டப பார்வையாளர்கள் யாரும் அசாத் சாலியிடம்

அவர் ஐ.தே.க.விலிருந்து விலகியதற்கான காரணத்தைக் கேட்கவில்லை. ஆனாலும், இப்படி இவர் சொல்லியது எனக்குப் பிரச்சினையாகப் போய் விட்டது.

அதற்குப் பதில் சொல்வது எனது கடமையாகப் போய்விட்டது. இறுதியில் உரையாற்றிய நான் அதற்குப் பதில் கூற வேண்டுமென எனக்கு அங்கிருந்த ஒரு தமிழ்ச் சங்க நண்பர் குறுஞ்செய்தி ஒன்றும் எனது கைப்பேசிக்கு அனுப்பினார்.

பொன்சேகாவை நாம் ஏன் தேர்தலில் ஆதரித்தோம் என நான் விவரித்து சொல்லிவிட்டு, உண்மையில் அசாத் இனவாதத்தை எதிர்த்து ஐ.தே.க.விலிருந்து விலகியிருந்தால், அவர் தனித்து இயங்கியிருக்க வேண்டும். அதை விடுத்து இன்னொரு இனவாத முகாமான அரசாங்கத்தில் சென்று இணைந்தது ஏன் என நான் கேள்வி எழுப்பினேன்.

அது மட்டுமல்ல, முஸ்லிம் அரசியல் போக்கு போராட்ட அரசியலுக்கு தயாராக வேண்டும். இன்று, தமிழர்களின் போராட்டம் காரணமாக சர்வதேச அழுத்தம் அரசாங்கத்தின் மீது ஏற்பட்டுள்ளது. ஜெனீவாத் தீர்மானம் மூலம் இலங்கை அரசின் மீது அழுத்தம் வந்து அரசியல் தீர்வு வந்தால், தமிழர்களுக்கு மட்டும் அல்ல, முஸ்லிம்களுக்கும் சேர்த்துத்தான் அந்த அரசியல் தீர்வு வரும். எனவே ஜெனீவாத் தீர்மானத்தை எதிர்த்து இனவாத அரசாங்கத்துக்கு துணை போனது பிழை. இன்று முஸ்லிம் அரசியல் தலைமைகள் முஸ்லிம் மக்களையும் தமக்கான அரசியல் அதிகாரப்பகிர்வு உரிமைகளுக்காகப் போராடத் தயார் படுத்த வேண்டும். அதைச் செய்யாமல் தமிழர்களைப் போராடவிட்டு விட்டு இறுதியில் அரசியல் தீர்வு என்று ஒன்று வரும்போது மாத்திரம் ஓடோடிவந்து, அதில் பங்கு கேட்பது சரியல்ல என்பதை முஸ்லிம் தலைமைகள் உணர வேண்டும்.

இதுதான் என் உரை.

எனது இந்த உரையை கொழும்பில் இருந்து வெளியாகும் எல்லாத் தமிழ்த் தினசரிகளும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன. இணையத் தளங்களும் முக்கியத்துவம் தந்து வெளியிட்டன. ''முஸ்லிம்களும் போராட வேண்டும். போராடாமல், அரசியல் தீர்வில் பங்கு கேட்பது முறையல்ல'' என்ற கருத்து நீண்ட காலமாகத் தமிழர் மனதை அரித்து வந்த ஒரு விடயம். இந்தக் கருத்து தமிழ் மனதின் ஆதங்கக் குரல் என, இந்தச் செய்தியை வாசித்து விட்டு ஓய்வு பெற்றுவிட்ட ஒரு தமிழ்த் தலைவர் என்னைத் தொலைபேசியில் அழைத்துச் சொன்னார்.

இதை ஏன் இங்கே விளக்கமாகச் சொல்கின்றேன் என்றால், இந்தக் கருத்தை உடனடியாக அசாத்சாலி புரிந்துகொண்டார். தமிழர், முஸ்லிம் மத்தியில் உண்மையான ஐக்கியம் ஏற்பட வேண்டும் என்றால் அது ஜனநாயகப் போராட்டக் களத்தில் ஏற்பட வேண்டும் என்பதுதான் எங்கள் நிலைப்பாடாக இருந்தது.

இந்த அடிப்படையிலேயே இன்று நாம் இணைந்து செயல்பட ஆரம்பித்தோம்.

அசாத்சாலி, ஒரு ''தனிக் கட்சி'' என்ற யோசனையை முன்வைத்து அதன் பெயராக ஆரம்பத்தில் தமிழ்-முஸ்லிம் கூட்டணி எனச் சொல்லிக் கொண்டார். இதில் எனக்கு உடன்பாடு இல்லை. வெறுமனே சிங்களவருக்கு எதிராக ''தமிழ்-முஸ்லிம் கூட்டும்'' அல்லது கடந்த காலத்தில் இடம்பெற்றதைப் போல் தமிழருக்கு எதிராக ''சிங்கள-முஸ்லிம் கூட்டும்'', அல்லது இன்று சிலர் முயல்வதுபோல் முஸ்லிம்களுக்கு எதிராக ''சிங்கள-தமிழ்க் கூட்டும்'' எங்கள் நோக்கங்கள் அல்ல.

இன்று அவரது கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி. இதனுடன் நமது கட்சியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், நவ சமசமாஜக் கட்சியும், ஐக்கிய சமவுடைமைக் கட்சியும் சேர்ந்து ஒரு பொது மேடையை ஏற்படுத்தியுள்ளோம். அதுதான், ''அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம்''. (Movement for Unity with Power Sharing - MUPS). இதில் தமிழ், முஸ்லிம் மட்டும் அல்ல, முற்போக்குச் சிங்களப் பிரதிநிதித்துவமும் உள்ளது. ஆனால், இது தேர்தல் கூட்டு அல்ல. தேர்தல் தொடர்பாக நாம் எதுவும் இப்போது பேசத் தயாரில்லை.

ஆனால், இந்த பொது மேடையும் இதன்மூலம் நாம் தெரிவித்து வரும் கருத்துகளும், சிங்கள ஊடகங்கள் மூலமாக அவை சிங்கள மக்களைச் சென்று அடைவதும் அரசாங்கத்துக்கு கஷ்டமாக உள்ளது என எண்ணுகின்றேன்.

இன்று அசாத்சாலி விடுதலை தொடர்பாக மாறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. அவர் தனது ''சகல தவறுகளையும்'' ஏற்றுக்கொண்டு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வெளியே வந்ததாகச் செய்தி கிளப்பப்படுகின்றது. இது அவரது வளர்ச்சியை விரும்பாத தரப்பினரின் எதிர்பார்ப்பு. அப்படி இருந்தால் நல்லது என நினைக்கும் ஒரு சில முஸ்லிம் அரசியல் தரப்புகள் இப்படியான செய்திகளை வெளியிடுகின்றன அல்லது பரப்புகின்றன என்று அவர் விடுவிக்கப்பட்டதன் பின்னர் எனக்குச் சொன்னார்.

அவர் சிறையில் இருக்கும் போது ஒரு சத்தியக் கடதாசியை வழங்கினார் என்பது உண்மை. அதில் எந்த ஒரு இடத்திலும் மன்னிப்பு என்ற ஒரு வாசகம் இல்லை. எவருக்கும் அசௌகரியம் ஏற்பட்டு இருந்தால் மனம் வருந்துகின்றேன் என்ற மாதிரி எழுதப்பட்டிருந்தது. எது எப்படி இருந்தாலும், சிறையில் ஒருவரை அரசியல் காரணமாக அடைத்து வைத்துக்கொண்டு, அழுத்தம் கொடுத்து சத்தியக் கடதாசி பெற்றுக் கொண்டு அவர் மன்னிப்புக் கேட்டார் என்ற மாதிரி கருத்துக் கூறுவது முறையல்ல.

இது ஒரு அரசியல் கைது என்று நாம் ஆரம்பத்தில் இருந்து சொன்னது இன்று நூற்றுக்கு நூறு உண்மையாகிப் போய்விட்டது. அரசாங்கம் ஆரம்பத்தில் பயமுறுத்தியதுபோல் அசாத்சாலி ஒரு அல்-கைடாக்காரர் என்றால் அவருக்கு இன்று விடுதலை கிடைத்திருக்க முடியாது. ■



# அசாத்சாலியின் கைது ஏற்படுத்திய அரசியல்தாக்கம்

2013 மே மாதம் 2ஆம் திகதி முஸ்லிம்-தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர், முன்னாள் கொழும்பு பிரதி மேயர் அசாத்சாலி குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டால். தான் கைது செய்யப்படப் போவதாக அறிந்திருந்த அவர் அதற்கு முன்னரே நீதிவான் நீதிமன்றத்தில் முன்கூட்டிய பிணையில் ஏற்கனவே விடுவிக்கப்பட்டிருந்தார். ஆனால், இந்தத் தடவை அவரது கைது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இடம்பெறுவதாக பொலிஸார் அறிவித்தல் ஒன்றைக் கொடுத்தனர். பிணைச்சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு செல்லுபடியாகாது. இனங்களுக்கிடையே குரோதத்தைத் தூண்டி வன்முறைக்கு இட்டுச் செல்லக்கூடிய செய்தியொன்றை அவர் பரப்பினார்/ பிரசுரித்தார் என்பதுதான் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு.

கடந்த பல மாதங்களாக பொதுபலசேனா என்ற பௌத்த தீவிரவாத அமைப்பு முஸ்லிம் மக்களுக்கு எதிராக காழ்ப்புணர்ச்சியைத் தூண்டி முஸ்லிம் மத ஸ்தலங்களைக் குறிவைத்து அட்டூழியங்களைச் செய்து வருகின்ற சூழ்நிலையில், மற்றெல்லா முஸ்லிம் அரசியல், மதத் தலைவர்களும் பயந்து, நடுங்கி பேசாமல் இருந்த போது அசாத்சாலி ஒருவர் தான் துணிகரமாக தனது சமூகத்தினருக்காகக் குரல் எழுப்பியவர். அது மட்டுமல்லாமல், அரசாங்கத்திற்கும் பொதுபலசேனாவிற்கும் உள்ள



எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

தொடர்பைப் பற்றியும் பகிரங்கமாகக் கண்டித்தவர். வாரா வாரம் புதன்கிழமைகளில் ''அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஒற்றுமைப்படுத்துவோம்'' என்ற அமைப்பினால் நடத்தப்பட்ட செய்தியாளர் மகாநாடுகளில் அவரோடு கூட பங்குபற்றியவன் என்ற வகையில், இது நான் நேரடியாகக் கண்ட உண்மை.

அசாத்சாலிக்கு எதிராகக் கொண்டு வரப்பட்ட குற்றச்சாட்டு, தமிழ் ஊடகவியலாளர் திசநாயகத்துக்கு எதிராகச் சாட்டப்பட்ட அதே குற்றச்சாட்டாகும். திசநாயகத்திற்கு வாகரை, கதிரவெளி பிரதேசங்களில் இராணுவம் முன்னெடுப்பு செய்தபோது அந்தப் பிரதேச மக்களுக்கு உணவு, மருந்து வகைகளை அரசாங்கம் அனுப்பாமல் தடுத்தது என்று எழுதியமைக்காக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் 20 வருட தண்டனை விதிக்கப்பட்டது நினைவிருக்கலாம்.

இன,மத தீவிரவாதத்துக்கு எதிராக கருத்துவெளியிட்டுச் செயற்பட்டாரேயன்றி அவற்றைத் தூண்டுவதற்கு அவர் எதுவும் செய்யவில்லை என்பதும் யாவரும் அறிந்த ஒரு விடயம். ஆகவே இன, மத குரோதத்தைத் தூண்டுபவர்களை விட்டுவிட்டு அதை எதிர்த்த இவரைக் கைது செய்வதென்பது அதுவும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ், எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயலாக இருந்தது.

அசாத்சாலி, தான் கைது செய்யப்பட்ட நேரத்திலிருந்து உண்ணாவிரத நோன்பை மேற்கொண்டதும் அரசாங்கத்துக்கு ஒரு பெரிய தலையிடியைக் கொடுத்தது. பலருடைய அவதானத்தை இந்த உண்ணாவிரதம் மூலமாக அவர் தன்பால் கவர்ந்தார். அத்தோடு எதன் காரணமாக அவர் கைது செய்யப்பட்டாரோ, அந்த விடயத்தையும் பகிரங்கமாகவே பிரசித்தப்படுத்தியது அரசாங்கத்தின் மேல் இன்னமும் அழுத்தத்தை ஏற்படுத்தியது.

ஜூனியர் விகடனுக்குத் தான் கொடுத்த செவ்வியை அவர்கள் பிழையாக பிரசுரித்தார்கள் என்று அசாத்சாலி அவர்களுக்கு மின்னஞ்சல் அனுப்பி இருந்தார். இதனை அவர் கைது செய்வதற்கு முன்னரே அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தகவலையும் அவர் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது அவரைச் சந்தித்த முதல் நபராகிய நான், தேசிய வைத்தியசாலையின் வாசலில் வைத்தே அறிவித்தேன். அதைத் தொடர்ந்து ஊடகவியலாளர் சந்திப்பிலும் அறிவித்தோம்.

இந்தக் கைதினால் அரசாங்கம் பெரும் நெருக்கடிக்கு உள்ளானது. இரண்டு வழக்குகளும் உடனடியாகத் தாக்கல் செய்யப்பட்டன. சர்வதேசக் கண்ணோட்டம் பெரிதாகத் திரும்பியதால் அரசாங்கம் பின்னடி எடுத்து

வைக்கத் தீர்மானித்தது. அவரிடமிருந்து ஒரு சத்தியக் கடதாசியைப் பெற்றுக்கொண்டு அவரை விடுவித்தது. அந்த சத்தியக் கடதாசியில் அவர் அரசிடமிருந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார் என்று காண்பிக்க முயற்சித்தாலும், உண்மையில் அப்படியாக அவர் மன்னிப்புக்கோரவில்லை. பகிரங்கமாகச் சொன்ன விடயங்களே அதில் அடங்கியுள்ளன. அதே விடயங்கள் தொடுக்கப்பட்ட வழக்குகளிலேயும் கூறப்பட்டுள்ளன. ஆகையால் இந்த அசாத்சாலி கைது விவகாரம் அரசாங்கத்திற்கு படுதோல்வியாகவே முடிவடைந்திருக்கிறது.

இந்த விவகாரத்தால் இரு நன்மைகளும் ஏற்பட்டுள்ளன. ஒன்று, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மீது மீண்டும் சர்வதேச அவதானம் ஏற்பட இது உதவியுள்ளது. இரண்டாவதாக, இனிமேலாவது அரசாங்கம் ஒருவரைக் கைது செய்து அழுத்தம் பிரயோகிக்க முன்னர் இரு தடவைகள் யோசனை செய்யும் என்று எதிர்பார்க்கிறோம். ஒட்டு மொத்தமாக, அசாத்சாலி தனது துணிகரமான செயற்பாட்டின் மூலமாக இந்த நாட்டில், பலரது பாதுகாப்புக்கும் உரிமைகளுக்கும் மிக முக்கியமானதொரு பங்களிப்பைச் செய்திருக்கிறார் என்பதே உண்மையாகும். ■

PUBLIC LIBRARY JAFFNA

---

***(31ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

ஏனையோரும் எதிர் டீ.எம். ஜயரத்னவும் ஏனையோரும் 2000 (1) SLR 112 என்ற உயர் நீதிமன்ற வழக்கில் மாக் பெர்னாண்டோ நீதியரசர் இப்படிக் கூறுகின்றார்.

'பொதுமக்கள் தேவைகருதி என்ற எண்ணப்பாடு அமைச்சருக்கு ஏற்பட்டால் பிரிவு 2 இன் கீழான விளம்பரத்தை விளம்பரப்படுத்த முடியாது. இதனால் பாதிக்கப்படப்போகும் சொந்தக்காரர் நிலை கருதி நிறுத்தி வைக்க வேண்டும். பெறுமதியான கண்டிப்பான காரணம் காட்டாமல் போனால் எனது பார்வையில், இச்சட்டத்தின் வெளிப்படுத்தும் தேவைப்பாடு பொதுமக்கள் தேவைகருதியே, அத்துடன் அதன் குறிக்கோள் கூட அந்த வெளிப்படுத்தல் இல்லாமல் நிறைவேற முடியாது. பிரிவு 2 இன் கீழான வெளிப்படுத்துகை பொதுமக்கள் தேவைகருதி என சொல்ல வேண்டும் - விதிவிலக்கானவை ஒரு வேளை தேசிய பாதுகாப்பு போன்ற இன்னோரன்னவை தேவை தவிர'.

(பிரிவு 2 விளம்பரம் முதன் முதலில் ஒரு காணி எடுத்தல் ஆரம்பிக்கும் போது ஒட்டப்படும் முதலாவது நோட்டீஸ்)

Manal Fernando and Another Vs D.M Jayaretna and others 2000 (1) Sri LR 112.

The Minister cannot order the issue of section 2 notice unless he has a public purpose in mind. Is there any valid reason why he should withhold this from the owners who may be affected?... In my view, the scheme of the Act requires a disclosure of the public purpose, and its objects cannot be fully achieved without such disclosure. A section 2 notice must state the public purpose, although exceptions may perhaps be implied in regard to purposes involving national security and the like.

ஒரு காணியை சுவீகரிக்க முதல் அந்தக் காணிகள் பற்றி புலனாய்வு செய்வது அவசியம். இதைப்பற்றி காணிக்கட்டளை 248இல் சொல்லப்பட்டுள்ளது. காணி எடுத்தல் பின் அதை பொதுமக்கள் தேவைகருதி பாவிக்காமல் அரசுக்கு வருமானம் தரும் தனியார் கம்பனிக்கு பாவிக்க முடியாது. இதையே உயர் நீதிமன்ற வழக்கான சுகதபால மென்டிஸ் எதிர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் ஏனைய 20 பேரும் என்ற அடிப்படை உரிமை மீறல் வழக்கு எடுத்துக்கூறியது. இவ்வழக்கு இல SC(F.R)352/2007. ஆகவே தேசிய அபிவிருத்தி வேலைகளுக்கு காணி எடுப்பதாக இருந்தாலும் பொதுமக்கள் தேவை கருதியதாக இருக்க வேண்டும். அரசுக்கு வருமானம் தருவது மட்டும் நோக்காக இருக்கக் கூடாது. முறையான சுவீகரிப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டு இயற்கை நீதிச்சட்டம் Natural Justice பின்பற்றப்பட்டு முறையாக விளம்பரங்கள் காணியில் ஒட்டப்பட்டு பாதிக்கப்படும் பொதுமக்களுக்கும் முறையாக வழங்கப்பட்டு முறையாக வழங்கப்பட்டுள்ளமை உரிய அதிகாரிகளால் (G.N) அறிக்கை செய்யப்பட்டு சுவீகரிப்புக் கோவைகளில் கோவை இடப்பட்டிருக்க வேண்டும்.

காணிக்குள் மக்களை செல்லவிடாமல், அவர்களின் காணி எல்லைகளை அவர்கள் காட்டி நில அளவை செய்து அதன் பெறுமதிகளை கணிப்பீடு செய்ய உதாரணமாக, காணி, காணியில் உள்ள கட்டிடங்கள், பயிர்கள், நிரந்தரமாக காணியுடன் கட்டிடத்துடன் இணைக்கப்பட்டவை பற்றி மதிப்பீடு செய்ய சந்தர்ப்பம் வழங்காமல், மாற்றுக்காணி, மாற்று வீட்டுத் திட்டங்களுக்கு ஒழுங்கு செய்யாமல் வீடுகளை இழந்தவர்களை தெருவில் விடுவது மேற்கூறிய அனைத்துமே வலுவிகழ்தலாகும். (Ulta Virus) இது ஒரு அடிப்படை உரிமை மீறலாகும். ஆகவே உடனடியாக பாதிக்கப்பட்டவர்கள் உயர் நீதிமன்ற நீதியரசருக்கு விண்ணப்பித்து அவரின் நேரடி விசாரணைக்கு உட்படுத்தி எமது உரிமைகளை பெறுவோமாக

**உயர் நீதிமன்ற நீதியரசரின் விலாசம்**
**கௌரவ பிரதம உயர் நீதியரசர்**
**உயர் நீதிமன்றம்**
**உயர் நீதிமன்றக் கட்டிடத் தொகுதி**
**கொழும்பு - 12**

இதற்கும் நிவாரணம் கிடைக்காத போது சர்வதேச மனித உரிமைகள் சம வாயத்தின் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் குழுவுக்கு முறைப்பாடு செய்வோமாக... ■

**குருநாதன்**
**நிபுணத்துவ ஆலோசகர்**
**சட்ட உதவி ஆணைக்குழு**
**வடமாகாணம்,**
**முன்னை நாள் காணி ஆணையாளர்**
**கிழக்கு மாகாணம்**




# நவாஸ் ஷெரீப் சீர்செய்ய வேண்டிய மூன்று பெரிய குறைபாடுகள்



*சிறில் அல்மெய்டா*

அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஜனநாயக செயற்திட்டத்தின் நல்லதொரு பாதுகாவலனாக ஷெரீப் விளங்குவார் என்பதற்கான தெளிவான அறிகுறிகள் தெரிகின்றன. ஆனால் தேசிய பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கை மீதான கட்டுப்பாட்டை தனது கையில் எடுத்துக்கொள்வதற்கான முயற்சியில் இராணுவத்தை வழிக்கு கொண்டுவர அவரால் முடியுமா?

நவாஸ் ஷெரீப் மீண்டும் வந்துவிட்டார். இத்தடவை அவரின் வருகை ஒரு சில தலைமுறைகளில் பாகிஸ்தானின் மெய்யான ஒரேயொரு அரசியல் ஞானியாக அவரை நிலை நாட்டுவதற்கு உதவிய ஒரு அரசியல் பயணத்தின் உச்ச நிலையாக நிகழ்ந்திருப்பதாகக் கூற முடியும்.

அவரைக் கண்டனம் செய்பவர்களுக்கு அவர் ஒரு சீர்திருந்தாத வலதுசாரி, இஸ்லாமியத் தீவிரவாதக் குழுக்களின் உணர்வுகளுக்கு வடிகால் தேடிக் கொடுப்பதற்கு தனது கட்சியை அனுமதிக்கின்ற ஒரு பழைமைவாத அரசியல்வாதி, அதிகாரக் கட்டமைப்பின் ஏனைய நிறுவனங்களுடன், குறிப்பாக சக்திமிக்க இராணுவத்துடன் மோதலுக்குப் போகிற விளைவைப்பற்றிக் கவலைப்படாத ஒரு கர்வம் மிகுந்த வீறாப்புக்காரன்.

ஆனால், ஷெரீப் இனிமேலும் கூட, சர்வாதிகாரி ஸியா உல் ஹக்கின் ஒரு சீடனாக அரசியலில் ஒரு ஆரம்பத்தைக் கொண்ட அனுபவமற்ற 30 வயது பேர்வழியல்ல. எந்த நேரத்தில் மோதலுக்குப் போக வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதில் உள்ள இயலாமை அல்லது ஏனைய அதிகாரமையங்களுடன் சக வாழ்வை நடத்துவதற்கு கற்றுக்கொள்வதில் உள்ள இயலாமை காரணமாக, பிரதமர் என்ற வகையில் தனது முதல் இரு பதவிக்காலங்களும் அரை குறையாக முடிவுக்கு வந்த ஒரு தான் தோன்றித்தனமான முரண்டுபிடிக்கா

ரனும் அல்ல.

பதிலாக, பெர்வெஸ் முஷாரப்பின் ஆட்சியின் கீழ் சிறிது காலச் சிறைவாசம், பிறகு அஞ்ஞாதவாசம், அசீவ் அலி சர்தாரி தலைமையிலான பாகிஸ்தான் மக்கள் கட்சியின் அரசாங்கத்துக்கான எதிர்க்கட்சித்தலைவராக ஐந்து வருட காலப் பதவி ஆகியவை ஷெரீபை பக்குவப்படுத்தி விட்டன போல் தெரிகிறது. அவர் இப்போது ஜனநாயகத்தின் தொடர்ச்சி இன்றியமையாதது, தவிர்க்க முடியாதது என்பதை விளங்கிக் கொண்டிருக்கிற ஒரு தலைவர். அத்துடன் பாகிஸ்தானில் அடிப்படையாக இருக்கிற இரு குறைபாடுகளை அதாவது சிவில்- இராணுவப் பிளவையும் இந்தியாவுடனான உறவுகளையும்- சீர் செய்வதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டிருக்கிறார் ஷெரீப்.

ஒன்றாகச் சேர்த்துப் பார்க்கும் போது ஜனநாயக செயற்திட்டத்தைப் பலப்படுத்துதல், சிவில்- இராணுவ முரண்பாடுகளை சரியான திசையில் கையாளுதல், இந்தியாவுடனான உறவுகளை மாற்றியமைப்பதற்கு நாட்டம் காட்டுதல் ஆகியவை எல்லாம் பாகிஸ்தானிய அரசை அடிப்படையாகவே மாற்றியமைப்பதற்குச் சமமான முயற்சிகளாகவே அமையும். இத்தகைய முயற்சியை இறுதியாகச் செய்தவர் ஜெனரல் ஸியா. ஆனால், அவரின் முயற்சி மிகவும் வேறுபட்ட நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டது. இறுதியில் அனர்த்தத்தனமாகவே போய்முடிந்தன. ஷெரீப்பினால் அதைச் செய்ய முடியுமா? அவரிடம் அதற்குத் தேவையான இயற்பண்புகள் இருக்கின்றன. அவர் ஒரு பஞ்சாபி. உண்மையாகவே மக்கள் செல்வாக்குடையவர், தனது நம்பிக்கைகளைத் துணிச்சலுடன் முன்னெடுப்பதற்கான ஓர்மத்தைக் கொண்டவராகத் தோன்றுகிறார்.

தேர்தல் பிரசாரங்களின் போது ஷெரீப் ஒரு உள்ளச் சமநிலையை, நிதானத்தை வெளிக்காட்டினார். அத்தகைய போக்கை அவரிடம் இறுதியாக அவர் பாகிஸ்தானை ஆட்சி செய்த 1990களில் காணமுடிந்ததில்லை. பாகிஸ்தான் மக்கள் ஆட்சி, இம்ரான்கான் தலைமையிலான பாகிஸ்தான் - ரெஹ்ரீக் - ஈ- இன்சாப், முஷாரப்பின் பழைய கட்சியான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (கியூ) என்று (பெரும் நிதிவளத்தைக் கொண்ட) சகல தரப்பு அரசியல் எதிரிகளிடமிருந்தும் வந்த படுமோசமான தாக்குதல்களுக்கு முகங்கொடுத்து கீழ்த்தரமான எதிர்த்தாக்குதல்களைத் தொடுக்கவில்லை. அரசியல் சகதிக்குள் விழுந்து புரளவில்லை. மாறாக தேசிய பொருளாதாரம் எதிர்நோக்குகிற சவால்கள் குறித்தும் உறுதியான அரசாங்கம் ஒன்றின் தேவை குறித்தும் மாத்திரமே தேர்தல் பிரசாரங்களின் போது ஷெரீப் கவனத்தைச் செலுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது.

தேர்தல் பிரசாரங்கள் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த நேரத்தில் முக்கியமான வேளையில் இம்ரான் கான் மேடையில் இருந்து வீழ்ந்து காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவரின் பிரசாரங்களும் கைவிடப்பட்டன. ஒரு நல்லெண்ணச் சமிக்ஞையாக ஷெரீப் தனது தேர்தல் பிரசாரங்களை 24 மணிநேரத்துக்கு இடைநிறுத்திக் கொண்டார். இம்ரான் கானின் கட்சிக்கு இறுதி நேரத்தில் ஏற்படக்கூடிய செல்வாக்கு அதிகரிப்பு ஷெரீப்பின் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கின் வாக்குகளை அரித்துச் சென்றுவிடக் கூடும் என்று அஞ்சப்பட்டதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது இந்தத் தேர்தல் பிரசார இடைநிறுத்தம் குறிப்பிடத்தக்கதொரு விட்டுக்கொடுப்பாக அமைந்தது. இந்தச் செயல் அடுத்த ஐந்து வருடங்களுக்கு ஜனநாயக செயற்திட்டத்தின் நல்லதொரு பாதுகாவலனாக ஷெரீப் விளங்குவார் என்ற நம்பிக்கையைக் கொடுக்கிறது. ஆனால், தேசிய பாதுகாப்பு மற்றும் வெளியுறவுக் கொள்கை மீதான கட்டுப்பாட்டை தனது கையில் எடுத்துக்கொள்வது என்று வரும்போது இராணுவத்தை வழிக்குக் கொண்டு வர அவரால் முடியுமா?

இதுவிடயத்தில் இராணுவத்திடமிருந்து எதிர்பாராத சில உதவிகள் ஷெரீப்புக்குக் கிடைக்கக்கூடும். அவரைப் பற்றி இன்னமும் கூட மிகுந்த எச்சரிக்கையுணர்வுடனேயே இராணுவம் இருக்கிறது என்பது நிச்சயம். ஆனால், பாகிஸ்தானில் எதிர்த்துக் கேள்வி கேட்கப்படாததும் மேலாதிக்கம் கொண்டதுமான சக்தி என்றில்லாமல், சமத்துவமானவர்கள் மத்தியில் முதன்மையானவர் என்ற வகையிலான புதியதொரு பாத்திரத்தை இராணுவம் ஏற்றுக்கொண்டிருக்கின்றது போலத் தோன்றுகிறது. தற்போதைய இராணுவத்தளபதி ஜெனரல் கயானி சில மாதங்களில் ஓய்வுபெறவிருக்கிறார். அவரின் இடத்துக்கு ஒருவரைத் தெரிவு செய்வதென்பது ஷெரீப்பைப் பொறுத்தவரை முதற் பரீட்சையாக அமையலாம். பிரதமரினால் நியமிக்கப்படுவது போன்று வெளியில் தெரிந்தாலும், பதவி விலகும் இராணுவத்தளபதியினால் கொடுக்கப்படுகிற ஒரு சிறியதொரு பட்டியலில் இருந்தே புதிய இராணுவத்தளபதி நடைமுறையில் தெரிவுசெய்யப்படுகிறார்.

கடந்த காலத்தில், ஷெரீப் உட்பட தான்தோன்றித்தனமான சிவிலியன் பிரதமர்கள், இராணுவத்தின் அரசியல் பாத்திரத்தை மட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாக தங்களுக்கு விருப்பமானவர்களை இராணுவத்தளபதியாக நியமித்தனர். ஆனால், அதனால் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. 1999 ஆம் ஆண்டு முஷாரப்பினால் பதவி கவிழ்க்கப்பட்ட போது ஷெரீப்பினால் பாடத்தைப் படித்துக்கொள்ள முடிந்தது. முஷாரப் தனக்குச் சவாலாக அமையமாட்டார் என்ற எதிர்பார்ப்பிலேயே ஷெரீப் அவரை இராணுவத்தளபதியாக நியமித்தார். இந்தியாவைப் பொறுத்தவரை, ஷெரீப் தனது நோக்கங்களை ஏற்கனவே வெளிக்காட்டிவிட்டார். தேர்தல் பிரசாரத்தின் இறுதிநாட்களில் இந்திய ஊடகங்களுக்கு அவர் ஒளிவுமறைவின்றிய பேட்டிகளை

*(41ஆம் பக்கம் பார்க்க...)*

# தேவை சுயபரிசோதனை...



என்.சத்தியமூர்த்தி

**தமிழ்த் தேசியவாதத் தலைவர்கள் இந்தியா குறித்து மட்டுமல்ல இலங்கை அரசு மற்றும் சிங்களப் பேரினவாதம் குறித்த தங்கள் கருத்துகளையும் மீள்பரி சோதனை செய்ய வேண்டும். அதற்குப் பின்னரான செயற்பாடுகளால் மாத்திரமே இனப்பிரச்சினை தொடர்பில் இரு சாராரிடமும் மனமாற்றம் ஏற்பட முடியும்**

சரியோ, தவறோ, இலங்கை இனப்பிரச்சினை எப்போதெல்லாம், எங்கெல்லாம் பேசப்படுகிறதோ, அங்கெல்லாம், அப்போதெல்லாம் இந்தியா குறித்த சர்ச்சையும் அதில் ஒரு பகுதியாகவே மாறி விடுகி றது. இன்று, இனப்போர் முடிவிற்கு வந்து நான்கு ஆண்டுகள் ஆன பின்னரும், இந்த நிலைமையே தொடருகிறது. இன்னமும் சொல்லப்போனால், இல ங்கைத் தரப்பினர் எல்லோருமே இந்தியாவால் தான் இனப்போர் வந்தது என்றும், அதனால் தான் நிலைமை இந்த அளவிற்கு மோசமானது என்றும் கூறிவருகிறார்கள். அதனை தாங்களும் நம்பி, அடுத்த நாட்டவர்களையும் நம்ப வைத்து, தங்களது இளைய தலைமுறையினரிடையேயும் விதைத்து வருவது விந்தையான விடயம். வேதனைக்குரிய விடயமும் கூட. இனப்பிரச்சினையின் பிற பரிமாணங்களுக்கும் இந்த விளக்கம் பொருந்தும்.

இருசாராரை கேட்டால், விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், விடுதலைப் புலிகள் இயக்கம் ஒன்றை மட்டுமே இந்தியா வளர்த்து விட்டதாகவும் கூறுவது அவர்களுக்கு கரும்பு தின்பது போல மாறி விட்டது. அவ்வாறு கூறுவதால் மட்டுமே, தங்கள் தரப்பின் வாதங்களையும், விதண்டாவாதங்களையும் நியாயப்படுத்திக் கொள்ளமுடியும் என்று அவர்கள் கருதுவதாகவே எண்ணத் தோன்றுகிறது. இன்னும் சொல்லப்போனால், தங்களது கடந்த காலத் தவறுகளை மறைப்பதற்கு, அல்லது நியாயப் படுத்துவதற்கு, அவற்றோடு தோன்றும் குற்ற உணர்வை அழிப்பதற்கு, இந்தியா மீது பழி சுமத்துவது அவர்களுக்கு இயற்கையாகத் தோன்றும் ஓர் உணர்வாகவே மாறிவிட்டது. இதனைக் கூட இருசாராரும் உணர்ந்ததாகவே தெரியவில்லை.

இதில், இலங்கை அரசு அல்லது சிங்கள அரசியல் தலைமைகள், எண்பதுகளில் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுத்ததையும், பின்னர், 1987-ஆம் ஆண்டு, வடமராட்சியில் பொறியில் சிக்கிய எலியாக விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் தவித்தபோது, இந்திய விமானப்படை 'ஆப்பரேஷன் பூமாலை' மூலம் அடைபட்டுப் போன அப்பாவித் தமிழ் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களை வழங்கியதையும், ஏன், இந்தியா-இலங்கை ஒப்பந்தத்தையும் கூட தொடர்ந்து விமர்சனம் செய்து வருகிறார்கள். இதில் வேடிக்கை மிக்க வேதனை என்னவென்றால், இது போன்ற பல்வேறு முயற்சிகளை தமிழ்த் தலைமைகளும் தொடர்ந்து தாக்கி வந்துள்ளன.

இலங்கை விடயத்தில், எண்பதுகளில் இந்தியா இடைபடுவதற்கு முன்பிருந்தே, விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் இளைஞர் குழுக்கள் ஆயுதம் எடுத்து போரிடவும், அதற்கு முன்பிருந்தே தொடங்கி, வங்கிகளை கொள்ளையடித்து தங்களது போராட்டங்களுக்கு ஆயுதம் வாங்கவும் தொடங்கி விட்டனர். அது போன்றே, இந்தியா வருவதற்கு முன்பிரு ந்தே, தமிழ் இளைஞர்கள் பாலஸ்தீனத்திற்கு சென்று ஆயுதப் பயிற்சி எடுக்கத் தொடங்கி விட்டனர். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் அளவிற்கு லண்டன் நகரில் இருந்த இலங்கைத் தமிழ்க் குழுக்கள் சிந்தனை செய்து செயல்படத் தொடங்கி விட்டன. யாழ்ப்பாணம் மேயர் ஆல்பிரட் துரையப்பா படுகொலை செய்யப்படும் போது, இந்தியாவிற்கும் இலங்கைத் தமிழ்ப் போராட்டக் குழுக்களுக்கும் எந்தவித உறவும் இருந்திருக்கவில்லை.

தொடர்ந்து 1983-ஆம் ஆண்டு இலங்கையில் இனப்படுகொலை நிகழாதிருந்திருந்தால், அதன் காரணமாக இரண்டரை இலட்சம் தமிழ் அகதிகள் கடல் கடந்து தமிழ் நாட்டில் தஞ்சம் அடையாதிருந் திருந்தால், இந்தியாவிற்கு இனப்பிரச்சினையின் பல்வேறு பரிணாமங்கள் இந்த அளவிற்கு தெரியாமலே கூட போயிருக்கலாம். அதனைத் தொடர்ந்து இந்தியா தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி அளித்ததே அவர்கள் தங்களது மக்களது உயிரையும் உடைமைகளையும் ஓரளவிற்காக

வேனும் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்ற எண்ணத்தில் தான்.

அன்று துவங்கி இன்று வரை தொடரும் போர்கள் மற்றும் போராளிக் குழுக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளும் இந்தியாவின் இந்த முடிவிற்கு காரணமாக இருந்தது. சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு காண முயலும் பட்சத்தில், அரசு மற்றும் அரசல்லாத தரப்பினர் இடையே, படைபலம் உட்பட்ட பல்வேறு முயற்சிகளில் சமன் நிலை எட்டியிருந்தால் மட்டுமே, அந்த முயற்சிகள் வெற்றிபெற முடியும் என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில் கூட இந்தியா, இலங்கைத் தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி கொடுக்க முன்வந்திருக்கலாம்.

ஆனால், அது எத்தகைய தவறான சித்தாந்தம் என்பது, ராஜீவ் காந்தி-ஜெயவர்தன ஒப்பந்தத்தை தமிழர் தரப்பும் இலங்கை அரசும் இரண்டுமே உதாசீனப்படுத்தியதில் இருந்தே தெரிந்துகொள்ள முடிந்தது. காரணம், இனப்பிரச்சினைக்குப் பின்னால் உள்ள அடிப்படைக் காரண-காரணிகளை இந்தியாவால் முழுவதுமாக அறிந்து, புரிந்து செயல்பட முடியாததால் தான் இந்த நிலைமை ஏற்பட்டது. புரையிட்டுப் போன அடிப்படைப் பிரச்சினைகளின் ஆதி-அந்தம் குறித்து இருசாராருமே இந்தியாவிற்கு சரியான தகவல்களையும் அறிவுலைகளையும் அளிக்காததாலேயே, இந்தியாவும் இல்லாத ஊருக்குச் செல்லாத பேருந்தை அளித்து, சுமுகமான முடிவையும் அதன் மூலம் கிடைக்கும் ஆத்ம திருப்தியையும் எதிர்பார்த்தது.

இரண்டுமே அடையாத நிலையில், இனப்பிரச்சினையை அவ்வப்போது எதிர்கொள்ளும் சூழ்நிலை தோன்றினாலும், இந்தியா, தெற்கு ஆசிய சமூகத்திற்கே உரித்தான ''வேதாந்த நிலையை அடைந்து'' இது குறித்த தனது கடமைகளை செவ்வனே நடத்தி, முடிவைக் குறித்து கவலைப்பட முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டு விட்டது. இதற்கு, இந்திய அமைதிப் படை குறித்த தமிழ்த் தலைமை மற்றும் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பு, அது போன்றே ராஜீவ்காந்தி படுகொலை ஆகியவையும் காரணம் எனலாம்.

ஆனால், அது ''தமிழ்த் தேசிய'' வாதிகள் நம்பவைப்பது போல் ஏதோ ''பொடியன்களின் சிறுபிழை'' அல்ல. அல்லது, இந்த இரண்டு ''பிழை''களுக்காக தான் இந்தியா தங்களை பின்னர் பழிவாங்கி விட்டது என்பதும் உண்மையல்ல. இந்தியா மீது பழியைப் போட்டுவிட்டால், தங்களது மனச்சுமை அந்த அளவிற்கு குறைந்து போய்விட்டது என்ற வகையில், இன்னமும் பிரிந்து நிற்கும் ''தமிழ்த் தேசிய'' சமூகத் தலைமைகள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வது எந்த விதத்தில் அந்த சமூகத்திற்கு பயன்படப் போகிறது என்பதை அவர்களே உளச்சுத்தியோடு இனியாவது சுய பரிசோதனை செய்து கொள்ளவேண்டும்.

விடுதலைப் புலிகள் இயக்கமும், அவர்களுக்குப் பயந்து கொண்டதாக கூறிக்கொண்டே கொள்கை அளவில் அவர்களை ஆட்டிப்படைத்த ''தமிழ்த் தேசியம்'' குறித்து வியாக்கியானங்களை வழங்கிய வட இலங்கை சமூகத் தலைமையும் எதிர்காலத்தைக் குறித்து விமர்சிக்கும் போதே, தங்களது கடந்த காலம் குறித்தும் சிந்தித்து - பின்னர் செயல்பட வேண்டும். அந்த சுய பரிசோதனை, இந்தியா குறித்து மட்டுமல்ல, இலங்கை அரசு மற்றும் ''சிங்களப் பேரினவாதம்'' குறித்த தங்களது கருத்துகளையும் மீண்டும் பரிசோதனை செய்ய வேண்டும். அவ்வாறு செய்து பின்னர் செயல்பட்டால் மட்டுமே இனப்பிரச்சினைக்கான மன மாற்றம் இருசாராரிடமும் ஏற்படும். அப்போது, இந்தியாவின் உதவி இல்லாமலே கூட, இலங்கையில் உள்ள அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்புடைய, மனதால், வாக்கால், செயல்பாட்டால் ஏற்றுக்கொள்ளக்கூடிய சுமுகமான தீர்வு ஏற்படும். ■

(39ஆம் பக்கத்தொடர்ச்சி...)

வழங்கியதைக் காணக்கூடியதாக இருந்தது. 1990களில் தன்னால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தனது விருப்பத்தை அந்தப் பேட்டிகளில் அவர் வெளிக்காட்டியிருந்தார்.

பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யுமாறு, அதுவும் அடுத்தமாத முற்பகுதியில் நடைபெறவிருக்கும் தனது பதவியேற்பு வைபவத்தில் ஒரு விருந்தினராகக் கலந்துகொள்ளுமாறு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு ஷெரீப் அழைப்புவிடுத்திருக்கிறார். ஆனால், ஒளிவுமறைவின்றிப் பேசுகிற பேச்சும் தைரியமும் சாத்தியமாக்குவதை பழைய தந்திரங்களினால் சீர்குலைத்துவிட முடியும். ஷெரீப் பிரதமராக இருந்த காலத்திலேயே 1999ஆம் ஆண்டு இந்தியப் பிரதமர் ஒருவர் முதற்தடவையாக பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டார். ஆனால், பாகிஸ்தான் இராணுவம் மூளவைத்த கார்கில் போர் அந்த சமாதான முயற்சியைச் சில மாதங்களில் சீர்குலைத்துவிட்டது. ஷெரீப் இப்போது செய்வதைப் போன்று சர்தாரியும் 2008ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வந்ததும் இந்தியாவுக்கு நேசக்கரம் நீட்ட முயற்சித்தார். ஆனால் மும்பைத் தாக்குதல்கள் இடம்பெற்றதால் அவரின் முயற்சிகள் பயனளிக்க முடியாமற் போய்விட்டன. பாகிஸ்தான் இராணுவத்துக்கு நெருக்கமான லஷ்கர்-ஈ-தைபா என்ற தீவிரவாத இயக்கமே அத்தாக்குதல்களை மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

ஷெரீப் இறுதியாகப் பிரதமராகப் பதவிவகித்த காலகட்டத்தில் இருந்து பாகிஸ்தான் அரசையும் சமுதாயத்தையும் பாரதூரமாக அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இன்னொரு பெரிய குறைபாடு தீவிரவாதமும் வன்முறையுமாகும். இன்று பாகிஸ்தான் எதிர்நோக்குகிற அந்தச் சவால் குறித்து ஷெரீப் பெரிதாக எதையும் பேசவில்லை என்பது கவலைக்குரியதாகும். ■


*த கார்டியன்*

# ஐ.பி.எல். அசிங்கம்




உலகக்கிண்ணத்தை வென்ற இந்திய கிரிக்கெட் அணியின் வீரர் என்ற அந்தஸ்திலிருந்து கிரிக்கெட் மோசடியில் ஈடுபடும் ஒரு ஊழல்காரராக இன்று குற்றம் சாட்டப்படுகின்ற நிலைக்கு வந்திருக்கும் ஸ்ரீசாந்த்

இந்தியன் பிறிமியர் லீக் கிரிக்கெட் போட்டிகள் (ஐ.பி.எல்.) ஒருபோதுமே தூய்மையான சுற்றுப் போட்டியாக இருந்ததில்லை. 2008 ஆம் ஆண்டில் அதன் ஆரம்பம் முதலிருந்தே நாடகபாணி நிகழ்வுகள், பாலியல் கவர்ச்சி தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், மைதானத்திலும் தொலைக்காட்சிகளிலும் அரை குறையாக ஆடை அணிந்த கிளுகிளுப்புக் காரிகையரின் (Cheer girls) ஆபாச ஆட்டங்கள், போட்டி முடிவுக்குப் பின்னரான கேளிக்கை விருந்துகள் என்று இன்னோரன்ன அம்சங்களை உள்ளடக்கிய ஒரு பொழுதுபோக்கு கிரிக்கெட் சுற்றுப் போட்டியாக இந்தியன் பிறிமியர் லீக் போட்டிகள் மாற்றியமைக்கப்பட்டுவிட்டன. இத்தகைய மோசடித்தனமான ஏற்பாடுகள் மத்தியிலும் இந்தச் சுற்றுப்போட்டி சகலரினதும் கண்களைக் கவரவே செய்திருக்கிறது. மக்கள் ஆதரவு கணக்கெடுப்பில் ஏனைய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஐ.பி.எல். போட்டிகள் விஞ்சிவிட்டன. பெரும் பணம் புரளுவதால் உலகில் மிகுந்த இலாபம் கொழிக்கும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியாகவும் இது மாறிவிட்டது. கிரிக்கெட் வீரர்களுக்கு கோடிக்கணக்கில் டொலர்கள் வாரியிறைக்கப்படுகின்றன. இப்போது ஐ.பி.எல்.ஒரு திகில் நாடகமாக மாற்றப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. விளையாட்டின் நடுவே இன்றியமையாத வேளையில் வேண்டுமென்றே தவறு செய்தல் அல்லது சரியாக விளையாடாமல் இருப்பதற்காக பந்தயக்காரர்களிடம் (Bookies) கிரிக்கெட் வீரர்கள் பணத்தை வாங்கிக் கொண்டு போட்டியின் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிற மோசடி (Spot Fixing) அம்பலமாகியிருக்கிறது. சர்வதேச தொடர்புகளுடனான அத்தகைய பந்தய மோசடி மே 16 ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது. திறமையின்மைக்காக குறைகூறப்பட்டு வந்த டில்லிப் பொலிஸே இதைக் கண்டுபிடித்திருப்பது விசித்திரமான ஒரு அம்சமாகும். ராஜஸ்தான் றோயல்ஸ் அணியைச் சேர்ந்த மூன்று கிரிக்கெட் வீரர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மிதவேகப்பந்து வீச்சாளர் எஸ். ஸ்ரீசாந்த், சுழற்பந்து வீச்சாளர்களான அங்கீத் சவான், அஜித் சண்டிலா ஆகியோரே அவர்களாவர். இவர்களில் ஸ்ரீசாந்தின் விவகாரமே மிகவும் மோசமானதாக இருக்கிறது. உலகக் கிண்ணத்தை வென்ற இந்திய கிரிக்கெட் அணியில் இடம்பெற்ற வீரர் என்ற அந்தஸ்தில் இருந்து கிரிக்கெட் மோசடியில் ஈடுபடும் ஒருவராக இன்று குற்றஞ்சாட்டப்படுகிற நிலைக்கு அவர் மாறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. மும்பையில் உள்ள அவரது வீட்டில் இருந்து ஸ்ரீசாந்த் கைது செய்யப்பட்ட அதே வேளை, மற்றைய இருவரும் தங்கள் அணி தங்கியிருந்த மும்பை ஹோட்டலில் வைத்துக் கைதுசெய்யப்பட்டனர். மும்பை இன்டியன்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் கலந்து கொண்டு விட்டு அவர்கள் ஹோட்டலுக்கு திரும்பிய சில மணி நேரங்களில் கைது இடம்பெற்றது.



டில்லி டயறி



எம்.பி.வித்தியாதரன்

பொலிஸ் தங்களைக் கைதுசெய்யுமென்று இந்த நாடகத்தின் நாயகன் ஸ்ரீசாந்த் ஒருபோதுமே கற்பனை கூட செய்துபார்த்திருக்கமாட்டார். ஆடுகளத்திலும் வெளியிலும் இடம்பெற்றிருக்கக்கூடிய நாடகபாணி நிகழ்வுகளில் பெயரெடுத்த ஸ்ரீசாந்த் தொடர்பாடல்களுக்காக ஒருபோதுமே தொலைபேசிகளைப் பயன்படுத்தவில்லை. தனது செல்போனில் பிளக்பெரி செய்தி அனுப்பல் முறையே பயன்படுத்தியிருக்கிறார். இவற்றின் மூலமாக மேற்கொள்ளப்படுகிற



அங்கீத் சவான்

தொடர்பாடல்களை கண்டுபிடிப்பது கஷ்டம். பந்தயக்காரர்களுடன் ஏற்பாடுகளைச் செய்து கொண்ட பிறகு ஸ்ரீசாந்த், சவானையும் சண்டிலாவையும் டில்லியின் புறநகர்ப்பகுதியில் குர்கோனில் உள்ள கடைத்தொகுதி ஒன்றில் பந்தயக்காரர்களைச் சந்திப்பதற்கு அனுப்பியிருந்தார்.

இதுவரையில் 14 பந்தயக்காரர்களையும் பொலிஸார் கைது செய்திருக்கிறார்கள். இவர்களில் 7 பேர் டில்லியைச் சேர்ந்தவர்கள். மூவர் மும்பையைச் சேர்ந்தவர்கள். மேலும் கிரிக்கெட்வீரர்கள் இந்த மோசடி விவகாரத்தில் சம்பந்தப்படவில்லை என்று டில்லிப் பொலிஸ் ஆணையாளர் நீராஜ் குமார் கூறியிருக்கின்ற போதிலும் கூட, மேலும் பல கைதுகள் இடம்பெறக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. கைது செய்யப்பட்ட அனைவர் மீதும் இந்திய தண்டனைச் சட்டக் கோவையின் 420 (ஏமாற்று மோசடி), 120 பி (கிறிமினல் சதி) பிரிவுகளின் கீழ் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. கிரிக்கெட் வீரர்கள் டில்லி நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்டார்கள். அவர்களை 5 நாட்கள் பொலிஸ் காவலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

இவ்வருடம் ஐ.பி.எல்.ஆரம்பமானதிலிருந்து டில்லிப் பொலிஸார் தொலைபேசிகளை ஒற்றுக்கேட்டுக் கொண்டே வந்திருக்கிறார்கள்.

பல நூற்றுக்கணக்கான மணித்தியாலங்கள் பதிவு செய்யப்பட்ட தொலைபேசித் தொடர்பாடல்களை பரிசீலனை செய்த பிறகு பொலிஸார் மே 16 கிரிக்கெட் வீரர்களைக் கைதுசெய்யத் தீர்மானித்தார்கள். இதற்கு முன்னதாக பந்தயக்காரர்களைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியிருந்தார்கள். டில்லியில் இடம்பெற்ற முன்னைய ஆர்ப்பாட்டங்களைத் தவறாகக் கையாண்டதனால் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்த அனுபவம் காரணமாக பொலிஸார் இத்தடவை தங்கள் தரப்பில் எந்தத் தவறும் இடம் பெறாதிருப்பதை உறுதிசெய்து கொள்வதில் குறியாக இருந்தார்கள்.

**ஒரு ஸ்பொட் ஃபிக்ஸிங்கிற்கு 60 இலட்சம் வீதம் கிரிக்கெட் வீரர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டிருப்பதாக டில்லி பொலிஸ் ஆணையாளர் நீராஜ்குமார் கூறுகிறார்**


டில்லிப் பொலிஸின் தவறுகளுக்காக நீராஜ்குமார் பதவி விலக வேண்டுமென்று தொடர்ச்சியாகக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட வண்ணமிருந்தன. ஆனால், அவர் பதவி விலகத் தயாராயில்லை. ஒரு ஸ்பொட் ஃபிக்ஸுக்கு 60 இலட்சம் ரூபா வீதம் கிரிக்கெட் வீரர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டிருப்பதாக நீராஜ்குமார் கூறுகிறார். ஐ.பி.எல். ஏலங்களிலும் கோடிக்கணக்கில் பணத்தைப் பெறுகின்ற இந்த கிரிக்கெட் வீரர்கள் மேலும் பணத்தைச் சுருட்டுவதற்கு எப்படியெல்லாம் நடந்துகொள்கிறார்கள் பார்த்தீர்களா?

பாதாள உலகத்தவர்களுடனான தொடர்புகளைக் கொண்ட இந்தப் பந்தயக்காரர்களும் கிரிக்கெட் வீரர்களும் துவாய்கள் மூலமாகவும் வேறு நடவடிக்கைகள் மூலமாகவும் தொடர்பாடல்களைச் செய்திருக்கிறார்கள் என்று பொலிஸார் கூறுகிறார்கள். முழு விளையாட்டினதும் முடிவை நிர்ணயம் செய்வதைப் போலன்றி, இந்த ஸ்பொட் ஃபிக்ஸிங் என்பது விளையாட்டின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தின் விளைவை (அல்லது முடிவை) தீர்மானிப்பதாகும். ஒருபந்து வீச்சின் விளைவை ஒரு பந்துவீச்சில் அல்லது ஒரு ஓவரில் துடுப்பாட்டக்காரர் ஒருவர் எத்தனை ஓட்டங்களைப் பெறுகிறார் என்பதை தீர்மானிப்பதே இந்த ஸ்பொட் ஃபிக்ஸிங் ஒரு பந்துவீச்சாளர் எத்தனை ஓட்டங்களைக் கொடுக்கிறார் என்பதிலும் கவனம் செலுத்தப்பட முடி



அஜித் சண்டிலா

யும். கிரிக்கெட் பந்தயக்காரர்களுக்கு எதிராக டில்லிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்திருப்பது இதுதான் முதற் தடவையல்ல. 2000ஆம் ஆண்டு ஹன் சீ குரொன்ஜே போன்ற தலைசிறந்த தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் சம்பந்தப்பட்ட ஒருபெரிய கிரிக்கெட் பந்தய மோசடியை பொலிஸார் கண்டுபிடித்தனர். சூதாட்டத்தில் சம்பந்தப்பட்டதை ஒப்புக்கொண்ட


ஐ.பி.எல். தலைவர் ராஜீவ் சுக்லா

குரொன்ஜே ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களை பெற்றதாகக் கூறியிருந் தார். முஹமட் அசாருதீன், அஜய் ஐடேஜா போன்ற இந்திய கிரிக்கெட் வீரர்களும் சூதாட்டத்தில் சம்பந்தப் பட்டிருந்ததாகக் கூறப்பட்ட போதி லும், அவர்கள் அதை ஒருபோதுமே ஒத்துக்கொண்டதில்லை. என்றாலும், குறிப்பிட்ட காலகட்டங்களுக்கு அவர்கள் கிரிக்கெட் விளையாடுவ தற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட் டுச் சபை தடைவிதித்தது. சூதாட்டத் தில் சம்பந்தப்பட்டதாக பெயர் குறிப் பிடப்பட்ட இன்னொருவர் பாகிஸ் தான் கிரிக்கெட்வீரர் சலீம் மாலிக்.

ஐ.பி.எல்.இலும் கூட ஏற்கனவே பந்தயச் சூதாட்டம் இடம்பெற்றே வந்திருக்கிறது. பந்தயம் கட்டுபவர்க ளுக்கும் உயர்மட்ட ஐ.பி.எல், அதிகா ரிகளுக்கும் இடையேயான சம்பாஷ ணைகளை இந்திய மத்திய புலனாய்வுப் பணியிலும் (சி.பி.ஐ.) பதிவு செய்திருந்தது. ஆனால், அந்த ஊழல் விவகாரம் குறித்து வேறு எது வும் வெளியே வரவில்லை.

குறுஞ்செய்தியூடாக அல்லது பிளக் பெரி செய்தி அனுப்பல் வழிவகையூ டாக ஐ.பி.எல்.போட்டி குறித்து அப் போட்டி இடம்பெறுவதற்கு முன்ன தாகவே ஒருவருக்கு தகவல் கிடைத் தால் ஆச்சரியப்படுவதற்கு எதுவு மில்லை. கிரிக்கெட் போட்டிகள் மீது பந்தயம் பிடிப்பதென்பது மும்பை யில் பழைய வியாபாரம், இந்த வியா பாரம் பாதாள உலகத்தவர்களினதும் சட்டத்தை அமுலாக்கும் பிரிவுகளின தும் உதவியுடன் செழித்து வளர்ந்தி ருக்கிறது.

பெரும்பாலான பந்தயங்கட்டல் கள் (இவை இந்தியாவில் சட்ட விரோதம்) மும்பையிலும் குஜராத்தி

**‘பொலிஸாருடன் நாங்கள் முழுமையாக ஒத்துழைப்போம்’**

லுமே இடம்பெறுகின்றன. கிரிக்கெட் போட்டிக் காலங்களில் ஆயிரம் கோடிக்கணக்கில் பணம் கைமாறும். பந்தயக்காரர்கள் பொலிஸாரினால் பிடிபடுவதென்பது அரிதிலும் அரிது எனலாம்.

முன்னாள் ஐ.பி.எல் ஆணையாளர் லலித் மோடிக்கும் காங்கிரஸ் அமைச் சர் சஷி தரூருக்கும் இடையே பகிரங் கமாகவே சச்சரவு மூண்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையில் மீண் டும் கிரிக்கெட் பந்தயச் சர்ச்சை தலை ப்புச் செய்திகளாயிருக்கிறது. அந்த நேரத்தில் மோடி உட்பட ஐ.பி.எல். அணிகளின் உரிமையாளர்களுக்கு எதிராக கிரிக்கெட் போட்டிகள் மீது பந்தயம், கறுப்புப் பணத்தை வெள் ளைப் பணமாக்குதல், வருமானவரி மோசடி போன்ற பாரதூரமான குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டன. ஆனால், இன்றுவரை ஒருவரைக் கூட குற்ற வாளியாகக் காண்பதற்கு சட்டத்தை அமுலாக்கும் பிரிவுகள் தவறிவிட் டன.

**‘ஒரு சில நேர்மையற்ற பேர்வழிகள் விளையாட்டை கறைப்படுத்த அனுமதிக்கப் போவதில்லை’**

2010 ஆம் ஆண்டில் சி.பி.ஐ. அதி காரிகள் ஐ.பி.எல் இன் உயர்மட்ட அதிகாரிகளுக்கும் பந்தயக்காரர்க ளுக்கும் இடையேயான சம்பாஷ ணையை பதிவுசெய்திருந்தார்கள். ஆனால்,அந்த ஊழல் குறித்தும் பிறகு எதுவும் வெளிவரவில்லை. கறுப்புப் பணத்தை சட்டபூர்வமான தாக மாற்றியமை. கிரிக்கெட் அணிக ளில் முதலீடு செய்வதற்கு மொரீசி யஸ்மார்க்கத்தைப் பயன்படுத்தி யமை, வெளிநாட்டுக் கம்பனிக ளுக்கு சட்ட விரோதமாக பணத்தை அனுப்பியமை போன்றவை தொடர் பில் இந்தியன் றிசேர்வ் வங்கியி டமும் அமுலாக்கப் பிரிவிடமும் பதி வுகள் இருக்கின்றன. ஐ.எம்.ஜி கம்பனி உட்பல பல கம்பனிகளுக்கு வருமானவரி இலாகாவின் சர்வதேச வரிப்பிரிவு அறிவித்தல்களை அனுப் பியது. ஐ.பி.எல் சர்ச்சை தொடர்பில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு வருமானவரி இலாகா, அமுலாக்கப் பிரிவு ஆகியவற்றின் அலுவலகங்கள் முன்னால் நாம் காவல் இருந்தோம். ஆவண ரீதியான சான்றுகளுடன் எமக்குப் பிரத்தியேக மான தகவல்கள் தரப்பட்டன.

ஆரம்பக்கட்ட கூச்சல்களுக்குப் பிறகு உயர்மட்டத்திலிருந்து நெருக் குதல் வந்ததையடுத்து சட்டத்தை அமுலாக்கும் பிரிவுகள் இந்த விவகா ரங்களில் அக்கறையை இழந்துவிட்ட தாக உள்வட்டாரங்கள் கூறுகின்றன. 2010 ஆம் ஆண்டு சி.பி.ஐ.யும் அமு லாக்கப் பணியகமும் லலித் மோடிக் கும் ராஜஸ்தான் றோயல்ஸ், பஞ்சாப் மற்றும் கொல்கத்தா நைற் ரைடேர்ஸ்


இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஸ்ரீனிவாசன்


ராஜ்குண்ட்ரா

அணிகளின் உரிமையாளர்களுக்கும் எதிராக ஒரு வழக்கைப் பதிவு செய்த னர். ஆனால், இன்றுவரை எந்த வொரு வழக்குமே விசாரணையின் இறுதிக் கட்டத்தை எட்டவில்லை. கடந்த வருடம்கூட, தொலைக்காட்சி அலைவரிசையொன்று ஐ.பி.எல் ஸ்பொட் ஃபிக்ஸிங்கை அம்பலப் படுத்த ஸ்ரிங் ஒப்பரேசன் ஒன்றை நடத்தியது. விவகாரம் அம்பலப் படுத்தப்பட்டதையடுத்து 5 கிரிக்கெட் வீரர்கள் விளையாட்டில் ஈடுபட முடியாதவாறு இந்திய கிரிக்கெட் கட் டுப்பாட்டுச்சபை தடைசெய்தது.

சம்பவங்கள் தங்களுக்கு பேரதிர்ச் சியைத் தந்திருப்பதாகக் கூறும் ஐ.பி.எல்., தலைவர் ராஜீவ் சுக்லா பந் தய மோசடியை முழுமையாகக் கண்டுபிடிக்க பொலிஸாருடன் தாங் கள் முழுமையாக ஒத்துழைக்கப் போவதாக உறுதியளித்திருக்கிறார். தாங்களும் அதிர்ச்சியடைந்திருப்ப தாகக் கூறியிருக்கும் ராஜஸ்தான் றோயல்ஸின் பிரதம நிறைவேற்று அதிகாரி ரகு ஐயர் 'ராஜஸ்தான் றோயல்ஸ் ஊழலுக்கு கிஞ்சித்தும் இடமளிப்பதில்லை. குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால், நாம் நடவ டிக்கை எடுப்போம்' என்று தெரிவித் திருக்கிறார். கைதுகளினால் அதிர்ச்சி யடைந்திருக்கும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத்தலைவர் என். ஸ்ரீனிவாசன். ஒரு சில நேர்மையற்ற பேர்வழிகள் விளையாட்டைக் கறை படுத்த அனுமதிக்கப் போவதில்லை என்றும் அவர்களுக்கு வழங்கப்பட் டிருக்கும் தண்டனை ஏனையவர்கள் அதேமாதிரி ஊழல் மோசடிகளில் ஈடுபடாதிருப்பதை உறுதிசெய்ய போதுமானதாகும் என்றும் குறிப்பிட் டிருக்கிறார்.

'ருவென்ரி 20 அணிகள் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபடுவது சாத்தியமில்லை. ஆனால் நேர்மையற்ற விளையாட்டு வீரர்கள் ஸ்பொட் ஃபிக்ஸிங்கில் சம்பந்தப்பட்டிருக்கக் கூடும்'

கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஸ்ரீசாந்தையும் ஏனைய இரு வீரர்க ளையும் இடைநிறுத்தியிருப்பதுடன், விசாரணையின் பின்னர் அவர்கள் குற்றவாளிகள் என்று கண்டுபிடிக்கப் பட்டால் அவர்களுக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப் படும் என்று அறிவித்திருக்கிறது.

அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியி ருக்கும் ராஜஸ்தான் றோயல்ஸ்அணி யின் இணை உரிமையாளரான ராஜ் குண்ட்ரா 'ருவென்ரி 20 அணிகள் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபடுவது சாத்தியமில்லை. ஆனால், நேர்மை யற்ற விளையாட்டு வீரர்கள் ஸ்பொட் ஃபிக்ஸிங்கில் சம்பந்தப்பட்டிருக்கக் கூடும்' என்று தெரிவித்திருக்கிறார்.

பலர் பந்தயம் கட்டலுக்கு குறிப் பாக கிரிக்கெட் பந்தயத்துக்கு அடி மையாகிப் போய்விட்டார்கள். பலர் பணமெல்லாவற்றையும் இழந்து நஷ்டப்பட்ட பிறகு குற்றச் செயல்க ளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகிறார் கள்.

தற்போதைய ஆறாவது ஐ.பி.எல். காலகட்டத்தில் 45 ஆயிரம் கோடி ரூபாக்கள் பந்தயங்களில் சம்பந்தப்ப டுத்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படு கிறது. இது கடந்த வருடத்தை விட வும் 3000 கோடி ரூபாக்கள் அதிக மானதாகும். ஒவ்வொரு சூதாடியும் சராசரியாக 500 கோடி ரூபாவுக்கு பந்தயம் கட்டுவார்கள். இத்தடவை அரை இறுதி ஆட்டம், இறுதி ஆட்டத் தின் போது இத்தொகை 1000 கோடி ரூபாக்கள் வரை அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நெருங்கிய உதவியாளர்களை இழந்த மன்மோகன்சிங்


சுதந்திர இந்தியாவின் மிகவும் மோசமான ஊழல்தனமான அரசாங் கத்துக்கு நேர்மையான பிரதமர் ஒரு வர் தலைமைதாங்குகிற விசித்திரம் பற்றி ராஜ்ய சபாவின் எதிர்க்கட்சித் தலைவர் பாரதிய ஜனதாவின் அருண் ஜேட்லி ஒருவருடத்துக்கும் சற்று கூடுதலான காலத்துக்கு முன் னர் கூறியது உங்களுக்கு நினைவி ருக்கும், ஐக்கிய முற்போக்குக் கூட் டணி அரசாங்கத்துக்கு தொடர்ச்சி யாக இருபதவிக்காலங்களுக்கு தலைமை தாங்குகிற மன்மோகன் சிங்கிற்கு எதிராகக் கூறப்பட்ட கன தியானதும் உறுதியானதுமான ஒரு



கூற்றாக அது அப்போது தோன்றி யது. அரசாங்கத்துக்கு எதிராக சில ஊழல் குற்றச்சாட்டுகள் இருந்த போதிலும், புலமைத்துவமிக்க ஜேட்லி சொன்னதைப் பலரும் கணக் கெடுக்கவில்லை.

ஆனால் நிலைவரம் இப்போது முற்றிலும் மாறுபட்டுவிட்டது. அண் மையில் இரு முக்கிய மத்திய அமைச் சர்கள் அதுவும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பதவி விலக நிர்ப்பந் திக்கப்பட்டார்கள். அவர்களுடன் சேர்ந்து இதுவரை ஊழல் குற்றச்சாட் டுகளுக்காகவும் ஊழலை மூடி மறைக்க முயற்சித்தமைக்காகவும் 6 அமைச்சர்கள் பதவியில் இருந்து அகற்றப்பட்டிருக்கிறார்கள்.

மத்திய ரயில்வே அமைச்சர் பவான் குமார் பன்சாலும் சட்ட அமைச்சர் அஷ்வானி குமாருமே இறுதியாக பதவி விலகிக்கொண்டவர்கள். இருவருமே பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள், பிரதமரும் கூட அதே மாநிலத்தைச் சேர்ந்தவரே. இரு அமைச்சர்களையும் பாது



சி.பி.ஐ. தலைவர் ரஞ்சித் சிங்கா

காக்க பிரதமர் முதற்தடவையாக முயற்சித்திருக்கிறார். ரயில்வே சபையில் முக்கியமான பதவியொன்றை வழங்குவதற்காக பணத்தைப் பெற்றபோது அமைச்சரின் உறவினர் ஒருவரை இந்திய மத்திய புலனாய்வுப் பிரிவினர் (சி.பி.ஐ) கையும் களவுமாக பிடித்தனர். நீதிமன்றக் கண்காணிப்பில் நடைபெற்று வருகிற கோல்கேற் ஊழல் விசாரணைகளில் தலையீடு செய்தமைக்காக சட்ட அமைச்சரை உச்ச நீதிமன்றம் கடுமையாகக் கண்டித்தது. அவ்வாறிருந்த போதிலும் பிரதமர் அவர்கள் இருவரையும் பகிரங்கமாகவே நியாயப் படுத்தினார். நீதிமன்றத்தில் ஏற்படக் கூடிய அசௌகரியத்திலிருந்து அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்கு சட்ட அமைச்சர் அஷ்வானி குமார் பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் முயற்சித்துக் கொண்டிருந்தார் என்பதே அவர் மீதான பிரதமரின் அனுதாபத்துக்குக் காரணமாகக் கூறப்படுகிறது. நிலக்கரி அகழ்வுக்காக நிலத்துண்டுகளை ஒதுக்கீடு செய்வதில் இடம் பெற்றதாகக் கூறப்படும் ஊழலில் எதிர்பாராதவிதமாக மாட்டுப்பட்டிருக்கும் பிரதமர் அலுவலகம் சி.பி.ஐ விசாரணை அறிக்கையில் மாறுதல்களைச் செய்யுமாறு சட்ட அமைச்சரைக் கேட்டுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. மேற்படி நிலத்துண்டுகள் ஒதுக்கீட்டை பிரதமர் அலுவலகமே மேற்பார்வை செய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சி.பி.ஐ. தலைவரை தனது அலுவலகத்திற்கு அழைத்த சட்ட அமைச்சர் அறிக்கையில் சில மாற்றங்களைச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அறிக்கையின் மையப்பகுதியையே மாற்றுவதாகும் என்று இதை உச்ச நீதிமன்றம் வர்ணித்திருக்கிறது. அறிக்கையை மாற்றுமாறு சி.பி.ஐ.யைக் கேட்பதற்கு அமைச்சருக்கு எந்த அதி

**சட்ட அமைச்சர் அஷ்வானி குமாருக்கும் சி.பி.ஐ. தலைவருக்கும் இடையிலான சந்திப்பு பற்றிய தகவல் ஊடகங்களுக்கு கசிந்திருக்காவிட்டால் சி.பி.ஐ. அறிக்கையில் மாற்றம் செய்யப்பட்ட விவகாரம் முழுவதுமே கவனிக்கப்படாமல் போயிருக்கும்**

காரமும் கிடையாது. அது அவரின் அலுவலும் அல்ல என்று உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கிறது. கடுமையாக அவதூறுக்குள்ளாகியிருக்கும் சி.பி.ஐ.யை 'கூண்டில் அடைக்கப்பட்ட கிளி' என்று வர்ணித்திருக்கும் உச்ச நீதிமன்றம், அதை சுயாதீனமான ஒரு அமைப்பாக மாற்றுவதே தற்போது தனது முன்னுரிமைக்குரிய விடயம் என்றும் உச்சநீதிமன்றம் கூறியிருக்கிறது. சத்தியக்கடதாசி ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு சி.பி.ஐ. தலைவர் ரஞ்சித்சிங்காவை நீதிமன்றம் கேட்டபோது பயந்துபோன அவர், அறிக்கை சட்ட அமைச்சரினால் மாத்திரமல்ல, பிரதமர் அலுவலகம் மற்றும் நிலக்கரி அமைச்சு ஆகியவற்றினாலும் கூட பார்வையிடப்பட்டு மாற்றங்கள் செய்யப்பட்டதாக ஒத்துக்கொள்ள வேண்டியேற்பட்டுவிட்டது.

அமைச்சருக்கும் சி.பி.ஐ. தலைவருக்கும் இடையிலான சந்திப்புப் பற்றிய தகவல் கசிந்திருக்காவிட்டால், 'முழு நாடகமும்' கவனிக்கப்படாமல் போயிருக்கும். சி.பி.ஐ. அதிகாரிகளுடன் நாகரிகமற்ற முறையில் அமைச்சர் நடந்துகொண்டதால் குழப்பமடைந்த நேர்மையான ஒரு அதிகாரி. அறையில் இருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டதாகவும் அவரே அமைச்சருக்கும் சி.பி.ஐ. தலைவருக்கும் இடையிலான சந்திப்பு பற்றிய தகவலை ஊடகங்களுக்கு கசிய விட்டதாகவும் தெரியவந்திருக்கிறது. சி.பி.ஐ.அறிக்கையை தலைகீழாக மாற்றுவதன் மூலம் அரசாங்கத்தைக் காப்பாற்ற அமைச்சர் எவ்வாறு முயற்சித்தார் என்பதை இந்த அதிகாரியே வெளியே தெரியப்படுத்திப் பெரிய செய்தியாக்கிவிட்டார். ஊட



அஷ்வானி குமார்

கங்களில் செய்தி வெளியாகியதையடுத்து சட்ட அமைச்சரையும் பிரதமரையும் பதவிவிலகுமாறு கேட்டு எதிர்க்கட்சிகள் பாராளுமன்ற நடவடிக்கைகளைச் சீர்குலைத்தன. இதையடுத்து விவகாரத்தை பரிசீலனைக்கெடுத்த உச்ச நீதிமன்றம் அறிக்கை தொடர்பில் சத்தியக் கடதாசியைத் தாக்கல் செய்யுமாறு சி.பி.ஐ.

(50ஆம் பக்கம் பார்க்க...)



PUBLIC LIBRARY JAFFNA

டில்லி நீதிமன்றம் ஒன்றில் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் பொலிஸாரால் அழைத்துச்செல்லப்படும் கிரிக்கெட் வீரர்களும் பந்தய காரர்களும் (மே 16, 2013)

# ஐ.பி.எல். போட்டிகளை சீர்குலைக்க பாகிஸ்தானியர் சதி...?

ரி.எஸ்.கணேசன்

ஐ.பி.எல் போன்ற போட்டிகளை தடைசெய்யும் நேரம் வந்து விட்டதாக கோஷங்கள் எழத்தொடங்கிவிட்டன. கறுப்புப் பணத்தை புளக்க த்தில் விட்டு கோடிக்கணக்கில் வீரர்களை ஏலம்விட்டு, கிரிக்கெட்டைக் லாபம் கொழிக்கும் வியாபாரமாக வர்த்தகர்கள் மாற்றிவிட்டதால், கிரிக்கெட்டை காப்பாற்ற ஐ.பி.எல் போன்ற போட்டிகளை தடைசெய்யுங்களென சமூக வலைத்தளங்களில் பலரும் கருத்துக்கூறத் தொடங்கிவிட்டனர். ஐ.பி.எல். கிரிக்கெட் உன்னதமானது, சுத்தமானது என்ற மாயையை தொடர்ந்தும் ஏற்படுத்த இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.ஐ) முயன்று கொண்டிருக்கையில் ராஜஸ்தான் ரோயல்ஸ் வீரர்களின் கைது இந்த மாயையை முழுமையாகத் தகர்த்து விட்டது. இதனால், இம்முறை ஐ.பி.எல்லின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாகி விட்டது.

ஐ.பி.எல்லில் அங்கம் வகிக்கும் பல அணிகள், சில நாடுகள் மற்றும் சில சர்வதேச நிறுவனங்கள் ஊடாக பல ஆயிரம் கோடி ரூபா அந்நிய முதலீடுகளை இந்தியாவுக்குள் கொண்டு வந்திருப்பது குறித்து இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில் இந்தக் குற்றத்திற்காக ஐ.பி.எல் நிர்வாகிகள் அனைவரும் இந்திய நாடாளுமன்றக் குழுவின் விசாரணைக்குட்படுத்தப் பட்டதுடன், தொடர்ந்தும் விசாரணைப்பட்டியலில் உள்ளனர். ஐ.பி.எல் போட்டிகளை ஆரம்பித்தவர் லலித்மோடி. இவர் பல நூறு கோடி ரூபாக்களை சுருட்டிக் கொண்டு தப்பிச்சென்று இன்று லண்டனில் தங்கியுள்ளார். இந்தியாவில் இவருக்கு எதிராக பல்வேறு குற்றச் சாட்டுகளில் நீதிமன்ற வழக்குகள் நடைபெறுகின்றன. இவர் சுருட்டியது ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேலென இந்தக் குற்றச்சாட்டுகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஐ.பி.எல் தொடங்கப்பட்டதே போட்டியின் அடிப்படையில்தான். இந்திய கிரிக்கெட் சபையுடன் முரண்பட்ட முன்னாள் கப்டன் கபில் தேவ், சிலருடன் சேர்ந்து இந்தியன் கிரிக்கெட் லீக்கை (ஐ.சி.எல்) தொடங்கினார். ஆனால் அதில் பெரிதாக (கோடிக்கணக்கில்) பணம் புளங்காத போதும் சர்வதேச வீரர்கள் பலர் அதில் இணைந்து கொண்டதால் ஐ.சி.எல் போட்டிகள் ஆரம்பத்தில் புகழ்பெற்றன. இதனை அப்படியே கொப்பியடித்த, அப்போதைய இந்திய கிரிக்கெட் சபையின் நிறைவேற்று அதிகாரியான லலித்மோடி அதில் சில பல மாற்றங்களைச் செய்து 2008 இல் இந்தியன் பிறிமியர் லீக்கை (ஐ.பி.எல்) உருவாக்கினார். ஆரம்பத்தில் 9 அணிகளை இதில் இணைத்தனர். முதல் ஐ.பி.எல்லில் பங்கேற்ற ஒவ்வொரு அணியிடமும் 200, 300 கோடி ரூபாக்களே பெறப்பட்டன. ஆனால் அந்தத் தொடர் மிகப்பெரும் வெற்றியை பெற்றுவிட அணி உரிமைக்கான கட்டணத்தை ஐ.பி.எல் நிர்வாகம் பல நூறுகோடியாக்க, பங்கேற்கும் வீரர்களது மவுசும் அதிகரித்து வீரர்களை

ஏலத்தில் எடுக்கும் தொகையும் 3 கோடி, 4 கோடி ரூபா என எகிறியது. அத்துடன் ஐ.பி.எல்லில் சூதாட்டமும் ஆரம்பமானது.

ஆரம்பம் முதலே ஐ.பி.எல்லுக்கு பல தரப்பிலிருந்தும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. பல ஆயிரம் கோடி ரூபாக்கள் புளங்குவதால் கிரிக்கெட் சூதாட்டம், ஆட்ட நிர்ணய சதிகள் கிரிக்கெட்டைச் சீரழித்து பெரும் ஊழல் மோசடிகளுக்கு வழி வகுத்து விடுமென எச்சரிக்கப்பட்டது. ஆனால் அப்போது அதனை ஐ.பி.எல் நிர்வாகமோ இந்திய கிரிக்கெட் சபையோ பெரிதாக பொருட்படுத்தவில்லை. ஆனால், அது இன்று பூதாகரமாக வளர்ந்து ஐ.பி.எல்லுக்கே உலை வைத்து விடலாமென்ற நிலையேற்பட்டுள்ளது. இதற்கெல்லாம் காரணம் கிரிக்கெட் விளையாட்டு இன்று மிகப்பெரும் வர்த்தகமாக மாற்றப்பட்டிருப்பதுதான். அதிக லாபம் கொழிக்கும் வர்த்தகத்தில் பெருமளவில் முறைகேடுகள் இருப்பது போல் ஐ.பி.எல்லில் ஒவ்வொரு முறையும் சூதாட்டம் கொடி கட்டிப் பறக்கிறது. இந்தச் சூதாட்ட சாம்ராஜ்யம் இந்தியாவுக்குள் இல்லாது பரந்து விரிந்து உலகின் பல பாகங்களிலும் வியாபித்திருப்பதுவும் தற்போது விசாரணையாளர்களால் கண்டறியப்பட்டுள்ளது.

இம்முறை நடைபெறும் 6 ஆவது ஐ.பி.எல்லில் 'ஸ்பொட் பிக்சிங்' இடம்பெற்றுள்ளது பெரும்பாலும் நிரூபிக்கப்பட்டுவிட்டது. இதில் முதலில் சிக்கியவர்கள், பிரபல ஹொலிவூட் நடிகையை உரிமையாளராகக் கொண்ட ராஜஸ்தான் ரோயல்ஸ் வீரர்கள்தான். இதில், ஆரம்பத்தில் சிக்கியவர்கள், இந்திய அணி வீரர் ஸ்ரீசாந்த் உட்பட மூவர் என்றாலும் தற்போது அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. அதில் அங்கம் வகிக்கும் இந்திய மற்றும் சர்வதேச வீரர்களென மேலும் நால்வரது பெயர்கள் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதால் ஒட்டுமொத்த அணியையும் உரிமையாளர்களையும் விசாரிக்க வேண்டிய நிலையுள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர். அதேநேரம், ராஜஸ்தான் ரோயல்ஸைத் தவிர மேலும் பல வீரர்கள் வெவ்வேறு அணிகளிலிருந்து ஸ்பொட் பிக்சிங்கில் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிப்பதாக விசாரணையாளர்கள் கூறுகின்றனர். இதனால் இம்முறை நடைபெறும் ஐ.பி.எல் போட்டிகள் பலவற்றில் இதுபோன்று பல்வேறு சூதாட்டங்கள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது. இது குறித்து பொலிஸார் பல்வேறு அதிர்ச்சித் தகவல்களை வெளியிட்டு வருகின்றனர்.

ஐ.பி.எல் சூதாட்ட விவகாரம் ஆரம்பத்தில் மூவருடன் ஆரம்பமானது. ஆனால் அவர்கள் பிடிபட்டு மூன்று நாட்களில் அதில் ஈடுபட்டோர் தொகை 25 க்கும் மேலென விசாரணையாளர்கள் தெரிவித்தனர். இந்த 25 வீரர்களைவிட சூதாடிகள், தரகர்கள், ஏற்பாட்டாளர்கள், எடுபிடிகளென நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். கிரிக்கெட் சூதாட்டத்தில் வீரர்களைச் சிக்க வைக்க பல வழிகள் உள்ளன. மண்,பெண்,பொன் என்பதும் அவற்றில் சில. இவற்றுக்கெல்லாம் மசியாதவர்கள் எவருமில்லை. இதற்காக தாங்கள் யாருக்காக கூலி வேலை செய்கின்றோமெனத் தெரியாது சில ஆயிரம் ரூபாக்களுக்காக சிறு சிறு தரகு வேலை செய்வோர் பலர். இவர்களை கூலிக்கு அமர்த்துவோர் யாரென அவர்களுக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் விட்டெறியும் சில நூறு ரூபாக்களுக்காக இவர்கள் பல லட்சம் ரூபா அல்லது பல கோடி ரூபாவுக்கான வேலைகளைக் கூட செய்து முடிக்கின்றனர்.

ஐ.பி.எல்லில் ஒவ்வொரு தொடரிலும் 5000 கோடி ரூபாவுக்கும் மேல் புழங்குவதால் அதனை வைத்து நடைபெறும் சூதாட்டத்தின் அளவு சில வேளைகளில் 50,000 கோடி ரூபா வரை கூட செல்லலாமென ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சூதாட்டத்தில் தொட்டதெல்லாம் பொன்னாகுமென்பதால், இன்று இந்த ஊழல் குற்றச்சாட்டை புட்டுப் புட்டு வைக்கும் ஊடகவியலாளர் பலர் கூட சில, பல ஆயிரங்களுக்காகவும் லட்சங்களுக்காகவும் சூதாடிகளுக்கும் தரகர்களுக்கும் நேரடியாகவும் மறைமுகமாகவும் துணை போவதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. அதேநேரம் இந்த விசாரணைகள் எந்தளவுக்கு நீதியானதும் நேர்மையானதும் என்பதுதான் மிகப்பெரிய கேள்விக்குறியாகும். ஆரம்பத்தில் சூதாட்டத்தை கண்டுபிடிப்பதில் பொலிஸார் மிகவும் தீவிரம் காட்டுகின்றனர். சூதாடிகளையும், தரகர்களையும் சம்பந்தப்பட்ட வீரர்களையும் அம்பலப்படுத்து




இந்தியாவின் குஜ்ராத் மாநிலத்தின் அகமதாபாத் நகரில் கிரிக்கெட் சூதாட்டக்காரர்களை கடுமையாகத் தண்டிக்கவேண்டும் என்று கோரும் ஆர்ப்பாட்டக்காரர்கள்



**ஐ.பி.எல்.லில் பாகிஸ்தான் வீரர்கள் புறக்கணிக்கப்படுவதால் போட்டிகளைச் சீர்குலைத்து அதன் பெயரையும் புகழையும் கெடுக்க பாகிஸ்தான் தரப்பிலிருந்து சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் எனக்கருதப்படுவதால் அந்தக் கோணத்திலும் விசாரணை நடைபெறுகிறது**

வதில் இவர்கள் மிகத்தீவிரம் காட்டுவர். சூதாட்டத்தை கண்டுபிடித்து பக்கவோர்கள் மூலம் சூதாட்டத்தின் மூலவேர் நோக்கி இவர்கள் செல்ல முயல்கையில் இவர்களும் பணத்திற்கு அடிமையாகி திசைமாறி விடுகின்றனர். இது, ஐ.பி.எல் போட்டியை நடத்தும் இந்தியாவில் சர்வசாதாரணம். இதனால் தான் ஒவ்வொரு ஐ.பி.எல் போட்டியிலும் ஆட்ட நிர்ணயசதி, சூதாட்டம், 'ஸ்பொட் பிக்ஸிங்' போன்ற பெரும் மோசடிகள் நடைபெற்றாலும் அது அந்தத் தொடருடனேயே அமுங்கி விடுகின்றன. ஒரு சில அப்பாவி வீரர்களும் அப்பாவிகளும் சிக்க பெரும் பெரும் முதலைகள் தப்பி அடுத்த தொடரிலும் தங்கள் கைங்கரியத்தை சர்வ சாதாரணமாகக் காட்டுகின்றன.

தற்போது நடைபெறும் 6 ஆவது ஐ.பி.எல் போட்டியில் இதுவரை 25 வீரர்கள் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகச்சந்தேகிக்கப்படுகிறது. எனினும் யார் அவர்கள் என்பதை விசாரணையாளர்கள் வெளியிடவில்லை. ஆரம்பத்தில் சில வீரர்களை கைது செய்து அவர்களது பெயர்களை நாறடித்த பொலிஸார், அவர்களை விட மோசமான சூதாட்டத்தில் ஈடுபட்டோரின் விபரங்களை வெளியிடவில்லை. ஆனால் அவர்களை தங்களது கண்காணிப்பு வளையத்திற்குள் வைத்துள்ளதாகக் கூறியுள்ளனர். தங்களது விசாரணைகள் மூலம், ஐ.பி.எல்லில் பங்கேற்கும் 9 அணிகளிலும் சூதாட்டத்தில் ஈடுபடும் வீரர்கள் இருப்பதாகவும் இதனால் ஐ.பி.எல் தொடங்கி நடுப்பகுதியைத் தாண்டிய நிலையில் கிரிக்கெட் சூதாட்டம் ஆயிரம் கோடி ரூபாவைத் தாண்டி விட்டதாகத் தெரியவந்ததாக விசாரணையாளர்கள் தெரிவித்தனர். ராஜஸ்தான் வீரர்களான ஸ்ரீசாந்த் உட்பட மூவரும் தங்களது விசாரணையில் பல்வேறு தகவல்களையும் ஒளிவு மறைவின்றி கூறிவிட்டதாகத் தெரிவித்தனர். இதன் மூலம் கிரிக்கெட் சூதாட்டம் பல அடுக்கு தரகர்களுடன் சங்கிலித் தொடர்போல் நடந்து வருவது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தற்போது இவற்றின் பின்னணியில் இருக்கும் மிகப் பெரும் முதலைகளைத் தேடத் தொடங்கிவிட்டதாகவும் அவர்கள் பற்றிய முடிச்சுகள் அவிழ்ந்து வருவதாகவும் இந்தச் சூதாட்டத்தில் ஈடுபட்டுள்ள வீரர்கள், தரகர்கள் அனைவரும் இரகசியமாக ஒன்றிணைந்து செயற்படுவது அம்பலமாகியுள்ளதாகவும் விசாரணையாளர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம் இந்த முறை சூதாட்டத்தில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்ட பிரபல தரகர் ஒருவர் சூதாட்டம் குறித்து பல்வேறு தகவல்களை வெளியிட்டுள்ளார். முன்னர் புடவை வியாபாரம் செய்து பின்னர் கிரிக்கெட் சூதாட்டத் தரகரான இவர் கூறியவை அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்துகிறது. சிறிதளவு பணமும் இரு கையடக்கத் தொலைபேசியும் இருந்தால் சில வாரங்களிலேயே வாடிக்கையாளர்கள் உங்களைத்தேடி வருவார்கள். இது நஷ்டமில்லாத வியாபாரம். இது பங்குச் சந்தை போன்றதல்ல. அதிக பணம் சம்பாதிக்கும் நோக்குடனும் பணத்தேவை உடையவர்களுமே இங்கு வருவார்கள். கட்டுமானத் தொழிலிலும் திரைப்படத் துறையிலுமிருப்போருக்கு இதன் விரைவான முடிவுகள் பெரும் பலனைத் தரும். போட்டி தொடங்குவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே வெளிநாடுகளில் கூடும் தரகர்கள், ஒரு போட்டியில் பந்து வீசுவதில் இருந்து ஓட்டங்கள் எடுப்பது வரை முடிவு செய்வார்கள். இதற்கான பெரும் தொகை நிழலுலகத் தாதாக்களின் கறுப்புப் பண இடைத்தரகர்கள் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும். முன்னர் மும்பையில் மிகப்பெருமெடுப்பில் நடந்த சூதாட்டம் குறைந்துவிட்டது. இப்போது டில்லியே முக்கிய இடத்திலுள்ளது. டில்லிக்கும் டுபாய்க்குமிடையே இந்த விடயத்தில் நிச்சயம் தொடர்பிருக்க வேண்டும். ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, சவூதி அரேபியாவிலிருந்து தான் பெருமளவில் வாடிக்கையாளர்கள் வருவதாகவும் கூறினார்.

இந்தியாவில் ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு நகரிலும் பல உப நகரங்களிலும் மிகப்பெருமளவில் கிரிக்கெட் சூதாட்டம் நடக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தரகர்கள் பல நூறு கோடி ரூபாவுக்கு சூதாட்டத்தை நடத்துகின்றனர். கம்பியூட்டர், லாப்-ரொப், பல கையடக்கத் தொலைபேசிகள், பெருந்தொகைப் பணத்துடன் இந்தத் தரகர்களும் அவர்களது முகவர்கள் பலரும் வாடிக்கையாளர்களை தொடர்பு கொள்கின்றனர். இதன் மூலம் ஐ.பி.எல் போட்டிக் காலத்தில் தரகர்களிடையே பல நூறுகோடி ரூபா புழங்குகிறது. தங்களது சூதாட்டத்திற்கு சாதகமாக விளையாட்டு வீரர்களை வளைத்துப் போடுகிறார்கள். இதற்காக வீரர்களுக்கு மது, மாது என்பவற்றுடன்

பெரும் பணத்தை அள்ளி வீசுகின்றனர். இறால் போட்டு சுறா பிடிப்பது தான் சூதாடிகளின் வேலை. அதில் அவர்கள் பெரும்பாலும் வென்று விடுவார்கள். வீரர்களின் நண்பர்கள், உறவினர்களை வளைத்து விருந்துகள் வைத்து அவர்களை தங்கள் வலையில் வீழ்த்தி வீரர்களை மடக்குவர். பின்னர் பிரபல துணை நடிகைகள், நடிகைகள் மூலம் மடக்கி அவர்களுடன் உல்லாசத்தில் ஈடுபட வைத்து அந்தக் காட்சிகளை வீடியோ, புகைப்படமெடுத்து வைத்து விடுவர். தங்களது பேரத்திற்கு மசிந்தால் சரி மசியாதவர்களை இவற்றைக் காட்டி மிரட்டி பணிய வைத்துவிடுவர். பின்னர் தங்கள் இஷ்டப்படி சூதாடிகளும் தரகர்களும் சூதாட்டத்திலும் 'ஸ்பொட் பிக்சிங்' போன்றவற்றிலும் ஈடுபடுவர். முதலில் சூதாட்டத்தில் ஈடுபட பேரம் பேசுவர். அவர்களது வலையில் சிக்கியது பந்து வீச்சாளர் என்றால், பந்து வீச்சில் எப்படி நடந்து கொள்வது, அதற்கு முன் தங்களுடன் எவ்வாறு சைகை தொடர்பை ஏற்படுத்துவதென்றெல்லாம் கூறி விடுவர். துடுப்பாட்ட வீரரென்றால் அவருக்கு ஏற்றாற்போல் ஒப்பந்தங்களிருக்கும். தற்போது ஐ.பி.எல்லில் சிக்கிய வீரர்களை சூதாடிகள், பெண்கள் மூலமே வளைத்துப் பிடித்துள்ளனர். இவர்கள் பொலிஸாரிடம் பிடிபட்டபோது இவர்கள் பெண்களுடனேயே இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு இன்று கிரிக்கெட் உலகை தங்கள் பிடிக்குள் வைத்திருந்து சூதாட்டம், ஆட்ட நிர்ணயசதி, 'ஸ்பொட் பிக்சிங்' மூலம் விளையாட்டுலகை சீரழிப்பவர்கள் யார்? என்ற கேள்வி எழுகிறது. சர்வதேச நிழலுலகத் தாதாக்கள் இவற்றின் பின்னணியில் இருப்பது தெரியவந்துள்ளது. உலகெங்கும் வியாபித்திருக்கும் இந்த நிழலுலகத் தாதாக்கள் சர்வதேச கிரிக்கெட் மற்றும் ஐ.பி.எல் போன்ற புகழ்பெற்ற கிரிக்கெட் போட்டிகளுக்குள் புகுந்து தங்கள் கைவரிசைகளைக் காட்டுகின்றனர். இவர்களின் பின்னால் சங்கிலித் தொடர் போல் செயற்படும் நூற்றுக்கணக்கான கையாட்கள் உள்ளனர். இவர்கள் மூலமே இந்தத் தாதாக்கள் தங்கள் கைவரிசையை கிரிக்கெட்டில் காட்டுகின்றனர். ஐ.பி.எல்லை பொறுத்தவரை, இந்தியாவில் மிகத் தீவிரமாகத் தேடப்பட்டுவரும் இப்ராகிம் தாவூத்தே சூதாட்டத்தின் பின்னணியிலிருப்பதாக விசாரணையாளர்கள் கருதுகின்றனர். ஐ.பி.எல் சூதாட்டத்தின்போது தொலைபேசி அழைப்புகள் டுபாய், பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து அடிக்கடி வந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது. மும்பை நிழல் உலக தாதா ரைகர் மேமனிடமிருந்தும் தரகர்களுக்கு தொலைபேசி அழைப்புகள் வந்திருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ரைகர் மேமன் தற்போது டுபாயில் மறைவாக இருக்கின்றான். இவன் தாவூத் இப்ராஹிம் கும்பலைச் சேர்ந்தவன். இவர்களுக்கும் பாகிஸ்தான் தீவிரவாதிகளுக்கும் தொடர்புண்டு.

ஐ.பி.எல் போட்டியின் மவுசை குறைக்கும் நோக்கில் இவர்கள் இவ்வாறு செயற்பட்டிருக்கலாமென கருதப்படுகிறது. ஐ.பி.எல்லில் பாகிஸ்தான் வீரர்கள் புறக்கணிக்கப்படுவதால் ஐ.பி.எல் போட்டியைச் சீர்குலைத்து அதன் பெயரையும் புகழையும் கெடுக்க இவர்கள் செயற்பட்டிருக்கலாமெனவும் கருதப்படுவதால் அந்தக் கோணத்திலும் விசாரணை நடக்கிறது. எனினும் ஐ.பி.எல் சூதாட்டம் இவ்வளவு பரபரப்பாகி, கிணறு வெட்ட பூதம் கிளம்பியது போல் நாளுக்கு நாள், நேரத்திற்கு நேரம் பெரும் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருந்தாலும் ஐ.பி.எல் போட்டிகளின் மவுசு துளியளவும் குறையவில்லை என்பதுதான் உண்மை. ■

---

*(46ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

தலைவரைக் கேட்டுக் கொண்டதுடன் அரசாங்கத்தின் நடத்தையையும் கடுமையாகக் கண்டனம் செய்தது.

இந்த நிகழ்வுப் போக்குகள் எல்லாம் அடுத்தவருடம் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியைப் பெரிதும் பாதிக்கப் போகின்றன என்று அதன் எம்.பி.க்கள் பெரிதும் விசனமடைந்திருக்கும் நிலையில்,கர்நாடக மாநில சட்டசபைத் தேர்தல் முடிவுகள் வெளியாகின. எந்தக் கட்சி என்றாலும் ஊழல் மோசடிகளைப் பொறுத்துக் கொள்ளப் போவதில்லை என்ற உறுதியான செய்தியை அரசியல் கட்சிகளுக்கு கர்நாடக வாக்காளர்கள் கூறியிருக்கிறார்கள்.



பவான் குமார் பன்சால்

கர்நாடகத்தில் பதவியில் இருந்த பாரதிய ஜனதா படுதோல்வியடைந்திருக்கிறது. அதன் கடந்த 5 வருட கால ஆட்சியில் ஊழலும் தவறான நிருவாகமுமே நிலவின. பாரதீய ஜனதாவையும் முன்னாள் பிரதமர் தேவ கௌடாவின் மதச்சார்பற்ற ஜனதா தளத்தையும் நிராகரித்த மக்கள் குறைந்தளவுக்கு தீங்கானது என்று நினைத்து காங்கிரஸை பதவிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். இதை தங்களுடைய வெற்றி என்று காங்கிரஸ் தலைவர்கள் பகிரங்கத்தில் சொல்லிக்கொண்டாலும், ஊழலுக்கும் தவறான ஆட்சிக்கும் எதிரான வாக்கு என்பதை தனிப்பட்ட முறையில் அவர்கள் ஒத்துக்கொள்கிறார்கள். ஊழல்தனமான அமைச்சர்கள் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை காங்கிரஸ் தலைமைத்துவம் எடுக்காவிட்டால், கர்நாடகாவில் பாரதிய ஜனதாவுக்கு நேர்ந்த கதியே தேசிய மட்டத்தில் தங்களுக்கு நேரும் என்று காங்கிரஸ்காரர்கள் அஞ்சுகிறார்கள். ■

# மலேசியாவில் பொருளாதார சீர்திருத்தங்களை இனத்துவ அரசியல் பாதிக்கும் ஆபத்து



சர்வதேச அரசியல்

ஸ்ருவார்ட் கிரஜிங்ஸ்

மலேசியாவில் மே 5ஆம் திகதி நடைபெற்ற பொதுத்தேர்தல் முடிவுகள் அந்நாட்டில் இனங்களுக்கிடையிலான உறவுகளில் அதிகரித்து வருகின்ற முரண்பாடுகளை பிரகாசமாக வெளிக்காட்டியிருக்கின்றன. இதன் விளைவாக ஆளும் கட்சிக்குள் மூளக்கூடிய தகராறுகள் பிரதமர் நஜீப் ரசாக் முன்னெடுக்க உத்தேசிக்கும் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் தாமதிக்கப்படக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. அத்துடன் மலாய் இனத்தவர்களுக்கு அனுகூலமான கொள்கைகளை மாற்றியமைக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நஜீப் தலைமையிலான பாரிசான் நாஷனல் கூட்டணி தேர்தலில் அதிகாரத்தைத் தக்க வைத்திருக்கிறது. ஆனால், அக்கூட்டணிக்கான மக்கள் ஆதரவு குறைந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆளும் கூட்டணியை சிறுபான்மையினத்தவர்களான சீனர்கள் பெருமளவுக்குக் கைவிட்டுவிட்டார்கள். நகர்ப்புறங்களில் சகல இனங்களையும் சேர்ந்த பெருமளவு வாக்காளர்கள் இக்கூட்டணியை நிராகரித்திருக்கிறார்கள்.

சீனவாக்காளர்கள் எதிர்க்கட்சிகளின் கூட்டணிப் பக்கம் சாய்ந்ததே தனது கூட்டணியின் செல்வாக்கு வீழ்ச்சிக்குக் காரணம் என்று பிரதமர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். தேர்தல் முடிவுகளுக்கு இனரீதியான வியாக்கியானத்தை வழங்குவதென்பது அவரது ஐக்கிய மலாயா தேசிய இயக்கத்திற்குள் இருக்கக்கூடிய பாரம்பரியவாதிகளின் சிந்தனைப்போக்கிற்கு இசைவானதாக இருக்கிறது.

பாரிசான் நாஷனல் கூட்டணியில் பெரிய கட்சி ஐக்கிய மலாயா தேசிய இயக்கமேயாகும். இந்தக்கட்சி, தலைவர் பதவிக்கான தேர்தலை எதிர் வரும் அக்டோபரில் எதிர்நோக்குகிறது. பாரம்பரியவாதிகளுக்கும் சீர்திருத்தங்களுக்கு ஆதரவான பிரிவினருக்கும் இடையிலேயே தலைமைப் பதவிக்கான போட்டி இடம்பெறக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

ஐக்கிய மலாயா தேசிய இயக்கத்திற்குள் கோட்பாட்டு வேறுபாடுகள் தெளிவாக கிளம்பியிருக்கின்றன. இரு பிரிவினருக்கும் இடையேயான எல்லைக்கோடு கீறப்பட்டுவிட்டது என்று கட்சியின் இளைஞர் பிரிவுக்குத் தலைமை தாங்கும் சீர்திருத்த ஆதரவாளரான கைரிஜமுலுத்தீன் ருவிட்டர் சமூக ஊடகத்தில் தெரிவித்திருக்கிறார்.

தேசிய நல்லிணக்கத்தையும் முதலீடுகளைக் கவருவதையும் 2020 ஆம் ஆண்டளவில் வருமானத்தை இரு மடங்காக்குவதையும் நோக்கமாகக் கொண்ட 44,400 கோடி அமெரிக்க டொலர்கள் மெகா பொருளாதாரத் திட்டத்தையும் முன்னெடுக்கப்போவதாக நஜீப் கூறியிருக்கின்ற போதிலும், தலைமைத்துவம் பற்றி தீர்மானிக்கப்படும் வரை எந்தவொரு சீர்திருத்தமுமே தாமதிக்கப்படக் கூடிய சாத்தியமே இருக்கிறது.

இனரீதியான துருவமயமாதலையும் சீனர்களின் 'விசுவாசமின்மையையும்' பழைமைவாதிகள் குற்றஞ்சாட்டியிருக்கின்ற அதேவேளை, ஐக்கிய மலாயா தேசிய இயக்கத்தை கூடுதலான அளவுக்கு சகல இனத்தவர்களையும் பிரிவினர்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய கட்சியாக விரிவுபடுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு சீர்திருத்தவாதிகள் நஜீப்பை வலியுறுத்தியிருக்கிறார்கள். வறிய, கிராமப்புற மலாயர்களே இக்கட்சியின் பிரதான தளமாக இருந்துவந்திருக்கிறார்கள்.

ஐக்கிய மலாயா தேசிய இயக்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 'உற்சான் மலேசியா' என்ற பத்திரிகைத் தேர்தல் முடிவுகளை இன அடிப்படையிலானவையாகக் காண்பிக்க முனைப்பைக் காட்டியது. 'சீனர்களுக்கு இதற்கு மேல் என்ன வேண்டும்?' என்பது அப்பத்திரிகையின் ஒரு தலைப்பு.

நீண்ட காலம் பதவியில் இருந்தவர் என்று பெயரெடுத்தவரும் முன்னாள் பிரதமருமான மஹாதிர் முஹம்மத் ஐக்கிய மலாயா தேசிய இயக்கத்திற்குள் ஒரு செல்வாக்குமிக்க தலைவர். தேர்தல் முடிவுகள் குறித்து அவர் கருத்துத் தெரிவித்த போது 'நன்றி கெட்ட சீனர்கள்', 'பேராசை பிடித்த மலாயர்கள்' என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியதாக உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

தேர்தல் முடிவுகள் குறித்து பழைமைவாதிகள் வெளிக்காட்டிய பிரதிபலிப்புகள் தொடர்பாக கருத்துத்தெரிவித்த சிங்கப்பூரின் தென்கிழக்காசிய ஆய்வுகளுக்கான நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளரான ஒய் கீ பெங், 'இது நஜீப் எதிர்நோக்கப் போகின்றவற்றின் தொடக்கமாக இருக்கக் கூடும். அதேவேளை, ஐக்கிய மலாயா தேசிய இயக்கத்தைப் பொறுத்தவரை (சகல பின்னடைவுகளுக்கு மத்தியிலும்) அவர் ஒரு பெருஞ் சொத்து' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பலம் பொருந்திய ஒரு எதிர்க் கட்சியை நஜீப் கையாள வேண்டியிருக்கிறது. பாரிசான் நாஷனல் கூட்டணி தேர்தலில் மோசடிகளைச் செய்திருப்பதாக எதிர்க்கட்சி குற்றஞ்சாட்டியிருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிம் விடுத்த அழைப்பையடுத்து (தேர்தல் முடிவுகள் வெளியான மூன்று தினங்களில்) ஆயிரக்கணக்கான எதிரணித் தொண்டர்கள் தலைநகர் கோலாலம்பூரின் புறநகர்ப்பகுதியில் உள்ள ஸ்ரேடியத்தில் திரண்டார்கள்.

'இது சட்டவிரோதமானதும் ஊழல் தனமானதும் கர்வம் கொண்டதுமான அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இடையிலான மோதலின் ஆரம்பம் மாத்திரமே' என்று அந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் உரையாற்றிய அன்வர் இப்ராஹிம் கூறினார். தேர்தல் முடிவுகள் குறித்த தங்கள் கவலையை வெளிக்காட்டுவதற்காக கூட்டத்தினர் கறுப்புப்பட்டிகளையும் சட்டைகளையும் அணிந்திருந்தார்கள்.

முன்னாள் பிரதமர் ஒருவரின் மகனான 59வயதான நஜீப் அவரது கட்சியையும் விட மக்கள் மத்தியில் செல்வாக்குக் கொண்டவராக இருக்கிறார் என்பதை பொதுத்தேர்தலுக்கு முன்னதாக மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்புகளின் மூலமாகத் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. தலைமைப் பதவிக்கு நஜீப்புக்கு மாற்றாக பலம்பொருந்திய போட்டியாளர்கள் இல்லை.

2009 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த நஜீப் தனக்கு ஏற்படக்கூடிய நெருக்கடிகளையும் பொருட்படுத்தாமல் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதையும் ஒளிவுமறைவு அற்ற போக்கை அதிகரிப்பதையும் குறிப்பிட்ட இனத்தவர், மதத்தவர்களுக்கு




தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து மே 8 கோலாலம்பூர் புறநகர்ப் பகுதியில் அணி திரண்ட ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய எதிர்க் கட்சித்தலைவர் அன்வர் இப்ராஹிம் சட்டவிரோதமான அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான மோதல் ஆரம்பம் என்று அந்த பேரணியை வர்ணித்தார்

அனுகூலமாக அமையக்கூடிய கொள்கைகளை இல்லாமற் செய்வதையும் நோக்கமாகக் கொண்ட சீர்திருத்தங்களில் அக்கறை காட்டினார்.

ஆனால், ஐக்கிய மலாயா தேசிய இயக்கத்திற்குள் இருக்கும் பழைமைவாதிகளின் நலன்கள் காரணமாக நஜீப்பின் அபிலாசைகள் தடைப்பட்டன. வறியவர்களான பெரும்பான்மையினரையும் விட மேட்டுக்குடி மலாயர்களுக்கு பயனளிப்பனவாகத் தோன்றுகிற இனத்துவ வரப்பிரசாதங்களை இல்லாமற் செய்வதற்கு முக்கியமான நடவடிக்கைகளை எடுப்பதற்கான திட்டத்தை முன்வைக்க அவர் தவறினார்.

இனரீதியான சனத்தொகை விபரங்களை அரசாங்கம் வழங்குவதில்லை. ஆனால் 2 கோடி 80 இலட்சம் சனத்தொகையில் மலாயர்கள் சுமார் 60 சதவீதத்தினராகவும் சீனர்கள் 25 சதவீதத்துக்கும் அதிகமானவர்களாகவும் விளங்குகிறார்கள். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் இந்திய இனத்தவர்களும் இருக்கிறார்கள்.

பாரிசான் நாஷனல் கூட்டணிக்கு 222 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் 133 ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால், இக்கூட்டணிக்கு மக்களின் வாக்குகளில் 47 சதவீதமே கிடைத்திருக்கிறது. எதிர்க்கட்சிகள் கூட்டணி 50 சதவீதமான வாக்குகளைப் பெற்றிருக்கிறது.

'இந்த வாக்களிப்புப் பாணியில் காணப்படக்கூடியதாக இருக்கிற துருவமயமாதல் அரசாங்கத்துக்கு பெரும் கவலையைத் தருகிறது. இதே போக்கு தொடருவதற்கு அனுமதிக்கப்படுமானால், அது பதற்றநிலையைத் தோற்றுவிக்கும்' என்று பிரதமர் நஜீப் கூறியிருக்கிறார்.

ஆனால், ஊழலுக்காகவும் தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு பதவிகளை வழங்கும் தலைவர்களின் மனப்போக்கிற்காகவும் பாரிசானை இளம் வாக்காளர்கள் கடுமையாகக் கண்டனம் செய்திருக்கிறார்கள். நெருக்கமானவர்களுக்கு அரசியல் அனுசரணை வழங்குவது பாரிசான் தேசிய கூட்டணியின் 56 வருடகால ஆட்சியில் தரக்குறியீடு போன்று மாறிவிட்டது என்று விமர்சகர்கள் வர்ணிக்கிறார்கள்.

தென்பகுதி மாநிலமான ஜோஹாரைச் சேர்ந்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான லியூஷின் ரொங் தேர்தல் முடிவுகளில் இருந்து பிரதமர் நஜீப் தவறான செய்தியையே எடுத்துக்கொண்டிருக்கிறார் போலத் தோன்றுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார். 'பாரிசான் தேசிய கூட்டணிக்கு எதிராக சீனர்கள் மாத்திரம் திரும்பவில்லை. முதற்தடவையாக, இரண்டாம் தடவையாக வாக்களித்தவர்களும் அந்தக் கூட்டணிக்கு எதிராக வாக்களித்திருக்கிறார்கள்' என்று அவர் ராய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்குத் தெரிவித்தார்.

1969ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக் கலவரங்களுக்குப் பிறகு இரு வருடங்கள் கழித்து அறிமுகப்படுத்தப்பட்ட மலாயர்களுக்கு அனுகூலமான கொள்கைகளை படிப்படியாக அகற்றுவதற்கு நஜீப் முன்னெடுக்க உத்தேசிக்கும் நடவடிக்கைகளை கட்சிக்குள் இருக்கும் பாரம்பரியவாதிகள் கடுமையாக எதிர்க்கிறார்கள். அதனால், அவர் அவர்களின் வியூகங்களினால் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருப்பதுபோலத் தெரிகிறது.

மலாயர்களுக்கு அனுகூலமான கொள்கைகளே ஐக்கிய மலாயா தேசிய இயக்கத்தின் ஆதரவுத் தூணாக விளங்கிவந்திருக்கின்றது. ஆனால், அதே கொள்கைகளே சீன இனத்தவர்களும் இந்திய இனத்தவர்களும் தூரவிலகிச் செல்வதற்கு பிரதான காரணியாகவும் இருக்கின்றன. தென்கிழக்காசியாவின் மூன்றாவது பெரிய பொருளாதாரம் என்று வர்ணிக்கப்படும் மலேசியப் பொருளாதாரத்தின் வளர்ச்சியை குறுக்குவதும் இதே கொள்கைகள் தான் என்று முதலீட்டாளர்கள் கூறுகிறார்கள்.

இந்தக் கொள்கைகளை அகற்றுவதற்கு நஜீப் மேற்கொள்ளும் முயற்சிகளும் எண்ணெய் வருவாயில் மலேசியா தங்கியிருப்பதைக் குறைப்பதற்காக பாவனையாளர் வரியொன்றை அறிமுகப்படுத்துவது, தொடர்ச்சியாக நிலவுகின்ற பட்ஜெட் பற்றாக்குறையை கையாளுவதற்காக எண்ணெய் மற்றும் உணவு மானியங்களை குறைப்பதுபோன்ற அரசியல் ரீதியில் உணர்ச்சிபூர்வமான ஏனைய சீர்திருத்தங்களும் தற்போதைக்கு ஒத்திவைக்கப்படக்கூடும்.

'நஜீப்பின் சீர்திருத்தவாதக் கொள்கைகள் தொடருமா, இல்லையா என்பது தெளிவாகத் தெரியும் வரை நேரடி முதலீட்டுக்கான வாய்ப்புகள் நிச்சயமற்றவையாகவே இருக்கும்' என்று தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு எச்.எஸ்.பி.சி.வங்கி பொருளியல் நிபுணர்கள் விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மலாயர்கள் மத்தியில் இருக்கும் ஆதரவுத்தளத்தையே தொடர்ந்தும் பேணிப் பாதுகாப்பதில் நஜீப்பின் புதிய அரசாங்கம் முயற்சிக்குமா அல்லது சகல இனக்குழுக்களின் ஆதரவையும் பெறுவதற்கு முயற்சிக்குமா என்பதை அடுத்துவரும் நாட்களில் இடம்பெறப்போகும் அமைச்சரவை உறுப்பினர் தெரிவின் மூலம் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும் என்று எதிர்க்கட்சி எம்.பி.லியூ கூறுகிறார். சீனர்கள் குறித்து நஜீப் தெரிவித்த கருத்து ஒன்றும் புதியதல்ல. வழமையான பல்லவிதான். யார் யாரை அவர் அமைச்சரவையில் உள்ளடக்கப் போகிறார் என்பதையே நாம் பொறுத்திருந்துபார்க்க வேண்டும். ஐக்கிய மலாயா தேசிய இயக்கத்திற்குள் இருக்கக்கூடிய தீவிரவாதப் போக்குடையவர்களையா அல்லது நடுநிலையான சிந்தனையைக் கொண்ட இளந்தலைமுறை உறுப்பினர்களையா? சீனர்களையும் அமைச்சரவையில் அவர் சேர்த்துக் கொள்கிறாரா என்பதையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. ■

*(ராய்ட்டர்ஸ்)*



மூன்றாவது முறையாக பொறுப்பேற்ற முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இன்றுடன் இரண்டாவது ஆண்டை நிறைவு செய்கிறது. ஆட்சியின் தொடக்கம் தடபுடலாக இருந்தது.

அதிகாரிகளின் அதிரடி மாற்றம், தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் நில அபகரிப்பு வழக்குகளில் கைது, சசிகலா மற்றும் அவரது உறவினர்கள் நீக்கம், ஆறு முறைக்கு மேல் அமைச்சரவை மாற்றம் என்று சரவெடிக் காட்சிகளுக்கு பஞ்சமில்லாமல் இருந்தது. ஆனால், நிர்வாகத்தில் ''சட்டத்தின் ஆட்சி'' என்ற லகானை முதல்வர் ஜெயலலிதா ஸ்திரமாக தன்கையிலேயே வைத்துள்ளார்.

234 எம்.எல்.ஏ.க்கள் கொண்ட சட்டமன்றத்தில் 151 எம்.எல்.ஏ.க்கள் அ.தி.மு.க.விற்கு கிடைத்தது வரப்பிரசாதம் என்றால், பிரதான எதிர்க்கட்சியாக சட்டமன்றத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் இல்லை என்பது ''கொடுத்து வைத்த'' சூழ்நிலை. தி.மு.க.வின் இடத்தில் வந்த பிரதான எதிர்க்கட்சியான விஜயகாந்த் தலைமையிலான தேசிய முற்போக்குத் திராவிடக் கழகமோ திணறிக் கொண்டிருக்கிறது. அக்கட்சியின் 29 சட்டமன்ற உறுப்பினர்களில் ஐந்து பேர் கட்சித் தலைமைக்கு விடை கொடுத்துவிட்டு ''விலகி'' நிற்கிறார்கள்.

அவர்கள் ஏறக்குறைய அ.தி.மு.க. உறுப்பினர்கள் உடனேயே ஐக்கியமாகி விட்டார்கள். இன்னும் ஆறு சட்டமன்ற உறுப்பினர்கள் ''சஸ்பெண்ட்'' செய்யப்பட்டு விட்டார்கள். ஆகவே, தே.மு.தி.க. வசம் உள்ள 18 எம்.எல்.ஏ.க்கள் மட்டுமே ''தலைமை'' சொல் தட்டாத எம்.எல்.ஏ.க்களாக இருக்கிறார்கள். சட்டமன்றத்திற்குள் தி.மு.க., தே.மு. தி.க. ஆகிய கட்சிகள் இரண்டுமே பலவீனப்பட்டு நிற்பது அ.தி.மு.க. விற்கு அடித்துள்ள அதிர்ஷ்டம்!

சட்டமன்றத்தில் கிடைத்த இந்த ''அசாத்திய பலம்'' முடிவு எடுப்பதற்கும், எடுத்த முடிவில் பின்வாங்காமல் இருப்பதற்கும் முதல்வர் ஜெயலலிதாவிற்கு உற்ற துணையாக இருக்கின்றது. முதல்வருக்கு என்று உள்ள அதிகாரிகள் படை இதற்கு பக்கபலமாக இருக்கிறது. முதல்வரின் செய

### தேசிய அரசியல் என்ற புதிய வழி


# அண்ணா தி.மு.க.வின் மூன்றாவது வருட 'ஆக்ஷன் பிளான்'

லாளர்களாக ராம்மோகன்ராவ், ஷீலா ப்ரியா, வெங்கட்ராமன், ராமலிங்கம் போன்றோரும், இவர்களுக்கு தலைமை வகிக்கும் அதிகாரியாக தலைமைச் செயலாளர் ஷீலா பால கிருஷ்ணனும் நிர்வாக விடயங்களில் துணை நிற்கிறார்கள். உள்துறைச் செயலாளராக இருக்கும் ராஜகோபால், காவல்துறைத் தலைவராக இருக்கும் ராமானுஜம் (இவர் சட்டம் ஒழுங்கு மற்றும் இன்டெலிஜென்ஸ் இரண்டிற்கும் டி.ஜி.பி.) ஆகியோர் சட்டம்-ஒழுங்கு பணிகளில் முதல்வருக்கு துணை நிற்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் மாநாட்டினை இரு முறை போட்டு அதிகாரிகளுக்கு தக்கதொரு உத்தரவினை வழங்கியுள்ளார் முதல்வர் ஜெயலலிதா. அதேநேரத்தில் டெல்லியில் பிரதமர் தலைமையில் கூட்டப்படும் கூட்டங்களிலும் பங்கேற்று தமிழகத்தின் கோரிக்கைகளை ஆணித்தரமாக வைத்து வருகிறார். ஒருமுறை தேசிய வளர்ச்சிக்கூட்டத்தில் முதல்வருக்கே பேசுவதற்கு போதிய நேரம் கொடுப்பதில்லையா? என்று கேள்வி எழுப்பி அக்கூட்டத்திலிருந்தே துணிச்சலுடன் வெளிநடப்புச் செய்தார்.

நிர்வாக ரீதியாக முக்கிய திட்டங்கள் என்றால் எம்.ஜி.ஆருக்கு சத்துணவுத்திட்டம் பெயர் வாங்கிக் கொடுத்தது போல், இப்போது சென்னை மாநகராட்சியில் கொண்டு வரப்பட்ட ''அம்மா உணவகங்களை''ச் சொல்லலாம். இவை மலிவு விலையில் டிபன் வழங்கும் அரசு கன்டீன்கள். மக்கள் மத்தியில் படு பாப்புலராகியிருக்கின்றன. அதனால் அடுத்த கட்டமாக ''அம்மா உணவகங்கள்'' தமிழகத்தில் உள்ள மேலும் பத்து மாநகராட்சிகளுக்கு விரிவுபடுத்தப்படுகின்றன. அதேபோல் ''அம்மா திட்டம்'' என்று ஒன்றும் மாவட்டங்களில் பாப்புலராகி வருகிறது. அரசு அலுவலகங்களில் கிராம மக்களின் குறை தீர்க்கும் திட்டம் இது. மின்வெட்டு இன்னும் அரசை மிரட்டிக் கொண்டுதான் இருக்கிறது. அதைச் சரி செய்யும் விதத்தில் முதல்வர் ''சூரிய ஒளி சக்தி''யைப் பயன்படுத்துவது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருக்கிறார். 20,000 கோடி ரூபாய்க்கு மேல் ''மெகா மின்திட்டங்களை'' அறிவித்துள்ளார். இந்த இரு வருடங்களில் ''தீவிரவாத'' பிரச்சினை ஏதும் தமிழகத்தில் இல்லை. பெங்களூர் குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவர்கள் சிலர் கோவையில் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களும் உடனடியாக கூண்டோடு கைது செய்யப்பட்டுள்ளார்கள். அதை விட முக்கியமாக உள்ளாட்சித் தேர்தல்கள் நீதிமன்றங்களே பாராட்டும் அளவிற்கு நேர்த்தியாக நடத்தி முடிக்கப்பட்டன. குறிப்பாக உள்ளாட்சி தேர்தல்களை சிறப்பாக நடத்திய சோ.அய்யர் தலைமையிலான மாநில தேர்தல் ஆணையத்திற்கு தமிழக அமைச்சரவையே கூடி பாராட்டுத் தீர்மானம் போட்டது என்பது தமிழக அரசியல் வரலாற்றில் நடைபெற்ற முதல் சம்பவம்.

இரு வருட ஆட்சியில் பெரும் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை என்பது மூன்று நேரங்களில் தலை தூக்கியது. ஒன்று தியாகி இமானுவேல் சேகரன் நினைவு தினத்தின் போது மதுரை அருகில் உள்ள பரமக்குடியில் ஏற்பட்ட திடீர் கலவரம். அதை அடக்க பொலிஸ் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஆறு பேர் பலியானார்கள். இதற்காக ஓய்வுபெற்ற நீதியரசர் சம்பத் தலைமையில் விசாரணைக் கமிஷன் அமைக்கப்பட்டு, இப்போது அறிக்கையும் அரசிடம் கொடுக்கப்பட்டு விட்டது. அடுத்தது பசும்பொன் தேவர் ஜெயந்தி கொண்டாட்டத்தின் போது ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை போன்ற மாவட்டங்களில் ஆங்காங்கே ஏற்பட்ட மோதல்கள். இதில் பத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். இப்போது மூன்றாவதாக கலக்கிக் கொண்டிருப்பது ''காதல் நாடக திருமண'' விவகாரம். இதில், வன்னியர் சமுதாயத்தினருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் ஏற்பட்ட ''தர்மபுரிகலவரத்தை'' முன்னிட்டு, வன்னியர் மற்றும் வன்னிய



முத்தையா காசிநாதன்

ரல்லாதோரைத் திரட்டினார் டாக்டர் ராமதாஸ். அதனால் ஏற்பட்ட பின் விளைவுகளால், டாக்டர் ராமதாஸ் கைது செய்யப்பட்டார். அவர் கைதைக் கண்டித்து நடைபெற்ற கல் வீச்சுகள், கார் எரிப்புகள், மதுக்கடைகள் எரிப்பு போன்றவை பதற்றத்தை உருவாக்குவது போல் அமைந்தது. ஆனால், பொலிஸ் இந்தமுறை ''பலப்பிரயோகத்தில்'' குதிக்கவில்லை. அதற்கு பதில் சட்டத்தை கையில் எடுத்தது. பா.ம.க.வின் நிர்வாகிகள் 20-க்கும் மேற்பட்டோரை தேசிய பாதுகாப்புச் சட்டம் மற்றும் குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்தது. அரசியல் கட்சி ஒன்றின் மீது இவ்வளவு பேர் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்ந்தது பாட்டாளி மக்கள் கட்சி விடயத்தில்தான் நடைபெற்றுள்ளது. வட மாவட்டங்களில் இந்த மோதலையும், இதற்கு முன்பு இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மாணவர் போராட்டத்தையும் பொலிஸ் கையாண்ட விதம் அரசுக்கு கெட்ட பெயரை உருவாக்கித் தரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் சமீபத்தில் நடந்து முடிந்த கூட்டுறவுச் சங்கத் தேர்தல்கள் அந்த அளவிற்கு அரசுக்கு நல்ல பெயரை சம்பாதித்துக் கொடுக்கவில்லை. அதற்காக எம்.ஆர்.மோகன் தலைமையில் அமைக்கப்பட்ட கூட்டுறவுத் தேர்தல் ஆணையமும் அது பற்றி பெரிதாக கண்டுகொள்ளவில்லை! ஆனால் காவிரி இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வைத்த முதல்வரின் நிர்வாகத் திறமையை விவசாயிகள் பாராட்டுகிறார்கள்!

நிர்வாக ரீதியாக நிலையாக நீச்சல் அடிக்கும் அ.தி.மு.க. அரசுக்கு, அரசியல் ரீதியாக எப்படி இந்த இரு வருடங்கள் கடந்து சென்றுள்ளன? என்பது கவனிக்கப்பட வேண்டியவை. 2011இல் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. விற்கு உற்ற தோழமைக் கட்சியாக விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க. இருந்தது. காலப்போக்கில் ஏற்பட்ட கசப்புணர்வுகளால் உள்ளாட்சித் தேர்தலில் அந்தக் கட்சி அ.தி.மு.க.வுடனான தோழமையை விலக்கிக் கொள்ள நேர்ந்தது. இந்த ''விலகல்'' அ.தி.மு.க.விற்கு அடுத்து வரும் பாராளுமன்றத் தேர்தலில் ''சங்கடத்தை'' ஏற்படுத்தும் வீரியமிக்கது. தே.மு.தி.க.வை சமாளிக்க அ.தி.மு.க.வுடன் கூட்டணிக்கு வரும் என்று கருதப்பட்ட பாட்டாளி மக்கள் கட்சியும் பாதி வழியிலேயே நின்று விட்டது. அக்கட்சியின் நிர்வாகிகள் மீது எடுக்கப்பட்டுள்ள கடும் நடவடிக்கைகள் அக்கட்சியினரின் ''அ.தி.மு.க. பாசத்தை'' பகையாக மாற்றிவிட்டது. அதே நேரத்தில் இலங்கைப் பிரச்சினையில் அ.தி.மு.க எடுத்த உறுதியான நிலைப்பாடு, அக்கட்சிக்கு புதிய அவதாரத்தைக் கொடுத்திருக்கிறது. இலங்கைத் தமிழர்களின் மீது அக்கறையுள்ள தமிழக வாக்காளர்கள் மத்தியில் அக்கட்சிக்கு ஒரு நன்மதிப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. குறிப்பாக இலங்கைக்கு எதிரான ஜெனீவாத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும், இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், தமிழ் ஈழம் அமைய பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்ற ''துணிச்சல் மிக்க'' சட்டமன்றத் தீர்மானங்கள் அக்கட்சிக்கு பாஸிட்டிவ் இமேஜை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. அதனால், விலகிச் சென்ற வைகோ கூட ''வரலாறு உங்களுக்கு பொன்மகுடம் சூட்டும்'' என்று முதல்வரைப் பாராட்டும் மன நிலைக்கு வந்தார். அதற்கும் முன்பே தான் முன்சென்று வைகோவை அவரது நடைபயணத்தில் சந்தித்தார் முதல்வர் ஜெயலலிதா. அது அ.தி.மு.க.விற்கும்- ம.தி.மு.க.விற்கும் நட்புணர்வை மலரச் செய்தது. அதே போல் ராஜீவ் கொலை வழக்கில் சிக்கி தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் அந்த தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் அ.தி.மு.க. அரசுக்கு அமோக ஆதரவை திரட்டிக் கொடுத்தது.

பொதுவாக ஒரு அரசுக்கு எதிரான கருத்தை ''புயல்'' வேகத்தில் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்வதில் கம்யூனிஸ்ட் தோழர்கள் கெட்டிக்காரர்கள். சென்ற மார்ச் மாதம் வரை காங்கிரஸ் கட்சியுடன் தி.மு.க. இருந்ததால் அ.தி.மு.க. அரசின் மீதான விமர்சனத்தை இரு கம்யூனிஸ்ட் கட்சிகளுமே (சி.பி.எம் மற்றும் சி.பி.ஐ) தீவிரப்படுத்தவில்லை. போராட்டங்கள் கூட பெருமளவில் நடக்கவில்லை. எதிர்காலக் கூட்டணிக்கு அ.தி.மு.க.வை விட்டால் வேறு கட்சியில்லை என்ற நிலையில், இரு கம்யூனிஸ்ட் கட்சிகளுமே அடக்கி வாசித்தன. தமிழக அரசு எடுக்கும் ஒரு முடிவுக்கு பாராட்டு, இன்னொன்றிற்கு விமர்சனம் என்ற அளவிலேயே இரு கட்சிகளும் கருத்துகளை தெரிவித்து வருகின்றன. இன்னும் சொல்லப்போனால் சமீபத்தில் நடந்து முடிந்த கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் தங்கள் கட்சியினரே பாதிக்கப்பட்ட போது கூட அவர்கள் ஆவேசம் காட்டவில்லை. ''கம்யூனிஸ்டுகளின்'' பிரசாரத்தை மேலும் வலுவிழக்கச் செய்தது இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு வருகின்ற ராஜ்ய சபைத் தேர்தலில் (அக்கட்சியின் தேசிய செயலாளர் டி.ராஜாவின் பதவிக்காலம் இந்த ஜூன் மாதத்துடன் முடிகிறது) அ.தி.மு.க. ஆதரவுடன் கிடைக்க வேண்டிய ஒரு ராஜ்ய சபை எம்.பி. பதவியும் மிக முக்கிய காரணம்!

**யாருடனும் கூட்டணி இல்லை, தனித்தே போட்டி என்று சில மாதங்களுக்கு முன்னர் அறிவித்த ஜெயலலிதா, தனது தேசிய அரசியல் கனவை நிறைவேற்ற எந்தக் கட்சியுடன் கூட்டணி வைக்கப்போகிறார்?**

அதேபோல் அடுத்து ஜூன் 2014இல் மார்க்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு (டி.கே. ரங்கராஜன் ஓய்வு பெறுவதால் வரும் வேக்கன்ஸி) கிடைக்க வேண்டிய ராஜ்ய சபை பதவி! ஆகவே, இந்த இரு வருடங்கள் கழித்து இன்று அ.தி.மு.க. இருந்த கட்சிகளில் முக்கியமான நட்பு கட்சியான தே.மு.தி.க.வை இழந்திருக்கிறது. புதிய வரவாக ம.தி.மு.க.வுடன் நேசமாக இருக்கிறது!

முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு தேசிய அரசியலில் முதல்வர் ஜெயலலிதாவிற்கு அதிக ஆர்வம் ஏற்பட்டிருப்பது மூன்றாவது முறையாக அவர் முதல்வராகியிருக்கும் போது உருவாகியுள்ள புதிய மாற்றம். 1998இல் வாஜ்பாய் தலைமையிலான அரசுக்கு அ.தி.மு.க. தன் ஆதரவை வாபஸ் பெற்ற பிறகு, கடந்த 15 வருடங்களாக அ.தி.மு.க. மத்திய அரசு அதிகாரத்தில் இல்லை. இன்று டெல்லியில் உள்ள அரசியல் தட்பவெப்பம் மாறியிருக்கிறது. "காங்கிரஸோ, பா.ஜ.க.வோ தனித்து ஆட்சி அமைக்க முடியாது. பிராந்தியக் கட்சிகளின் கை ஓங்கும்'' என்ற 1996-ஆம் ஆண்டு நிலைமை இந்தியாவில் மீண்டும் பிறந்திருக்கிறது. ஏனென்றால் 1996இல்தான் அதிக எம்.பி.க்கள் செல்வாக்கு இல்லாத தேவகௌடா, குஜ்ரால் போன்றவர்கள் எல்லாம் இந்தியப் பிரதமரானார்கள். இப்போதுள்ள ''டெல்லி'' சூழ்நிலையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவே, அ.தி.மு.க. சார்பில் ''நாற்பதுக்கு நாற்பது'' என்ற முழக்கத்தை முன்வைத்தார் முதல்வர் ஜெயலலிதா. அந்த எம்.பி. தொகுதிகளை பெற்றுவிட்டால், தேசிய அரசியலில் தனக்கு ஒரு தனி முக்கியத்துவம் கிடைக்கும் என்று திடமாக நம்புகிறார் ஜெயலலிதா. அதனால்தான் ஆட்சிக்கு வந்ததில் இருந்தே, ''நாற்பதுக்கு நாற்பது'' என்ற கோஷத்தை முன்வைத்து மக்களை தொகுதி தொகுதியாகச் சந்தித்து வருகின்றனர். அதற்கு மூத்த அமைச்சராக இருக்கும் ஓ. பன்னீர் செல்வத்தையே தலைவராக நியமித்து, பிரசாரப் பணிகளை முடுக்கி விட்டுள்ளார் ஜெயலலிதா.

குறிப்பாக தமிழகத்தை மத்திய அரசு வஞ்சிக்கிறது என்ற காரணத்தை மேற்கோள் காட்டி, ''இதற்கெல்லாம் தீர்வு. நீங்கள் அ.தி.மு.க.விற்கு நாற்பது இடங்களையும் கொடுப்பதுதான்'' என்று மக்களிடம் தீவிரப் பிரசாரம் மேற்கொண்டுள்ளனர். தமிழகத்தின் நியாயமான உரிமைகளைத் தர மத்திய அரசு மறுக்கிறது என்பதை வலியுறுத்தும் வகையில் தமிழக அரசின் சார்பிலேயே மத்திய அரசை எதிர்த்து இந்திய சுப்ரீம் கோர்ட்டில் வழக்குகளை போட வைத்திருக்கிறார் முதல்வர் ஜெயலலிதா. காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசைச் சாடுவதால், காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணி பற்றி அ.தி.மு.க. கவலைப்படவில்லை. அதே போன்று பா.ஜ.க.வுடனும் அக்கட்சி கூட்டணிக்கு ரெடியாகவில்லை. ஆனால் இந்தக் கட்சிகளின் வாக்குகளை தன்பக்கம் இழுக்க முழு வேகத்தில் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் அ.தி.மு.க. பொதுச் செயலாளர். ஒரு பக்கம் இஸ்லாமியர்களை விமர்சித்ததாகக் கூறப்படும் விஸ்வரூபம் படத்திற்கு தமிழகத்தில் தடைபோட்டு மைனாரிட்டிகளின் வாக்குகளை வளைத்துப் போட்டார். இன்னொரு பக்கம் ''ராமர்பாலம்'' இருக்கும் சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டாம் என்று சுப்ரீம் கோர்ட்டில் தமிழக அரசின் சார்பிலே மனு போட்டு ''இந்துத்துவா'' வாக்குகளையும் தனக்குரியதாக்கிக் கொண்டிருக்கிறார். ஆகவே ''தேசிய கட்சிகளை'' ஒதுக்கி வைத்து விட்டு, ''தேசிய அரசியலை'' முன்னெடுத்துச் செல்கிறார். இது இந்த இரண்டு ஆண்டுகால அ.தி.மு.க. ஆட்சியின் புதிய வழிப்பாதை!

ஆனால் இந்த வழிப்பாதையில் வெற்றிகரமாகத் தொடர்ந்து பயணித்து தேர்தல் வெற்றியைப் பெறுவதற்கு அ.தி.மு.க.விற்கு கூட்டணி வேண்டும். ஏனென்றால் தமிழகத்தில் 1980-களுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தல்களில் கூட்டணிகளின் வாக்கு வங்கிதான் அ.தி.மு.க.வையோ, அல்லது தி.மு.க.வையோ வெற்றி பெற வைத்துள்ளது. ''பா.ஜ.க. மற்றும் காங்கிரஸ் போன்ற தேசிய கட்சிகளும் வேண்டாம்'', ''தமிழகத்தில் மூன்றாவது சக்தியாக இருக்கும் தே.மு.தி.க.வும் வேண்டாம்'' ''தே.மு.தி.க.வை சமாளிக்க உதவும் பாட்டாளி மக்கள் கட்சியும் வேண்டாம்'' என்ற ரீதியில் கடந்த இரு வருடங்களாக அ.தி.மு.க. அரசியல் செய்து வந்து விட்டது. சென்ற சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. அணிக்கு விழுந்த 52 சதவீத வாக்குகளில் 40-க்கும் மேற்பட்ட சதவீதம் அ.தி.மு.க.வின் வாக்கு வங்கி என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா நினைப்பது போல் இருக்கிறது. அதனால்தான் ''நான் தனித்துப் போட்டி. யாருடனும் கூட்டணி இல்லை'' என்று சில மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற அ.தி.மு.க. பொதுக்குழுவில் அதிரடியாக அறிவித்தார். ஆனால் தென்மாவட்டங்களில் ஏற்பட்ட பசும்பொன் தேவர் ஜெயந்தி மோதல்கள், கூடங்குளம் அணுமின் நிலையப் பிரச்சினையால் தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் நிலவும் அதிருப்தி, வட மாவட்டங்களில், குறிப்பாக காதல் நாடக திருமணத்தை எதிர்க்கும் பா.ம.க. வின் மீது எடுக்கப்படும் தீவிர நடவடிக்கைகள் போன்றவை எல்லாம் அ.தி.மு.க. அரசுக்கு ''புதிய தலைவலிகளாக'' இருக்கின்றன. இந்தப் புதிய தலைவலி 2011 சட்டமன்றத் தேர்தலின் போது தமிழக வாக்காளர்களிடம் இருந்த ''தி.மு.க. எதிர்ப்பு'' உணர்வை குறைக்கவல்லது என்பதில் சந்தேகமில்லை. ஆகவே ஆட்சிப் பொறுப்பில் மூன்றாவது வருடத்தில் கால் எடுத்து வைக்கும் அ.தி.மு.க. தன் ''தேசிய அரசியல்'' கனவை நிறைவேற்ற, ''எந்தக் கட்சியுடன் கூட்டணி'' வைக்கப் போகிறது, என்ன மாதிரி ஆக்ஷன் பிளானை கையிலெடுக்கப் போகிறது என்பதைத்தான் அரசியல் பார்வையாளர்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள்! ■



# கொங்கை இழந்த ஹொலிவூட் திரை மங்கை

மரபணுப் பரிசோதனைகளும் மார்பு சீரமைப்பு சிகிச்சைகளும் சாதாரண மக்களுக்குச் சாத்தியமா? எமது நாட்டிற்கு ஏற்றதை, எமது கைக்கு அடங்கக் கூடியதை தெரிவு செய்வது எமது பொறுப்பு

'ஈர்க்கிடை புகா இளமுலை மாதர் என்றால் ஈர்க்கு போன்ற சிறுகுச்சி கூட அவளது மார்புகளுக்கிடையே புகாத வண்ணம் பருத்து மதத்த மார்பகங்களை உடைய உமா தேவியார்..' வித்துவானான எமது ஆசிரியர் இரசனையோடு விளக்கிக் கொண் டிருந்தபோது அவன் திடீரென தூ என அசுயையோடு துப்பினான்.

ஒரு கணம் திகைத்துவிட்டோம். விடயம் புரிய கொல்லெனச் சிரித்தோம். பனம் பழம் விழுங்காலம். ஆவென வாய் திறந்து இரசனையோடு கேட்டுக் கொண்டிருந்தபோது அவனது வாயில் இலையான் புகுந்து விட்டது.

எங்களுடன் சேர்ந்து ஆசிரியரும் சிரித்தார். அந்தப் பதின்ம வயதுகளிலே பெண்களின் மார்பகங்கள் பற்றிய கற்பனையும் இரசனையும் கலந்த படிமம் எங்கள் மனதில் விழுந்துவிட்டது. எங்களைச் சொல்லி என்ன? மாணிக்கவாசகரே இறைவியின் அங்கங்களில் கிறங்கியிருக்கிறாரே எனச் சமாதானம் கொள்ளலாம்.

## விலைமதிப்பற்ற சொத்து

அவ்வாறு இருக்கையில் ரதியென அழகான மார்பகங்களையுடைய பெண்மணிக்கு தனது உறுப்பு பற்றி எந்தளவு பெருமை இருந்திருக்கும்.

''எனது மார்பகங்கள்தான் எனது மிகப் பெரிய அம்சம்..'' அண்மையில் இங்கிலாந்தில் செய்யப்பட்ட ஆய்வு ஒன்றில் 5 பெண்களில் ஒருவர் இவ்வாறு பெருமையோடு கூறியிருக்கிறார்களாம். இங்கிலாந்தின் பிரபல பத்திரிகையான The Sun தனது மே 9ஆம் திகதிக் கட்டுரையில் இக்கருத்தை வெளியிட்டிருந்தது.

ஆம் ஒவ்வொரு பெண்ணிற்கும் அது விலைமதிப்பற்ற சொத்தாகத் தான் இருக்கிறது. அதன் அழகு கெடாதிருக்க தாய்ப்பால் ஊட்டுவதையே தவிர்த்து ஏமாந்தவர்கள் ஏராளம். அதன் இழப்பு பேரிழப்பு. உயிரைத் துறப்பதினிலும் மோசமான அனுபவமாக இருக்கும். எட்டிப் பார்க்கும் உடையணிந்து மற்றவர்களை மயங்க வைப்பதுடன், தாங்களும் அதில் கிறங்கவே செய்கிறார்கள். இருந்தபோதும் அதன் மதிப்பில் பெருமை கொள்ளும் அளவிற்கு அதன் நலத்தில் அக்கறை கொள்கிறார்களா என்பது மற்றொரு பிரச்சினையாகும்.



புற்றுநோய்க்கு பலியான தாயார் மர்சலீன் பேட்ரன்ட்டுடன் அஞ்சலினா

இது இவ்வாறிருக்க மே 15இல் The Guardianஇல் வந்த கட்டுரை எம் எல்லோரையும் ஆச்சரியத்தில் மூழ்க வைத்தது. அஞ்சலினா ஜோலி ஒரு பிரபலமான ஆங்கில நடிகை. பல இளசுகளின் கனவுக்கன்னி. ஒஸ்கர் பரிசு பெற்ற நாயகி. மதிப்பிற்குரிய இயக்குனரும் கூட. ஆறு பிள்ளைகளின் தாய். அதில் மூன்று வளர்ப்புக் குழந்தைகள். ஏனைய மூன்றும் நடிகரான துணைவர் Brad Pitt வை இற்குப் பிறந்தவை. அவர் தனது இரு மார்பகங்களையும் சத்திரசிகிச்சை மூலம் அகற்றியிருக்கிறார் என்பது தான் அச்செய்தி.

மருத்துவக் காரணங்களுக்காக, ஆனால் மருத்துவர்களின் நிர்ப்பந்தம் இன்றி, தனது விருப்பத்தின் பேரில் அகற்றியிருக்கிறார். நோய் வந்து விட்டதற்காக அல்ல. நோய் வரக்கூடாது என்பதற்காக மார்பைத் தியாகம் செய்தார். ''அவள் ஒரு துணிச்சலான பெண்'' என வெளியுறவுச் செயலாளர் William Hague இது பற்றிக் கூறியிருப்பது முற்றிலும் உண்மைதான். ஒரு நடிகைக்கு அவரது மார்பகங்களின் கவர்ச்சி மிக அவசியமானது. இதுவே அவரது வாழ்

அறிவியல் களரி



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

வாதாரம். இருந்த போதும் அதை இழக்க நேர்ந்ததை வெளிப்படையாக உலகிற்கு அவரே துணிச்சலோடு அறிவித்திருக்கிறார்.

### மார்பகப் புற்றுநோய்

உலகளாவிய ரீதியில் 1.38 மில்லியன் புதிய மார்பகப் புற்றுநோயாளிகளை 2008இல் மட்டும் கண்டறிந்ததாகச் சொல்லப்படுகிறது.

இலங்கையில் ஒவ்வொரு இலட்சம் பேரில் 25 பேர் மார்பகப் புற்று நோயால் பாதிக்கப்படுகிறார்கள். புற்றுநோய்களால் பெண்களில் ஏற்படும் மரணங்களில் அதிகமானவை மார்பகப் புற்றுநோயினாலேயே ஆகும். ஒவ்வொரு இலட்சம் பெண்களில் 4.7 பேர் மரணிப்பதற்கு மார்பகப் புற்றுநோயே அடிப்படைக் காரணியாக இருக்கிறது. ஏனைய நாடுகளைப் பார்க்கும்போது ஆபிரிக்காவில் ஒவ்வொரு இலட்சம் பேரில் 19.3 பெண்களுக்கும், ஐரோப்பிய நாடுகளில் 89.7 ஆக இருக்கிறது. வளர்ச்சியடைந்த நாடுகளில் ஜப்பானில் மட்டுமே அதன் தாக்கம் குறைவாக இருக்கிறது.

மிக அதிகமானோரைப் பீடிக்கும் புற்று நோயாக இது இருந்தபோதும், அந்நோயால் ஏற்படும் இறப்புகளைப் பொறுத்தவரை இது ஐந்தாம் இடத்திலேயே இருக்கிறது. இதற்குக் காரணம் இன்று மார்பகப் புற்று நோய்க்கு நல்ல மருத்துவம் இருப்பதுதான். ஏனைய பல புற்றுநோய்கள் போலன்றி பூரணமாகக் குணப்படுத்தக் கூடியதாகவும் இருக்கிறது. இருந்தபோதும் நோயாளிகள் காலந் தாழ்த்தி மருத்துவ உதவி பெறச் செல்வதே அநாவசிய மரணங்களுக்குக் காரணமாக இருக்கிறது என்பது மருத்துவர்களின் கணிப்பாகும். ஏனெனில் களப்புற்றுநோய், குதப் புற்றுநோய் போலன்றி மார்பகப் புற்றுநோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிவது சுலபமானது.

இருந்தபோதும் பலரும் இது பற்றி அக்கறை கொள்வதில்லை. மக்களிடையே இந்நோய் பற்றிய விழிப்புணர்வு ஏற்படவேண்டும் என்பதற்காகவே அஞ்சலினா ஜோலி தனது




துணைவர் நடிகர் பிரட் பிற் சகிதம்

சத்திரசிகிச்சை பற்றி ஊடகங்கள் மூலம் உலகெங்கும் பறைசாற்றியுள்ளார். இலட்சக்கணக்கான மக்கள் மனங்கவர்ந்த திரைப் பிரபலங்கள் நோய்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வருவது வரவேற்கத்தக்கது. எமது ரஜினி, ஹிந்திப் பிரபலம் அமிதாப் பச்சன் போன்றவர்கள் போலியோ பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முன்வந்தவர்கள் என்பதைக் குறிப்பிடலாம்.

### ஆரம்ப நிலையில் கண்டறிவது

இந்நோயை ஆரம்ப நிலையில் கண்டறிவது எப்படி? இலங்கை புற்றுநோய் தடுப்புச் சங்கம் சிபார்சு செய்துள்ள ஆலோசனைகள் இவை.

''20 வயது முதல் 40 வயதான பெண்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை மருத்துவ மார்பக பரிசோதனை செய்ய வேண்டும். 40 வயதிற்கு மேல் இது வருடமொருமுறை செய்யப்பட வேண்டும்.

''வலுவான மார்புப் புற்று நோய் வரலாறு உள்ள பரம்பரையில் உள்ள பெண்கள் தமது 35 வயது முதல் வருடாவருடம் மமோகிராம் பரிசோதனை செய்ய வேண்டும். இது வழமையான மருத்துவ மார்பக பரிசோதனைக்கு மேலதிகமாகச் செய்யப்பட வேண்டும்.

''50 முதல் 69 வயது வரையான ஏனைய எல்லாப் பெண்களும் இரு வருடங்களுக்கு ஒரு முறை மமோகிராம் பரிசோதனை செய்ய வேண்டும். ஆயினும் அரச மருத்துவமனைகளில் இதற்கான வசதி கொழும்பு, கண்டி, காலி, பொலநறுவை ஆகிய நகரங்களில் மட்டுமே உள்ளன. தனியார் துறையைப் பொறுத்தவரை கொழும்பு, கண்டி, கம்பஹா, மாத்தறை போன்ற பெரு நகரங்களில் மட்டுமே தற்போது இருக்கின்றன எனத் தெரிகிறது. வட கிழக்குப் பகுதியில் எதுவும் இல்லை என்பதையும் குறிப்பிடலாம்.

சாதாரண மருத்துவப் பரிசோதனையில் கண்டுபிடிப்பதற்கு இரண்டு மூன்று வருடங்களுக்கு முன்னரே மமோகிராம் மூலம் கண்டு பிடிக்கக் கூடியதாக இருக்கிறது. எனவே பெண்கள் இதைக் கூடியளவு பயன்படுத்துவது வரவேற்கத்தக்கது. ஆயினும் இளமார்புத் திசுக்களை பாதிக்கக்கூடும் என்பதால் 35 வயதிற்கு முன்பு செய்யப்படுவதில்லை. அவர்களுக்கு அல்ரா சவுண்ட் ஸ்கான் மூலம் பரிசோதிக்கலாம்.

ஒரு பெண் தனக்குத்தானே சுயபரிசோதனை செய்வது எப்படி என்பதை மருத்துவர்கள் பெண்களுக்கு சொல்லித் தருவது அவசியம். இதன் மூலம் தனக்கு மார்பகப் புற்று நோய் வந்திருக்கிறதா எனக் கண்டறிய முடியும். பத்திரிகைகள், இலத்திரனியல் ஊடகங்கள், இணையம் போன்றவற்றில் இது பற்றிய தகவல்கள் ஏராளமாகக் கிடைக்கின்றன.

மேலை நாடுகளில் மமோகிராம் செய்யப்படுவது கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது. ஆனால் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் தாங்களாகவே செய்தால்தான் உண்டு. அல்லது வேறு நோய்களுக்காக மருத்துவரிடம் செல்லும்போது ஆலோசனை சொல்லக்கூடும். கட்டாயமும் இல்லை, அதற்கான வசதி நாடு பூராவும் இல்லை என்பதும் துர

திர்ஷ்டமே.

மருத்துவர்கள் செய்யும்படி ஆலோசனை கூறினால் கூட பெரும் பாலானவர்கள் தட்டிக் கழித்துவிடுகிறார்கள். நோய் பற்றியும் அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் பற்றியும் போதிய விழிப்புணர்வு இல்லாமையே இதற்குக் காரணம்.

அஞ்சலினா ஜோலி ஏன் மருத்துவப் பரிசோதனைக்குச் சென்றார்?

அவரது தாய் இந்த நோயோடு போராடினார். தனது 59ஆவது வயதிலே மரணத்தைத் தழுவவும் நேர்ந்தது.

ஆம் இந்த நோய் வருவதற்கு பரம்பரை அம்சமும் ஒரு காரணம்தான். அதீத எடை, உடற் பயிற்சி அற்ற வாழ்க்கை முறை, மதுபாவனை, தவறான உணவுப் பழக்கங்கள் போன்ற பல ஏனைய காரணங்களும் உள்ளன. தனது அம்மாவிற்கு இந்நோய் வந்ததால் தனக்கும் இது வரலாம் என சந்தேகித்தபோது அதைப் பற்றி அறிவதற்கான பரிசோதனையை நாடினார்.

## மரபணுப் பரிசோதனைகள்

மார்பகப் புற்றுநோய் பரம்பரையில் வருவதற்கு அடிப்படைக் காரணங்களான மரபணுக்கள் BRCA 1 BRCA 2 ஆகும். உண்மையில் புற்றுக் கட்டிகள் ஏற்படுவதை இந்த மரபணுக்கள் தடுக்கின்றன. இந்த மரபணுக்களில் ஏற்படுகிற பிறழ்வுகளே புற்றுநோய் தோன்றுவதற்குக் காரணம் எனலாம். நூறுக்கு மேற்பட்ட பிறழ்வுகளை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளார்கள். ஆனால் இந்த மரபணுக்களில் பிறழ்வு ஏற்படுவது குறைவு எனலாம். 500 பேரில் ஒருவருக்கு ஏற்படலாம். அவ்வாறு பிறழ்வு



பிரட் பிற்றும் அஞ்சலினாவும் பிள்ளைகளுடன்

ஏற்பட்ட அனைவருக்கும் மார்பகப் புற்றுநோய் நிச்சயமாக வரும் என்றும் சொல்ல முடியாது. மேற்கூறிய பிறழ்வுகள் மார்பகத்தில் மட்டுமன்றி சூலகம் மற்றும் பலோப்பியன் குழாயிலும் புற்று நோயை ஏற்படுத்த வல்லவை.

1994இல் இந்த மரபணுக்களை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். எவரும் ஆய்வுகூடத்தில் பரிசோதித்துப் பார்க்கும் வசதியானது சுமார் 15 ஆண்டுகளாகக் கிட்டியுள்ளது. இலங்கையில் கூட இதனைச் செய்து கொள்ள முடியும். வேறு மரபணுக்களும் மார்பகப் புற்றுநோயுடன் தொடர்புடையனவாக இருக்கின்றன. TPS3 மற்றும் PTEM ஆகிய மரபணுக்கள் முன்பு கூறியவை போலத் தீவிர பாதிப்பை ஏற்படுத்துவதில்லை.

## சிகிச்சை

மரபணுப் பரிசோதனைகளில் அஞ்சலினா ஜோலிக்கு புற்றுநோய் வருவதற்கான சாத்தியம் 85 சதவிகிதம் இருப்பதாகச் சொல்லப்பட்டது. இருந்தபோதும் அதற்காக ஒரே தீர்வு இரு மார்புகளையும் அகற்றுவதுதானா?

நிச்சயமாக இல்லை. ஒவ்வொருவரதும் உடல் நிலை, தனிப்பட்ட தேவைகள் மற்றும் விருப்பப்படி சிகிச்சை முறை மாறலாம். மார்பகற்றும் சிகிச்சைக்குப் பதிலாக மருத்துவக் கண்காணிப்பின் கீழ் தொடர்ந்து இருந்து பரிசோதனைகளை மேற்கொண்டால் ஆரம்பநிலையிலேயே நோயை இனங்காணலாம். அவ்வாறாயின் சுலபமாகச் சிகிச்சை அளிக்கலாம். பூரண சுகமும் பெறலாம்.

தற்போதைய நவீன சிகிச்சை முறையில் புற்றுநோய் ஏற்பட்டால் கூட பாதிக்கப்பட்ட மார்பை அகற்றுவது அவசியமல்ல. சத்திரசிகிச்சை, கதிர்ச் சிகிச்சை, கீமொ திரப்பி எனப்படும் புற்று நோய்க்கலங்களை அழிக்கும் மருந்துகள் எனச் சிகிச்சை முறைகள் பல. ஒரு சிகிச்சையோடு மற்றொன்றை கலப்பதும் உண்டு. எவ்வாறாயினும் மார்பை அகற்றுவது இன்றைய சிகிச்சை முறையில் முக்கிய அம்சம் அல்ல என்பதைக் கூற வேண்டும்.

இருந்தபோதும் அஞ்சலினா ஜோலி இந்தத் தெரிவை எடுத்தார். நோய் வந்தபொழுது கூட அகற்றாமலிருக்கும் இன்றைய நிலையில் நோய் வரலாம் என்ற சந்தேகத்தில் மார்புகளை அகற்றியிருக்கிறார். அவசியமற்ற சிகிச்சை எனலாமா? நாம் அவ்வாறு முடிவுகட்ட முடியாது.

நோய் வருமா வருமா என தினமும் பயத்தோடு வாழ்வதை விட இது மேலானது என அவர் தீர்மானித்திருக்கலாம். நோய் வந்தால் அதற்கான சிகிச்சைக்காக நீண்ட காலம் மன உழைச்சலோடு வாழ்வதைவிட இது நல்லதெனத் தீர்மானித்தாரா? எவ்வாறாயினும் தீர்மானிப்பதற்கு கடுமையான முடிவை எடுத்தார். மார்பகங்களை இழந்த பின்னரும் அவர் அதையிட்டுக் கவலை அடையவில்லை என்பது முக்கியமானது. தனது பிள்ளைகளுக்காக இதைச்

செய்தேன் என்கிறார்.

''எனது பிள்ளைகள் இப்போது அம்மாவை இழப்போமா என்ற சஞ்சலத்தில் இல்லை. மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். கூர்ந்து பார்த்தால் மட்டுமே தெரியக் கூடிய மறு இருப்பதை தவிர அவர்களால் தங்கள் அம்மாவில் எந்த மாற்றத்தையும் காண முடியாது. என்னிடமிருந்து அவர்கள் அந்நியப்பட எதுவுமே இல்லை''

## முற்று முழுதான பாதுகாப்பா?

இந்தச் சிகிச்சை மூலம் முற்று முழுதாக மார்பகப் புற்றுநோயிலிருந்து அஞ்சலினா தப்பிவிட்டாரா? மார்பைத் தாரை வார்த்தபோதும் மார்புப் புற்றுநோய் வராது என முழுமையாக நம்பிக்கை கொள்ள முடியாது. சத்திர சிகிச்சையின் போது தப்பியிருக்கக் கூடிய ஓரிரு நுண்ணிய திசுகளிலிருந்து வரலாம். ஆனால் அதற்கான சாத்தியம் 5 சதவிகிதம் மட்டுமே.

அதைத் தவிர சூலகப் புற்று நோய் வருவதற்கான சாத்தியம் இருக்கிறது. அவரது சகோதரி இறந்ததும் சூலகப் புற்று நோயால்தான். இருந்தபோதும் அஞ்சலினா ஜோலிக்கு சூலகங்கள் நீக்கப்படவில்லை. ஆனால் அதை நீக்குவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. அதை நீக்கினால் பெண் ஹோர்மோன் சுரப்பதில் பிரச்சினைகள் ஏற்படும். அது இரவு வியர்வை, படபடப்பு, பாலியல் நாட்டக் குறைவு, மனப்பதற்றம் போன்ற சாதாரண விளைவுகள் முதல் ஒஸ்டியோபொரோசிஸ், இருதய நோய்கள், மனவிரக்தி போன்ற தீவிர பிரச்சினைகளைக் கொண்டுவரலாம். எனவே தான் அதைச் செய்யவில்லை எனத் தோன்றுகிறது.

பழைய அம்மா என்று சொல்லும் போது மார்பை இழந்த அம்மாவாக அவரது தோற்றம் இல்லை. மார்பகச் சருமம் இயற்கையானதாக தோற்றமளிக்கிறது. முலைக் காம்புகளுக்கு உள்ளது உள்ளபடியே இருக்கிறது. அதற்கு உள்ளேயுள்ள மார்பகத் திசுவிற்குப் பதிலாகவே செயற்கையானது உள்ளது.

> **மார்பை இழந்த அம்மாவாக அவரின் தோற்றம் இல்லை. மார்பகச்சருமம் இயற்கையானதாக தோற்றமளிக்கிறது. முலைக் காம்புகளும் உள்ளது உள்ளபடியே இருக்கிறது. அதற்கு உள்ளேயுள்ள மார்பக திசுவிற்குப் பதிலாகவே செயற்கையானது உள்ளது. மார்பை இழக்கவும் அதை முன்னையது போல் உருவாக்கவும் அவருக்கு பணம் இருக்கிறது**

அவருக்குப் பணம் இருக்கிறது. மார்பை இழக்கவும், அதை முன்னையது போல உருவாக்கவும் அவருக்குப் பணவசதி இருக்கிறது எனலாமா?

## இதற்கான செலவு

இந்தப் பரிசோதனைகளும் சிகிச்சைகளும் இலவசமானதல்ல. மிகுந்த பணச் செலவுடையவை. BRCA 1 BRCA 2 ஆகிய பரிசோதனைகள் ஒவ்வொன்றும் 3000 அமெரிக்க டொலர் செலவாகும். இலங்கையில் இன்னமும் அதிகம்.

இரு மார்புகளையும் அகற்றி மீள செயற்கை மார்புகளை உருவாக்க அஞ்சலினா எவ்வளவு செலவழித்தார் என்பது தெரியவில்லை. ஆனால் சென்ற வருடம் Emma G Keller என்பவர் தனக்கு இவ்வாறான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை பற்றி The Guardian இல் எழுதியிருந்தார். தனது mastectomy and reconstructive surgery க்காக இன்சுரன்ஸ் கம்பனி $250,000 செலவிட்டது என்றார்.

''நான் செத்தாலும் பரவாயில்லை. இதற்குச் செலவளிக்கிற காசில் என்ரை மகளுக்கு ஒரு சொகுசான வீடும் கட்டி, நல்ல சீதனம் கொடுத்து கொழுத்த உழைப்புள்ள மாப்பிளையை எடுத்துப் போடுவன்'' என்றார் இதைக் கேட்ட பெண் ஒருவர்.

''பணக்காரச் சிறுக்கி தனது புகழுக்காக எதை வேண்டுமானாலும் செய்வார்'' என்றான் மற்றொரு நண்பன் கண்களை குறும்பாகச் சிமிட்டிக் கொண்டே. அஞ்சலினாவின் சிகிச்சைக்கான செலவு எவ்வளவு இருந்திருக்கும் என்பதை மனதில் கணக்குப் பார்த்தபடி கூறினார். என்னால் அவருடன் உடன்பட முடியவில்லை. அஞ்சலினா பணக்காரி என்பது உண்மைதான். ஆனால் சற்று பொது நல அக்கறை கொண்டவர். பல தன்னார்வ நிறுவனங்கள் ஊடாக பாதிக்கப்பட்ட சிறார்களுக்கும் பெண்களுக்கும் உதவியிருக்கிறார். நோயென்று சோர்ந்துவிடாது தனது ஆரம்ப சத்திரசிகிச்சை முடிந்த கையோடு கொங்கொ நாட்டிற்குச் சென்று அங்கு நடைபெறும் மனிதாபிமான நடவடிக்கைகளில் பங்கு பற்றியிருக்கிறார்.

இவையும் புகழுக்காகத்தானே என நீங்கள் சொல்லக்கூடும். இன்னும் சிலர் சாதாரண மக்களுக்கு எட்ட முடியாத மரபணுப் பரிசோதனை, மற்றும் மார்புச் சீரமைத்தல் சத்திர சிகிச்சை போன்றவற்றுக்கு விளம்பரம் கொடுப்பதாகவும் விதண்டாவாதம் பேசக்கூடும்.

''பலவித தேர்வுகள் இருப்பதை இதை வாசிக்கும் பெண்கள் புரிந்து கொள்வார்கள். மார்பக அல்லது சூலக புற்றுநோய்க்கான குடும்ப வரலாறு உள்ள பெண்கள் இது தொடர்பான தகவல்களையும், மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற வேண்டும் என ஊக்குவிக்க விரும்புகிறேன். அவற்றின் அடிப்படையில் உங்களுக்கான தேர்வைச் செய்ய வேண்டும்''.

இதுதான் அவரது அறிக்கையின் கடைசி அம்சம். ஆம் இதைத்தான் செய் என அவர் குறிப்பாக எதையும் சொல்லவில்லை. விடயங்களை மட்டும் சொல்லிவிட்டு, அவரவர் தேர்விற்கு விட்டிருக்கிறார்.

எமது நாட்டிற்கு ஏற்றதை, எமது கைக்கு அடங்கக் கூடியதை தேர்வது எமது பொறுப்பு. அவ்வளவுதான். ■

## கடைசிப் பக்கம்

# எதிர்காலம் வரை பொறுத்திருக்க...!

எதிர்காலம் வரை பொறுத்திருக்க பெண்களுக்குரிய பாதுகாப்பு, சமூக இருப்பு, பொருளாதார வளம் என்பன அவர்களின் வாழ்விடம் மற்றும் உடைமைகளை மையமாகக் கொண்டது. சொந்தமான நிலமோ இருப்பிடமோ பெண்ணிற்கும் அவளைச் சார்ந்தோருக்கும் நிலையான ஓர் சமூகப் பெறுமானத்தைப் பெற்றுக்கொடுக்கிறது. குறிப்பாக யாழ்ப்பாண தேச வழமைச் சட்டத்தின் தோற்று வாயோடு பெண்களுக்கு வழங்கப்படும் சீதனம், காணி உடைமை பங்கீடு போன்றவை காலா காலமாக தீர்மானிக்கப்பட்டு வந்திருக்கிறது.



சரோஜா சிவச்சந்திரன்

இதுமட்டுமன்றி காணி, சொத்துடைமை என்பன பெண்களின் வாழ்வியல் திருமணத்துடன் கூடிய ஓர் உறுதிச் சான்றாகப் பேணப்பட்டு வருவது யாவரும் அறிந்தது. போரின் பின்னரான நல்லிணக்கம் மற்றும் மீள்குடியேற்ற நிலைமைகளில் காலாகாலம் சடுதியாக ஏற்படுத்தப்படும் அரசின் அறிவுறுத்தல்கள், நில உடைமையாளர்களுக்கு பெரும் அதிர்ச்சியையும் தமக்குச் சொந்தமான காணிகளை மீட்டெடுப்பதில் சிரமங்களையும் காட்டி நிற்கின்றன.

வலிகாமம் பலாலி இராணுவ முகாமை அண்டிய உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து 1990 ஆம் ஆண்டில் இருந்து ஒட்டுமொத்தமாக வெளியேற்றப்பட்ட 23,351 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் அவ்வெல்லைப் பிரதேசத்தில் 14 முகாம்களில் அகதிகளாக 23 வருடங்களாக வாழ்ந்து வருகின்றனர். ஓரிரு கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியேற்றப்பட்ட போதிலும் ஏனையோர் தமது காணிகளுக்கு மீண்டும் செல்வதற்கு எடுத்த முயற்சிகள் பல. 2013 ஏப்ரில் 29ஆம் திகதி அரசின் சடுதியான அறிவித்தல் மூலம் உயர் பாதுகாப்பு வலயத்தில் 6,321 ஏக்கர் நிலமும் அரசுடைமையாக்கப்படும் அல்லது அரசினால் சுவீகரிக்கப்படும் என்ற அறிவித்தலினால் பாதிப்படைந்த மக்கள் கொதித்தெழுந்துள்ளனர். தமிழ் உணர்வாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

குடும்பங்களின் இருப்புடன் தொடர்புடைய சமூக அரசியல் சிதறல்கள், அரசியல் செய்திகள் அர்த்தமற்றதாகிவிட்ட நிலையில், தவிக்கும் மக்கள் அகதி முகாம்களில் பிறந்து 23 வயதில் திருமண வயதை எட்டி நிற்கும் இளம் பெண் பிள்ளைகள் அவர்களுக்காக காலாகாலமாக சேமித்து சீதனத்திற்காக வைத்திருந்த காணி, வீடுகள் இன்று பறிபோகின்றன.


சீதனத்திற்காக சொத்துகள் தம்வசம் இருந்தும் திருமணத்தை நிறைவேற்றிவைக்க முடியாது தவிக்கும் பெண்கள் தமது நீண்ட கால அல்லது வாழ்க்கையில் என்றோ ஓர் நாள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்வோம் என்ற ஆதங்கத்தில் நாட்களை ஓடவிட்டு நலிந்து போன பெண்கள், சிறுவர்கள் பலர். வலிகாமத்தில் உயர் பாதுகாப்பு வலயம் என வரிந்து எழுப்பப்பட்ட மக்கள் வன்னி நிலப்பரப்பில் இருந்து இடம்பெயர்வு காரணமாக தமது வீடு, காணி,விவசாய நிலப்பரப்புகளை விட்டு வெளியேறி மக்கள் மீள்குடியேற முடியாதபடி பல கேள்விகள், காணிகளுக்கான ஆவணங்கள் தொலைந்துபோன நிலையில் தமது சொந்தக் காணிகளையே உரிமை கோரமுடியாத நிலையில் பெண்கள். போரில் இறந்த கணவர், காணாமல் போனவர்கள் பெயரில் பதிவுசெய்யப்பட்ட காணிகளில் பெண்கள் மீண்டும் தமக்கு உரித்துடைமை ஆக்குவது ஏற்படும் சட்டச் சிக்கல்கள். இவற்றைத் தீர்ப்பதற்காக பல நிறுவனங்கள் சட்ட ரீதியில் ஆலோசனை வழங்கிய போதும் இடம்பெயர்ந்த எல்லோருக்கும் இவ்வாய்ப்புக் கிட்டியதாக இல்லை.

புலம்பெயர்ந்து சென்றவர்கள் போராளிகள் என இவர்களுக்குச் சொந்தமான காணிகள் உரிமை கோரப்படாது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. மீள்குடியேற்றம் என்ற பெயரில் காணிகளுக்கு உரித்தல்லாதோர் குடியேற்றப்படும் நிலையில் உரிமையாளர்கள் வெளிமாவட்டங்களிலும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கி வாழும் நிலை. இன்று நிலங்களை சுவீகரித்துக் கொள்வதில் அரசு அதி தீவிரம் காட்டுகிறது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கக் குழுவின் சிபாரிசுகளுக்கு ஏற்றபடி மீள்குடியேற்றம் விரைவாக நடைபெறவேண்டும் என்பது அரசு கவனித்ததாகத் தெரியவில்லை. அதிகாரத்தை தக்க வைக்கும் அரசின் காணிக் கொள்கைகள் மக்களுக்கு நிவாரணத்தை வழங்கப்போவதில்லை. தமது தொழில்வாய்ப்புகள், குழந்தைகளின் கல்வி, சுகாதார வசதிகள் போன்ற இன்னோரன்ன தேவைகளை, இருப்புகளைச் சந்தித்த மக்கள் தமது ஆரம்பத்தின் நிலையை புரியாதவர்களாக எதிர்காலத்திற்காகப் பொறுத்திருக்கின்றனர். ■


இஷ்டம்போல அள்ளி நொறுக்கிட
இனிய தருணங்களில் இன்றியமையாத டேவிட் தயாரிப்புகளை
இன்றே வாங்கி சுவைத்து மகிழுங்கள்
தனிச்சுவை என்பது இதுதானோ
மீண்டும் மீண்டும் உண்ணத்தோன்றும்
டேவிட் நிலக்கடலை சுவையின் சாரம்
GIVING YOU ONLY THE BEST SINCE 1962
DAVID GRAM STORES
214, Gas works Street, Colombo 11.
Tel: 0112434601, 0112335024
Fax: 2335061 Email: davidgramsl@gmail.com
STORES:
No. 16, Albion Place, Colombo 09.
Tel: 011 2696706, 011 2692718 Fax: 0115358024, 0112636303
BRANCHES:
40, Sri Sangaraja Mawatha, Colombo 12, 14, Front Street, Colombo 11, 338, Baseline Road, Colombo 9, 20, Basilika Road, Ragama, 2/b, James Peries Mawathe, Colombo 2, 157/1, Stanley thilakarathne Mawatha, Nugegoda, 33, St. Joseph Street, Colombo 14, 222, Oldcott Mawatha, Colombo 11, 15, Galle Road, Dehiwala, 463/A, 2nd Division, Maradana.


NAIDU MAHAAL
NAIDU MAHAAL
Wedding Sarees, Bridal Sarees, Bridal Cholis, Salwar Kameez, Sherwani, Gents Wear, Kids Wear.
அனைத்துவிதமான
ஆடைகளுக்கும் 15% - 20%
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
No-52, W.A. Silva Mawatha, Colombo-06.
Tel: 011-2588664, E-mail: naidumahal@yahoo.com, Web: www.naidumahaal.lk




Printed and published by Express Newspapers (Ceylon)(Pvt)Ltd,at No.185,Grandpass road,Colombo -14, Sri Lanka.